


ஸ்ரீமதி விச்வேச்வரம்மா
மாஸ்டர் கருட்

பாடிய

**புதிய பஜனை கீதங்கள்**

பாம்பாபரணன் / அடியினைப் பணிவையே } N. 18260

**முன் வெளியீடு**

காதல் இதே / கொஞ்சும் மொழிகள் } N. 18191

ஓர் நவ உலகம் / 2-பாகங்கள் } N. 18202

எல்லா "எச். எம். வி." வியாபாரிகளிடமும் கிராமபோன் கிடைக்கும்

## "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டுகள்

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட், மதராஸ்


ப்ளாண்டர்ஸ்
ஹை-க்ரோன்
தேயிலை
சிக்கனமானது
PLANTERS
RED SPECIAL
BLEND DIAMOND
SOUTH INDIAN LEAF TEA
THE PLANTERS COMPANY
PLANTERS
LOTUS
BRAND
SOUTH INDIAN
BLEND
DUST
PLANTERS
LOTUS
BRAND
DUST
RENOWNED
FOR
ITS GOLDEN LIQUOR
AND
DELICIOUS FLAVOUR
THE PLANTERS COMPANY
பாக் செய்யப்பட்ட அந்த உள்ள புதிய மணத்தோடு கூடிய பிளான்டர்ஸ் லோட்டஸ், கெப்பு டைமெண்ட், ஈக்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திலும் புது அன்பர்களை பெற்று வருகின்றன.
உயர்மான நீலகிரியில் வளர்க்கப்பட்டு, தேர்ச்சிபெற்றவர்களின் மேற்பார்வையின் பதப்படுத்தியதுமான இந்த உயர்ந்த சக மக்கள் வாங்குவதில் சிக்கனம் ஏற்படக்கூடிய விலைகளில் கிடைக்கின்றன.
வீடுகளில் பழக்கமாக உபயோகிக்க இவைகளுக்கு மிஞ்சியது எதுவுமில்லை.
இன்றே அவைகளை உபயோகித்துப் பார்க்கத் தகுந்தவை.
தி ப்ளாண்டர்ஸ் கம்பெனி லிட்.
கூடலூர், நீலகிரி தென் இந்தியா.
P.K. 14 TM

# கல்கி
## பொருளடக்கம்

மலர் 4 இதழ் 45

1945 ஜூன் 17

பார்த்திப ஆனி 4



* கல்கியில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு சந்திரகிரி என்னுமிடத்தில் வாழ்ந்த நல்லமநாயக்கர் என்னும் வீரர் விஜயநகரத்து மகாராஜாவைப் பார்ப்பதற்காகச் சென்றார். அங்கே அரண்மனைக் கோட்டை வாசலில் காவல் புரிந்த வீரமல்லனுடைய தலையை வெட்டி, ஈட்டி முனையில் செருகிக்கொண்டு போய் மகாராஜாவைப் பேட்டி கண்டு அவரிடம் விருதுகளைப் பெற்றார்.* தாம் கொன்ற மல்லனின் எட்டு புதல்வர்களையும் அவர் காப்பாற்றி வளர்த்த காரணத்தினால் எட்டப்ப நாயக்கர் என்று அவருக்குப் பட்டப் பெயர் வந்தது. அவருடைய வம்சத்தார் பிற்பாடு தெற்குச் சீமைக்கு வந்து திருநெல்வேலி ஜில்லாவில் தங்களுக்கென்று ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். எட்டப்ப வம்சத்தார் ஸ்தாபித்த ஊர் எட்டயபுரம் என்று பெயர் பெற்றது.

சமீப காலத்தில் அதாவது சென்ற நூறு வருஷத்துக்கு மேலாகத் தமிழ்ப் புலவர்களுக்கும் சங்கீத சாஹித்ய வித்வான்களுக்கும் ஆதரவளித்துப் புகழ் பெற்ற எட்டயபுரமானது அவ்வூரில் பாரதியார் பிறந்ததினால் தமிழ் மக்களின் புனித ஸ்தலமாக ஆகிவிட்டது. அத்தகைய எட்டயபுரத்தின் வீதிக் காட்சி ஒன்றைத்தான் நாம் அட்டைப் படத்தில் காண்கிறோம். மரங்களும் மர நிழலும் வெறும் உருவாகக் காட்சியளித்த எட்டயபுரத்தை இம்மாதம் 2வ 3வ களில் ஒரே அல்லோல கல்லோல மாக்கிய வைபவத்தைப் பற்றி நேயர்கள் இந்த இதழில் வேறும் படிக்கலாம்.



# சங்கீத சபா, மாயவரம்

★

17-6-45 ஞாயிறு மாலை 7-மணிக்கு

அடையார் கலாக்ஷேத்திரம்

ஸ்ரீ ருக்மணி தேவியின் சிஷ்யைகள்


**ஏ. சாரதா & எஸ். வி. லலிதா**

இவர்களின் பரத நாட்டியம் நடைபெறும்

டிக்கட் விபரம்:

ரூ. 2—4—0, ரூ. 1—2—0 & 0—9—0

அமைச்சர்: B. சோமசுந்தரம்



கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 15

# என்ன சேதி?

## நல்வரவாகுக!

இருதயமானது மகிழ்ச்சியினால் நிரம்பியிருக்கும்போது வார்த்தைகள் சுலபமாகக் கிடைப்பதில்லை. ஆகவே, நமது அரும் பெரும் தலைவர்களான மௌலானா ஆஸாத், ஜவாஹர்லால்ஜி, வல்லபாய் பட்டேல்ஜி முதலியவர்களை என்ன வார்த்தைகளைக் கூறி வரவேற்பது என்று தெரியாமல் தவிக்க வேண்டியதாயிருக்கிறது. அங்குமிங்கும் தேடிக் கடைசியாக அந்தப் பழைய சொற்றொடரையே கண்டுபிடிக்கிறோம். "சின்னச் சிறைச் சாலைக்குள்ளிருந்து இந்தியா தேசமாகிய பெரிய சிறைச் சாலைக்கு" நமது தலைவர்களை மனப்பூர்வமான மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். இந்தப் பெரிய சிறைச் சாலையைக் கூடிய சீக்கிரத்தில் சுதந்திர பூமியாகச் செய்யும் பொறுப்பு அவர்களுடையதே என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தலைவர்களின் வரவு நல்வரவாகுக! அவர்கள் விடுதலை பெற்று வெளி வந்த முகூர்த்தத்தினால் இந்திய நாடும் விடுதலை பெறுக!

## வெற்றி பெறுக!

தமிழ் நாட்டின் தேசபக்தக் கவிஞருக்கு அவர் பிறந்த எட்டயபுரத்தில் ஞாபகச் சின்னம் அமைக்க ஏற்பாடு நடந்து வருகிறது. அதேபோல் தமிழ் நாட்டின் தேசபக்த வீரருக்கு அவர் பிறந்து வளர்ந்த தூத்துக்குடியில் ஞாபகச் சின்னம் அமைக்க ஒரு பெரு முயற்சி ஆரம்பித்திருப்பது அறிந்து மகிழ்கிறோம். நமது காலத்தில் தேசத்துக்காகத் தியாகத் தொண்டு புரிந்த தமிழ் நாட்டு வீரர்களுக்குள்ளே ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை தலைசிறந்த வீரர். பாரதியாரின் கவிதைக்கு விஷயந் தந்த வீரர் அவர். அத்தகையவருடைய ஞாபகார்த்தமாகச் சுதந்திர இந்தியாவில் "வீரர் சிதம்பரம் பிள்ளை" என்ற பெயரால் ஒரு பிரம்மாண்டமான கப்பல் ஓடவேண்டும் என்று ராஜாஜி கூறினார். அதோடு, அம்மகா வீரர் பிறந்த ஊரில் அவருடைய ஞாபகச் சின்னம் ஒன்று விளங்குவதும் அவசியந்தான். தூத்துக்குடி தேசபக்தர்கள் ஆரம்பித்திருக்கும் முயற்சி கூடிய சீக்கிரத்தில் பூரண வெற்றியடைவதாக!


## ரத்துச் செய்க!

இந்தியாவில் எந்த மூலையில் ஏழைகள் பசி பட்டினியால் கஷ்டப்பட்டாலும், எங்கே தொழிலாளிகள் அநீதியாக நடத்தப்பட்டாலும், பம்பாயில் பொது உடைமைக் கட்சியாரால் திறமையாக நடத்தப்படும் "பீபிள்ஸ் வார்" பத்திரிகையில் அதன் விவரங்களைக் காணலாம். இந்தக் கன்றாவியான விஷயங்களை ஜனங்கள் படித்து மனவேதனையடையவேண்டும் என்றெண்ணியோ என்னவோ ஐக்கிய மாகாண கவர்னர் மேற்படி பத்திரிகையைத் தம் மாகாணத்தில் வரக் கூடாதென்று உத்தரவிட்டுவிட்டார். இதற்கு அவர் கூறிய காரணம், "கார்வால் படையைச் சேர்ந்த சிப்பாய்கள் பதினைந்து வருஷத்துக்கு முன்னால் பட்டாணியர் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மறுத்த சம்பவம்" பற்றி இப்போது அப்பத்திரிகையில் வந்திருந்த கட்டுரையாகும். இந்தத் தடையுத்தரவு அநீதமானது என்று நாடெங்கும் கண்டனம் செய்யப்படுகிறது. முக்கியமாகக் கண்டனம் செய்ய வேண்டியவர்கள் இந்தியப் படை வீரர்கள். ஏனெனில் இந்திய சேனை வீரர்கள் தேசபக்தியற்றவர்கள் என்றும், "சோற்றுப் பட்டாளம்" என்றும் சொல்லுவது எவ்வளவு பிசகு என்பது மேற்படி சம்பவத்திலிருந்து வெளியாகிறதல்லவா?— இதை எண்ணியாவது ஐக்கிய மாகாண கவர்னர் மேற்படி அர்த்த மற்ற உத்தரவை உடனே ரத்துச் செய்வாராக!

# மனோராஜ்யம் நிறைவேறுமா ?



-உம்மன்



ஊஸ்மான் முதலிய நிர்வாகசபை அங்கத்தினர்கள் அவர்களுக்கு வழிவிட்டு விலகிக்கொள்கிறார்கள்
காங்கிரஸ் தலைவர்கள் பதவிக்கு வந்ததும் புதிது புதிதான சட்டங்கள் பிறக்கின்றன.
மதுவிலக்கு
அநியாய வரிகள் ரத்து
எல்லோருக்கும் வயிறார உணவு போதுமான உடை
ஜூன்மீ 14உ மாலை 7-45-க்கு வைஸ்ராய் வேவலின் பிரசங்கத்தை ரேடியோவில் கேட்ட ஸ்ரீ பொதுஜனம் மேற்கண்டபடியெல்லாம் மனோராஜ்யம் செய்துகொண்டிருக்கிறார். அவருடைய மனோராஜ்யம் நிறைவேறுமா?

# காப்பாற்றினார்!

வைஸ்ராய் வேவல் காப்பாற்றினார்! இந்தியா தேசத்தின் முப்பத்தெட்டு கோடி மக்களும் பைத்தியம் பிடித்துப் பாயைச் சுரண்டாதபடி காப்பாற்றினார்!

மகானுபாவர் ஆகாச விமானத்திலேறி ஆங்கில நாடு சென்றாலும் சென்றார்!

அது முதல் நேற்று வரையில் அவர் போன காரணம் பற்றியும், அவர் கொண்டுவரப் போகும் திட்டம் பற்றியும் நமது பத்திரிகைகளில் வந்த பத்தி பத்தியான செய்திகளை, சித்திர விசித்திரமான செய்திகளைப் படித்துப் படித்து இந்திய மக்களுக்கெல்லாம் ஏறக்குறைய முக்காலே மூன்று வீசம் பங்கு மூளை குழம்பிப் போய் விட்டது.

உதாரணத்துக்கு ஒரு செய்தியை ஞாபகப்படுத்திக் கொள்வோம்:—

“நியூ டில்லியில் கிளைகள் அடர்ந்து நிழல் தந்த ஒரு தென்னை மரத்தின் அடியில் நின்று கொண்டு மூக்குக் கண்ணாடிக்காரர்கள் இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து நிச்சயமாகவும் நம்பக் கூடியதாகவும் ஊகிக்கப்படும் விஷயம் என்னவென்றால், இந்தியாவுக்கு வேவல் ஒரு அரசியல் திட்டத்தைக் கொண்டு வரப்போகிற விஷயம் அநேகமாக வாஸ்தவமில்லை என்று சொல்வதற்கில்லையென்றாலும், ஒரு வேளை கொண்டு வரலாம் என்பதற்கும் ஆதாரம் கொஞ்சம் அவ்வளவாக இல்லையாதலால், மேற்படி வேவல் திட்டமானது ஒரு வேளை இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்த்து வைத்தாலும் வைக்கலாம் அல்லது தீர்த்து வைக்காமலிருந்தாலும் இருக்கலாம் என்று சொல்லப்படும் வதந்தியில் சிறிதேனும் சந்தேகத்துக்கு இடம் இருக்கும் வரையில் அதைப் பற்றி ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லையென்பது சர்வ நிச்சயமான விஷயம் என்று பஞ்சகனி மலை உச்சியில் விசாரித்ததில் உறுதியாகத் தெரிய வருகிறது...”

இவ்விதம் மேலும் வளர்ந்து கொண்டே போன மேற்படி செய்தியானது பம்பாயிலிருந்து பெஷாவர் வழியாக லண்டனுக்குப் போய் அங்குள்ள “தினசரி அலறல்” என்னும் பத்திரிகையின் ஒரு மூலையில் பிரசுரமாகி, அந்தச் செய்தியை ராய்ட்டர் ஸான் பிரான்ஸிஸ்கோவுக்கு அனுப்பி, அங்கேயுள்ள இந்தியாவின் விசேஷ நிருபர்கள் அதைக் கல்கத்தாவுக்கு அனுப்பி, கல்கத்தாவிலிருந்து அது புது டில்லிக்குப் பிரயாணம் செய்த பிறகு, அங்குள்ள பத்திரிகை நிருபர் மூலம் தனி உரிமை பெற்ற விசேஷச் செய்தியாக வெளியாகி இந்தியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது!

இவ்வளவு சுற்றி வளைத்துக்கொண்டு வரும் தெளிவான செய்திகளை நான் தவறாமல் இரண்டு மாத காலம் படித்து வந்தால், பிறகு மூளை குழம்பிப் போகாமல் தப்ப முடியுமா, பாருங்கள்!

அப்பேர்ப்பட்ட பயங்கரமான அபாயம் இந்திய மக்களை நெருங்கி வந்து கொண்டிருந்த சமயத்தில் இனி மேல் தாமதிக்கக்கூடாது என்பதைப் புத்திசாலியான வேவல் துரை எப்படியோ தெரிந்து கொண்டு நேற்று 14உ வியாழக்கிழமையன்று தமது திட்டம் என்ன என்பதை ரேடியோப் பெட்டி மூலம் வெளியிட்டார். இந்திய மக்களுக்குப் பைத்தியம் பிடித்துப் போகாமல் புண்ணியவான் காப்பாற்றினார்!

• • •

சரி: இவ்விதமாக வெளியாகும் போதே இந்தியாவுக்கு ஒரு நன்மையைச் செய்து கொண்டு வெளியான வேவல் திட்டமானது மற்றப்படி இந்தியாவுக்கு என்ன தருகிறது? அத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?

1. வைஸ்ராயின் இப்போதுள்ள நிர்வாக சபை கலைக்கப்படும். அச்சபையை இப்போது அலங்கரிக்கும் மகானுபாவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள்.

2. புதிய நிர்வாக சபை இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்படும். அதில் சேனாதிபதியைத் தவிர மற்றவர்கள் எல்லாம் இந்தியர்களாயிருப்பார்கள்.

3. இதுவரையில் அன்னியநாட்டு விவகார இலாகா வைஸ்ராயிடம் இருந்தது; அதுவும் இந்திய அங்கத்தினரிடம் மாற்றப்படும்.

4. புதிய நிர்வாக சபையில் ஹரிஜனங்கள் அல்லாத ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமமான எண்ணிக்கையில் இருப்பார்கள்.

5. வைஸராயின் விசேஷ அதிகாரம் (அதாவது அபாய சந்தர்ப்பங்களில் தலையிட்டு ரத்துச்செய்யும் அதிகாரம்) அப்படியே இருக்கும். ஆனால் அதைத் தாராளமாக உபயோகப் படுத்தமாட்டேன் என்று வேவல் உறுதி கூறுகிறார்.

6. மேற்கண்டவாறு புதிய நிர்வாக சபை அமைக்கும் விஷயத்தில் தமக்கு யோசனை சொல்வதற்காக வைஸராய் ஜூன் மாதம் 25ல் ஸிம்லாவில் அரசியல் தலைவர்களின் மகாநாடு ஒன்று கூட்டுகிறார்.

7. இந்த மகாநாடு வெற்றியடைந்து புதிய நிர்வாக சபை ஏற்பட்டால் இப்போது கவர்னர் ஆட்சியிலுள்ள மாகாணங்களிலும் மந்திரி சபைகள் ஏற்படும்.

8. மேற்கண்டவாறு ஏற்படும் மத்திய நிர்வாக சபையானது, இந்தியாவுக்கு நிரந்தரமான அரசியல் திட்டம் ஏற்படும் வரையில் இந்தியாவின் ஆட்சியை நடத்தும். அத்தகைய நிரந்தரமான அரசியல் திட்டம் ஏற்படும் பொருட்டு அரசியல் கட்சிகளுக்குள் சமரசம் உண்டு பண்ணவும் முயற்சி செய்யும்.

மேற்கண்டவைதான் வேவல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். இது தற்காலிகமான ஏற்பாடுதான் என்பதையும், நிரந்தர அரசியல் திட்டம் ஏற்படுவதற்கு இது தடையாகாது என்றும் வேவல் வற்புறுத்தியிருக்கிறார்.

இந்தத் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஒப்புக்கொள்வது சாத்தியமாகும் பொருட்டு, சிறையிலுள்ள காரியக் கமிட்டித் தலைவர்களை வேவல் விடுதலை செய்திருக்கிறார்.

இருதரப்பிலும் சில தவறுகள் நடந்திருக்கின்றன வென்றும், அவற்றை மறந்து மன்னித்துவிட வேண்டும் என்றும் கூறி, இந்தியாவின் மேன்மையை முன்னிட்டு எல்லாரும் ஒத்துழைக்க வேண்டுமென்று வேவல் ரொம்பவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

* * *

வேவல் கொண்டு வந்த திட்டம் மேற்கண்டதுதான்.

அதில் சுயராஜ்யம் இருக்கிறதா?

இல்லை!

அது கிரிப்ஸ் திட்டத்தை விட மேலானதா?

அதுவும் இல்லை!

அப்படியானால் அதை என்ன செய்வது?

வேவல் திட்டத்தில் சுயராஜ்யம் இல்லாத போதிலும், அது கிரிப்ஸ் திட்டத்தை விட உயர்ந்ததல்ல என்றாலும், அதைத் தேசம் நிராகரிக்கக் கூடாது என்று நாம் சொல்கிறோம்.

ஏனெனில், வேவல் திட்டத்தில் சுயராஜ்யம் இல்லாமற் போனாலும், சுதந்திரத்தை எட்டிப் பிடிக்கக்கூடிய தூரத்தில் அது இந்தியாவைக் கொண்டு வந்து விடுகிறது.

இந்தத் திட்டத்தைக் கைக்கொண்டு சரியானபடி வேலை செய்தால், ஜப்பான் யுத்தம் முடிகிற சமயத்தில் இந்தியா பூரண சுயராஜ்யத்தை அடையலாம்.

அயர்லாந்தில் டிவாலரா இது போன்ற அதிகாரத்தை ஏற்றுக் கொண்டுதான் யுத்த சந்தர்ப்பத்தில் அயர்லாந்தைப் பூரண சுதந்திர நாடாகப் பண்ணினார்.

டிவாலராவைப் போன்ற முக்கிய இந்தியத் தலைவர்கள் வேவல் திட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டால், நிச்சயமாக இந்தியாவையும் வெகு சீக்கிரத்தில் சுதந்திர நாடாகச் செய்யலாம்.

வேவல் திட்டத்தை நிராகரித்தோமானால், ஜப்பான் யுத்தம் முடியும் வரையில் தேசம் அடையும் மகத்தான நஷ்டங்கள் ஒருபுறம் இருக்க, யுத்தம் முடியும் போதும் இப்போதுள்ள நிலைமையில்தான் இருப்போம்.

மறுபடியும் வட்டமேஜைகள், தலைவர்களின் ஆலோசனைகள், சமரசத் திட்டங்கள் இப்படியே பல வருஷங்கள் போய்விடும்.

நம்முடைய தலைமுறையில் இந்தியாவின் பூரண சுதந்திரத்தைக் கண்ணால் பார்ப்பதே சந்தேகமாகி விடும்.

* * *

"இந்தத் திட்டத்தை வேவல் இப்போது கொடுப்பதின் நோக்கம் என்ன?" என்று யோசிப்பது பெரும் அரசியல் தவறு.

"பிரிட்டிஷாரின் மன மாறுதல் அதில் இருக்கிறதா?" என்று கேட்பது அதைவிடப் பெரிய தவறு.

வேவல் திட்டத்தினால் இந்தியாவுக்கு நன்மையா இல்லையா, அதைக் கைப்பற்றுவதனால் இந்தியாவின் சுதந்திரம் கைகூடுமா இல்லையா என்பதை மட்டுந்தான் நாம் பார்க்க வேண்டும்.

வேவல் திட்டத்தைக் கொண்டு இந்திய சுயராஜ்யத்தைச் சாதிக்கலாம் என்று நாம் சொல்கிறோம். அதைக் கைப்பற்றாமல் விட்டோமானால், அது ஐந்து வருஷ காலத்தில் இந்தியாவின் நடந்த இரண்டாவது பெரும் அரசியல் தவறாகும் என்று வற்புறுத்துகிறோம்.

# சிவகாமியின் சபதம்



## அத்தியாயம் 25

## வேஷதாரி

வலது கால் எலும்பு முறிந்து எழுந்திருக்க முடியாதவராய்த் தரையில் கிடந்த ஆயனரண்டையில் வந்து புலிகேசி சக்கரவர்த்தி உட்கார்ந்தார்.

"மகா சிற்பியே! மன்னிக்கவும். உம்முடைய அற்புதச் சிலை வடிவங்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இவ்வளவு விரைந்து வந்தேன். நீர் மூர்ச்சை தெளியும் வரையில் கூடக் காத்திராமல் உம்மைக் குதிரைமேல் வைத்துக் கட்டிக் கொணர்ந்தேன். அப்படியும் உம்முடைய சிலைகளில் சிலவற்றிற்கு ஆபத்து வந்துவிட்டது. மன்னியுங்கள். ஏதோ மீதமுள்ளவையாவது பிழைத்தனவே என்று சந்தோஷப்படுங்கள்!" என்றார் புலிகேசி மன்னர்.

ஆயனர் அவருடைய முகத்தை ஆவலுடன் உற்றுப் பார்த்தார். அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒரு சந்தேகத்தின் நிழல் படர்ந்திருந்தது. இதென்ன விந்தை? வாதாபி சக்கரவர்த்தியா இவ்வளவு நன்றாகத் தமிழ் பேசுகிறார்? கொடுமைக்கும் குரூரத்துக்கும் பெயர்போன புலிகேசி மன்னரா தம் அருகில் உட்கார்ந்து இவ்வளவு சாவதானமான வார்த்தைகளைப் பேசுகிறார்? அவரா தம்மிடம் மன்னிப்புக் கேட்கிறார்?

இப்படிப்பட்ட நல்ல சுபாவமுடைய மன்னர் சிற்பிகளைக் காலையும் கையையும் வெட்டிப் போடும்படி கட்டளையிட்டிருப்பாரா? சிலைகளையும் சிற்பங்களையும் உடைத்துப் போட ஆக்ஞையிட்டிருப்பாரா? — அந்தக் கடுவன் பூனை முகத்துத் தளபதி அப்போது சொன்னது உண்மையா? அல்லது இனிய தமிழ் பாஷையில் இதோ சக்ரவர்த்தியே பேசுவது உண்மையா?

**கல்கி**

சட்டென்று ஆயனருக்குச் சிவகாமியின் நினைவு வந்தது! ஐயோ! அவள் என்ன ஆனாள்? மற்றதையெல்லாம் மறந்துவிட்டு. விவரிக்க முடியாத வேதனையுடனும் பரபரப்புடனும். "பிரபு! என் குமாரி — சிவகாமி — அவளை உங்கள் வீரர்கள் பிடித்துக் கொண்டு போனார்கள். ஐயோ! அவளைக் காப்பாற்றுங்கள். பிரபு! என் சிவகாமியைக் காப்பாற்றுங்கள். இந்தப் பாவி சிவகாமியை மறந்துவிட்டுச் சிலைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேனே?" என்று அலறினார்.

அப்போது புலிகேசி "ஆயனரே! கடவுள் அருளால் உமது மகளுக்கு ஆபத்து ஒன்றும் வராது. பத்திரமாக அவள் வாதாபி போய்ச் சேர்வாள்!" என்றார்.

உடனே ஆயனர், பேயடித்தவர் போன்ற முகத்துடன், "ஐயோ! என்ன சொன்னீர்கள்? சிவகாமி வாதாபிக்குப் போகிறாளா? அப்படியானால், இந்தப் பாவி இங்கே எதற்காக இருக்கிறேன்? என்னையும் கொண்டு போய் விடுங்கள்!" என்றார்.

"அப்படித்தான் முதலில் எண்ணினேன். ஆனால், உம்முடைய காலை ஒடித்துக் கொண்டு விட்டீரே? இந்த நிலைமையில் சிறிது நகர்ந்தாலும் உமது உயிருக்கு ஆபத்து வரும்......"

"பிரபு! அப்படியானால், என் மகளை இங்கே அனுப்பி வையுங்கள்!"

"இயலாத காரியம்......"

"ஆ! இதென்ன? நீங்களும் ஒரு சக்கரவர்த்தியா? சிற்பிகளைக் கால் கையை வெட்டவும், சிலைகளை உடைக்கவும், கன்னிப் பெண்களைச் சிறைப் பிடிக்கவும் கட்டளை போடத்தான் உங்களால் முடியுமா?" என்று ஆயனர் மேலும் மேலும் ஆவேசமான குரலில் கத்த ஆரம்பித்தார்.

அப்போது புலிகேசி, "ஆயனரே! உம்மிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும். தயவு செய்து உம்முடைய சகோதரியை உள்ளே போகச் சொல்லும்!" என்று சாந்தமான குரலில் கூறி, அவர்களுக்குப் பக்கத்தில் சொல்ல முடியாத மனக் குழப்பத்தையும் பீதியையும் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டு நின்ற சிவகாமியின் அத்தையைச் சுட்டிக் காட்டினார்.

"பிரபு! சொல்லுங்கள்! என் சகோதரி செவிடு! இடி இடித்தாலும் கேளாது!"

"இருந்தாலும், அவளைப் போகச் சொல்லும்!" என்றார் புலிகேசி.

ஆயனர் சமிக்ஞை காட்ட, அவருடைய சகோதரி முன்னைவிட அதிக குழப்பத்துடன் உட்புறம் சென்றாள்.

புலிகேசி, "ஆயனரே! நான் சொல்வதை நன்றாய் மனதில் வாங்கிக் கொண்டு விடை சொல்லும். உம்முடைய குமாரி இப்போது வாதாபியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறாள். ஒரு வேளை நான் விரைந்து வேகமாகச் சென்றால், அவளைக் கண்டு பிடிக்கலாம். கண்டு பிடித்து இவ்விடம் அனுப்பி வைத்தாலும் வைக்கலாம். ஆனால், இன்னொரு விஷயத்தை யோசியும். இதோ உம்முடைய அற்புத தெய்விகச் சிலைகளை உடைத்தது போல், மாமல்லபுரத்து மகா சிற்பங்களையும் உடைத்தெறிவதற்காக ஒரு பெரும் படை போயிருக்கிறது. நான் போனால் அந்தப் படையைத் தடுக்கலாம். உம்முடைய மகளைக் கொண்டு வருவதற்காகப் போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துச் சிற்பங்களைக் காப்பாற்றுவதற்காகப் போகட்டுமா?" என்று கேட்டபோது, ஆயனரின் உள்ளத்தில் ஏற்கெனவே மின்னல்போல் தோன்றிய சந்தேகம் வலுப்பட்டது.

இவ்வளவு நன்றாகத் தமிழ் பாஷை பேசுகிறவர், — தமது சகோதரியைக் கூடத் தெரிந்து கொண்டிருப்பவர்,— புலிகேசி சக்கரவர்த்திதானா?

ஆயனர் அவரை நன்றாக உற்றுப் பார்த்து, "ஐயா! தாங்கள்...... தாங்கள்......" என்று தயங்கினார்.

புலிகேசி சக்கரவர்த்தி உடனே தமது தலையிலிருந்த கிரீடத்தைக் கழற்றிக் கீழே வைத்தார்.

"ஆ! நாகநந்தி யடிகளா?" என்ற வார்த்தைகள் ஆயனரின் வாயிலிருந்து வெளிவந்தன.

"ஆம்; ஆயனரே! அந்த ஏழைப் பிக்ஷுவேதான்!"

"சுவாமி! இது என்ன கோலம்?"

"ஆம்; சிநேகிதர்களுக்கு உதவுவதற்காக இந்தக் கோலம் பூண்டேன். சமயத்தில் உதவியும் செய்ய முடிந்தது."

"ஆ! இது என்ன அதிசயமான உருவ ஒற்றுமை? தத்ரூபமாய் அப்படியே யிருக்கிறதே! நானே ஏமாந்து போனேனே?......சுவாமி! தாங்கள் யார்? ஒரு வேளை..."

"இல்லை, ஆயனரே இல்லை! வாதாபி புலிகேசி சக்கரவர்த்தியும் நாகநந்தி பிக்ஷுவும் ஒருவரல்ல. ஏதோ ஒரு அற்புதமான சிருஷ்டி மர்மத்தினால் எங்கள் இருவருக்கும் கடவுள் அத்தகைய உருவ ஒற்றுமையை அளித்திருக்கிறார். அது தற்சமயம் பயன்பட்டது. பரத கண்டத்தின் பாக்கிய வசத்தினால் பிறந்த மகா சிற்பியின் உயிரைக் காப்பாற்றினேன்."

"ஆ! சுவாமி! என் உயிரைக் காப்பாற்றி என்ன பிரயோஜனம்? என் மகள்!...... என் மகள் சிவகாமி!.. ..."

"ஆயனரே! நீரே சொல்லும், நான் என்ன செய்யட்டும் என்று. உம்முடைய மகளைத் தேடிக்கொண்டு போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துக்குப் போகட்டுமா?"

ஆயனர் சொல்ல முடியாத வேதனை ததும்பிய குரலில், "சுவாமி! என் மகளைக் கடவுள் காப்பாற்றுவார். நீங்கள் மாமல்லபுரத்துக்குப் போங்கள்! உடனே புறப்பட்டுப் போங்கள்! ஐயோ! காப்பாற்றுங்கள்!" என்று கதறினார். அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே வேஷதாரிச் சக்கரவர்த்தி அந்த சிற்பக் கிரஹத்திலிருந்து வெளியே சென்றார்.

உட்புறத்திலிருந்து சிவகாமியின் அத்தை தயங்கித்தயங்கி வந்து ஆயனர் அண்டை உட்கார்ந்து கொண்டாள். "அப்பா! உனக்கு என்ன உடம்பு?" என்று கேட்டாள். ஆயனர் அதற்கு



மறுமொழி சொல்லவில்லை. அத்தை திடீரென்று பதட்டத்துடன், "குழந்தை எங்கே? சிவகாமி எங்கே?" என்று கேட்டான்.

ஆயனர் நிமிர்ந்து உட்கார்ந்து, அந்தச் சிற்ப மண்டபமே அதிரும்படியான உரத்த குரலில், "அக்கா! சிவகாமி எங்கே?" என்று கேட்டார்.

கேட்டுவிட்டு, தலைகுப்புறப் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

ஆயனருடைய குரலைக் கேட்டுவிட்டுக் கொல்லைப்புறத்திலிருந்து ரதியும் சுகரும் உள்ளே ஓடி வந்தன. ஆயனர் விம்மி அழுவதைப் பார்த்த வண்ணம் அவையும் சிலைகளைப் போல் அசையாமல் நின்றன.

## அத்தியாயம் 26

# கர்வ பங்கம்

காஞ்சி அரண்மனையின் அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில் மகேந்திர பல்லவர் வீற்றிருந்தார். அவருக்கு எதிரே சேனாதிபதி கலிப்பகை, முதன் மந்திரி சாரங்கதேவர், முதல் அமைச்சர் ரணதீரர், ஒற்றர் தலைவன் சத்ருக்னன், குண்டோதரன் ஆகியவர்கள் நின்றார்கள்.

மகேந்திர பல்லவருடைய முகம் பிரகாசமாய்ப் புன்னகை மலர்ந்து விளங்கிற்று.

"குண்டோதரா! நீயே உன் கண்ணால் பார்த்தாயா? உண்மையாகவே, மாமல்லபுரத்திலிருந்து சளுக்கர் படைகள் திரும்பிப் போயினவா? சிற்பங்களுக்கு ஒரு கேடும் நேரவில்லையே? நிச்சயந்தானே?" என்று கேட்டார்.

"ஆம், பல்லவேந்திரா! எனக்கு அப்போது ஏற்பட்ட ஆச்சரியத்தை என்னவென்று சொல்வேன்? சளுக்க ராட்சதர்கள் இரண்டாயிரம் பேர் கைகளில் கடப்பாறைகளையும் இரும்பு உலக்கைகளையும் எடுத்துக் கொண்டு திடுதிடுவென்று ஓடி வந்தார்கள். ஐயோ! எத்தனையோ சிற்பிகள் அரும்பாடு பட்டு வேலை செய்த ஜீவ வடிவங்கள் எல்லாம் ஒரு நொடியில் நாசமாகப் போகின்றனவே என்று எண்ணித் திடுக்கிட்டேன். தாங்கள் ஒரு நாள் அந்தக் கோரக் காட்சியைப் பார்க்கும்போது தங்களுடைய மனது என்ன பாடு படும் என்று நினைத்துக் கொண்டேன். அடுத்த நிமிஷம் எங்கிருந்தோ திடீரென்று அந்தப் பாறை உச்சி மீது புலிகேசி சக்கரவர்த்தி தோன்றினார். கம்பீரமாகக் கையினால் சமிக்ஞை செய்தார். அவ்வளவுதான்! ராட்சதர்களைப்போல் பயங்கரமாய் ஊளையிட்டுக்கொண்டு ஓடி வந்த சளுக்கர்கள் ஸ்தம்பித்து நின்று விட்டார்கள். அவ்விடத்தில் அந்த நேரத்தில் வாதாபி சக்கரவர்த்தியை அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அவர் இட்ட கட்டளையை அவரே மாற்றிச் சிற்பங்களை அழிக்காமல் திரும்பிப் போகும்படி கட்டளையிடுவார் என்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பிரபு! நானே அந்த அதிசயத்தினால் சிறிது நேரம் சிலையாகப் போய்விட்டேன். எல்லாரும் அவ்விடம் விட்டுப் போன பிறகு தான் எனக்குச் சுய நினைவு வந்தது. உடனே புறப்பட்டு ஓடிவந்தேன்" என்றான் குண்டோதரன்.

அப்போது சாரங்கதேவர், "பிரபு! தங்களுடைய மாயாஜால வித்தைகளுக்கு ஒரு எல்லையே கிடையாது போலிருக்கிறதே? சளுக்க சக்கரவர்த்தி போட்ட கட்டளையை அவரே ஓடிவந்து மாற்றும்படி எப்படிச் செய்தீர்கள்? அவருடைய மனதை எப்படி மாற்றினீர்கள்?" என்று கேட்டார்.

"ஆகா! அந்த மூர்க்கனுடைய மனதை — கலை உணர்ச்சி என்பதே இல்லாத கசடனுடைய மனதை — மாற்ற முடியுமா? ஒரு நாளும் முடியாது. பிரம்மாவினால்கூட முடியாது!" என்றார் மகேந்திரர்.

"அப்படியானால் இந்த அதிசயம் எப்படி நடந்தது, பல்லவேந்திரா! மாமல்லபுரத்தை எப்படிக் காப்பாற்றினீர்கள்?" என்று முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர் கேட்டார்.

"சிறு துரும்பும் உதவும் என்று பழமொழி இருக்கிறதல்லவா? புத்த பிக்ஷுக்களினாலும் பிரயோஜனம் உண்டு என்று நான் எண்ணியது சரியாய்ப் போயிற்று!"

"பிரபு! புதிர் போடுகிறீர்கள். ஒன்றும் விளங்கவில்லை!"

"நாகநந்தி பிக்ஷுவைச் சிறைப் படுத்தி வைத்திருந்தேனல்லவா? இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் நேரலாம் என்று எண்ணித்தான் வைத்திருந்தேன். புலிகேசி இங்கிருந்து போகு முன் கடைசி கடைசியாக நாகநந்தி பிக்ஷுவைத்தான் கேட்டான். ஒரு கணம் என் மனங்கூடச் சலித்து விட்டது. ஒரு வழியாய் நாகநந்தியையும் புலிகேசியுடன் கூட்டி அனுப்பி விடலாமா என்று எண்ணினேன். நல்ல வேளையாக அப்படிச் செய்யாமல் மனதைத் திடப்படுத்திக்கொண்டேன். அதனால்தான் மாமல்லபுரம் பிழைத்தது. ஆயனரின் சிற்பக் கிரகமும் பிழைத்திருந்தால் நல்லது!"

சத்ருக்னன், "தங்களுடைய கட்டளையின் கருத்து எனக்கு இப்போது தான் புரிகிறது. 'சுரங்க வாசலைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திரு! வெளியில் யார் போனாலும் அதிசயப்படாதே! யோக நிஷ்டையிலேயே இருந்துவிடு!' என்று ஆக்ஞை இட்ட சமயம் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நாகநந்தி வெளியில் வந்தபோது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஓடிப்போய் அந்தக் கள்ள பிக்ஷுவின் கழுத்தைப் பிடித்து நெறித்துவிடலாமா என்று தோன்றியது. தங்களுடைய கண்டிப்பான கட்டளையை எண்ணிச் சும்மா இருந்தேன்" என்றான்.

சேனாபதி கலிப்பகை, "எங்களுக்கெல்லாம் இன்னமும் ஒன்றும் புரியவில்லையே? நாகநந்தி போய்ப் புலிகேசியை அழைத்துக்கொண்டு வந்து மாமல்லபுரத்தைக் காப்பாற்றியதாகவா சொல்கிறீர்கள்? அதற்கெல்லாம் அவகாசம் இல்லையே? புலிகேசி ரொம்ப தூரம் வடக்கே போய்விட்டதாக அல்லவா தகவல் கிடைத்தது?" என்று கேட்டார்.

"நாகநந்தி புலிகேசியை அழைத்து வரவில்லை. நாகநந்தியே புலிகேசியாகி விட்டார்!" என்று மகேந்திரவர்மர் சொன்னதும், எல்லாருடைய வாயிலிருந்தும் ஏககாலத்தில் 'ஆ!' என்ற வியப்பொலி வந்தது.

"உங்களுக்கெல்லாம் முகத்தில் கண்கள் இருக்கின்றன. ஆனால் இருந்தும் என்ன பிரயோஜனம்? கண்களை நீங்கள் உபயோகிப்பதில்லை. நாகநந்தியின் முகத்துக்கும் புலிகேசியின் முகத்துக்கும் உள்ள ஒற்றுமையை நீங்கள் யாரும் கவனிக்கவில்லையா? நாகநந்தியின் தலையில் கிரீடத்தை வைத்தால் அவரே புலிகேசியாகிவிடுவார் என்பதை முன்னமே நான் தெரிந்துகொண்டேன். நாகநந்திதான் புலிகேசியோ என்றுகூட ஒரு சமயம் நான் சந்தேகித்தேன். இல்லையென்று பிற்பாடு தெரிந்தது. இந்தமாதிரி சந்தர்ப்பத்தில் உபயோகப்படுவார் என்றுதான் நாகநந்தியைப் பத்திரமாய்ச் சிறைப்படுத்தி வைத்திருந்தேன். புலிகேசி இங்கு வந்திருந்தபோது அவருடைய கிரீடத்தையும் ஆபரணங்களையும் போல் நமது பொற்கொல்லர்களைக் கொண்டு செய்வித்திருந்தேன். அவற்றை மூட்டை கட்டிக் கொடுத்து நேற்று அவரை அனுப்பினேன். நேரே மாமல்லபுரம் போகச் சொன்னேன."

"நாகநந்தி அவ்வளவு சுலபமாகச் சம்மதித்து விட்டாரா, பிரபு?"

"பிக்ஷுவானாலும், ஒற்றரானாலும் உயிருக்கும் விடுதலைக்கும் ஆசைப்படாதவர் யார்?" என்றார் மகேந்திரர்.

"ஆனால் அந்தக் கபட வேஷதாரியிடம் தாங்கள் எப்படி நம்பிக்கை வைத்து அனுப்பினீர்கள்? தங்களை அவர் ஏமாற்றியிருந்தால்?......"

"ஆ! நாகநந்தி மனிதரே அல்ல; மனித உருவத்திலுள்ள அரக்கன்; விஷம் ஏற்றிய கத்திகளை உபயோகிக்கும் பாதகன்; ஆனாலும் அவன் கலைஞன். அவன் உள்ளத்தில் கலைப் பிரேமை இருப்பதை நான் அறிவேன். நிச்சயமாய் மாமல்லபுரத்தைக் காப்பாற்றுவான் என்றும் எனக்குத் தெரியும். ஆகையினால்தான் அனுப்பினேன். ஆயனரின் சிற்பக் கிரஹத்தையும் காப்பாற்றி விட்டிருந்தால் போதும். அப்புறம் அவன் என்னமாய்ப் போனாலும் கவலை இல்லை!"

இந்த விவரங்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முதன் மந்திரி முதலியவர்கள அளவிறந்த வியப்பில் ஆழ்ந்து மௌனமா யிருந்தார்கள்.

அந்த மௌனத்தைப் பிளந்து கொண்டு வெளியே ஒரு பெண்ணின் அழு குரல் கேட்டது. சற்று நேரத்துக் கெல்லாம் காவலன் ஒருவன் உள்ளே ஓடி வந்து தண்டம் சமர்ப்பித்து விட்டு, "பிரபு! மன்னிக்க வேண்டும். கண்ணபிரான் பெண்சாதி கமலி வந்து தங்களை உடனே காண வேண்டும் என்கிறாள். நாங்கள் தடுத்ததற்கு அழுது கூக்குரல் போடுகிறாள்!" என்றான். சக்கரவர்த்தியின் முகத்தில் சிறிது கலக்கத்தின் அறிகுறி தென்பட்டது. "வரச் சொல்!" என்று உத்தரவிட்டார்.

அடுத்த நிமிஷம் கமலி தலைவிரி கோலமாய் உள்ளே ஓடி வந்து, "பல்லவேந்திரா! இந்தச் சண்டாளியை மன்னிக்க வேண்டும். துரோகம் செய்து விட்டேன்" என்று கதறிச் சக்கரவர்த்தியின் காலில் விழுந்தாள்.

• • •

அன்று காலையில் கமலியின் மாமனார் அசுவபாலர் கமலியைப் பார்த்து, "எங்கே, அம்மா, ஆயனரையும் அவர் மகளையும் காணோம்?" என்று கேட்டார்.

கமலி சாதுரியமாக, "அவர்களுக்கு இந்த வீட்டில் பொழுது போக வில்லையாம். இந்தப் பச்சைக் குழந்தையின் விஷமம் பொறுக்க வில்லையாம். ஊரிலுள்ள கோயில்களை யெல்லாம் பார்த்துவரப் போயிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் சிற்பம், சிலை என்றால் பைத்தியமாயிற்றே?" என்றாள்.

"நல்ல வேளையாய்ப் போச்சு! கோட்டைக்கு வெளியே போக வேண்டும் என்று சொன்னார்களோ? போயிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும் தெரியுமா? அந்தப் படுபாவி புலிகேசியின் ஆட்கள் ஊர்களை யெல்லாம் கொளுத்துகிறார்களாம். சிற்பிகளை யெல்லாம் காலையும் கையையும் வெட்டுகிறார்களாம். கன்னிப் பெண்களை யெல்லாம் கவர்ந்து சிறைப்படுத்திக் கொண்டு போகிறார்களாம்......"

இதைக் கேட்டதும் கமலி "ஐயோ!" என்று அலறினாள். விம்மிக்கொண்டே அசுவபாலரிடம் விஷயத்தைக் கூறினாள். அவர் கமலியை மனங்கொண்ட வரையில் திட்டிவிட்டு, "ஓடு! ஓடிப் போய்ச் சக்கரவர்த்தியிடம் சொல்லு!" என்றார். அதன்படியேதான் கமலி சக்கரவர்த்தியிடம் ஓடி வந்தாள்.

• • •

விம்மலுக்கும் அழுகைக்கும் இடையே தட்டுத் தடுமாறிக் கமலி விஷயம் இன்னதென்று சொல்லி முடித்தபோது, சக்கரவர்த்தியின் முகபாவம் அடியோடு மாறிப் போயிருந்தது. கர்வத்துடன் கூடிய புன்னகைக்கு மாறாகச் சொல்ல முடியாத வேதனை இப்போது அம் முகத்தில் குடிகொண்டிருந்தது. சத்ருக்னனைப் பார்த்து, "இவள் சொல்வது உண்மையா, சத்ருக்னா! உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.


சத்ருக்னன் நடுங்கிய குரலில், "ஆம், பிரபு! நாகநந்தி போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு ஆடவரும் ஒரு பெண்ணும் வெளிச் சென்றார்கள். ஆயனர், சிவகாமி மாதிரி தோன்றியது. யார் வெளியே போனாலும் அதிசயப்பட வேண்டாம் என்று தாங்கள் ஆக்ஞாபித்திருந்தபடியால் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். இதற்குள் சற்றுத் தூரத்தில் வாதாபி அசுரர்களின் சத்தம் கேட்டது. எனவே, காபாலிக யோகியின் வேஷத்தை நான் சரியாகப் போட வேண்டியிருந்தது!" என்றான்.

மகேந்திரர், முதன் மந்திரி முதலியவர்களை நோக்கி, "சற்று முன்னால் என்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றி நானே கர்வப்பட்டுக் கொண்டிருந்தேனல்லவா? கடவுள் கர்வ பங்கம் செய்துவிட்டார். சிவகாமியைப் பறிகொடுத்துவிட்டு என் மகனுடைய முகத்தில் நான் விழிக்க முடியாது. சேனாபதி! உடனே படைகளைத் திரட்டுங்கள். இன்னும் ஒரு முகூர்த்தப் பொழுதில் நமது படைகள் வடக்குக் கோட்டை வாசலில் ஆயத்தமாயிருக்கவேண்டும்!" என்றார்.

---

***சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: பி. கே. கிருஷ்ணமூர்த்தி, பூவாளூர் போஸ்டு, லால்குடி வழி, திருச்சி.***

# பொழுது புலர்ந்தது



[ நமது விசேஷ நிருபர் ]

## தலைவரின் முகவுரை ★

உபசாரப் பத்திர துவந்த யுத்தங்கள் எல்லாம் ஒருவிதமாக முடிந்த பிறகு ராஜாஜி முகவுரையாகச் சில வார்த்தைகள் கூறினார்:—

"ஒரு நாட்டில் கவிகளின் பெருமையை அறிந்து பாராட்டி ஞாபகச் சின்னம் அமைப்பதற்கு வெகு காலம் செல்லும். ஆனால் பாரதியாருக்கு இவ்வளவு சீக்கிரத்திலேயே ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது நமது நாடு கெட்டுப் போகவில்லை, மக்களிடையே சிறந்த உணர்ச்சி இருக்கிறது என்பதையே காட்டுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக நன்றி கூறுகிறேன். இங்கிலாந்திலுள்ள பிரதம மந்திரி சர்ச்சிலிடம் போய், 'நீங்கள் பிரதம மந்திரி பதவியை விட்டு விட்டு ஷேக்ஸ்பியர் ஞாபகச் சின்னத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்ட வரவேண்டும்' என்று கேட்டுக் கொண்டால், சர்ச்சில் உடனே சந்தோஷமாகத் தமது மந்திரிப் பதவியைவிட்டு விட்டு அஸ்திவாரக் கல் நாட்டவே முன் வருவார். அப்படிப்பட்ட சிறப்பான காரியம் இது. ஒரு நாட்டின் பிரதம மந்திரியாக இருப்பதைக் காட்டிலும் இம்மாதிரியான ஒரு வைபவத்துக்குத் தலைமை வகிப்பதே எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த சபையில் என்னைக் காட்டிலும் இப்பதவியை நன்கு வகிக்கத் தகுந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார். கவிதையின் உண்மை இயல்பு என்ன என்பதை டி. கே. சி. யிடம்தான் நான் தெரிந்து கொண்டேன்" என்று கூறி, ஸ்ரீ முதலியாரைப் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

## ஸ்ரீ டி. கே. சி. ★

"கவிகள் பிறக்கும் இடங்கள் விசேஷ மகிமை பெற்று விடுகின்றன. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் பிறந்த ஸ்டிராட்போர்டு-ஆன்-ஏவன் என்னும் ஊரை ஆங்கிலேயர் புண்ணிய ஸ்தலமாகப் போற்றுகிறார்கள். தமிழ்நாட்டில் மகாகவி பாரதியார் பிறந்த எட்டயபுரம் அத்தகைய பாக்கியத்தைப் பெற்று விட்டது. சாதாரணமாக ஒரு நல்ல கவிதையை ஒரு கவிஞர் நமக்குத் தந்து விட்டால் அதற்காகவே அவருக்குக் கோயில் கட்டிப் போற்றலாம். பாரதியாரோ எத்தனையோ அற்புதமான கவிகளை நமக்குக் கொடுத்திருக்கிறார்" என்று டி. கே. சி. ஆரம்பித்து, "வெற்றி எட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே" என்ற பாட்டை உணர்ச்சியுடனும் உத்சாகத்துடனும் பாவம் விளங்கும்படி பாடிக் காண்பித்தார். "பாரதியார் பாடியுள்ள முரசு நாம் கோயில்களிலே பார்க்கும் சாதாரண முரசு அல்ல; ஆயிரம் மைல் நீளமும் ஆயிரம் மைல் அகலமும் உயரமும் உள்ள முரசு" என்று டி. கே. சி. சொல்வதற்கு முன்னால், அவர் பாட்டைப் பாடிக் காண்பித்தபோதே, அத்தகைய பிரமாண்டமான முரசு—வானத்தையும் பூமியையும் அளாவிய முரசு—சபையோரின் மனக்கண் முன்னால் வந்து விட்டது!

## பாரதியின் சிஷ்யர் ★

மதுரை ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர், "நான் பாரதியாரின் சிஷ்யன். அவரிடம் இரண்டு மாதம் தமிழ் படித்தவன்" என்று சொல்லிக்கொண்டு தமது பேச்சை ஆரம்பித்தார். ஸ்ரீ வைத்தியநாதய்யர் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தபோது வழக்கமான தமிழ்ப் பண்டிதர் இரண்டு மாதம் லீவில் போயிருந்தாராம். அவருக்குப் பதிலாகப் பாரதியார் தமிழ்ப் பாடம் கற்பிக்க வந்தாராம். "அப்போதே அவருடைய கண்களில் ஏதோ ஒரு விசேஷ சக்தி இருப்பது தெரிந்தது. ஆனால் அவருடைய பெருமை முழுதும் தெரியவில்லை. பிறகு, 1921-ல் காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமானபோது பாரதி

யாரின் பாட்டுக்களை மதுரையின் வீதிகளில் ஸ்ரீநிவாச வரதன், தியாகராஜ சிவம், சதாசிவம் ஆகியவர்கள் உணர்ச்சியுடன் பாடிக்கொண்டு போனதைக் கேட்டேன். தினந்தோறும் அந்தப் பாடல்களைக் கேட்கக் கேட்க என் மனதில் ஏதோ சங்கடம் உண்டாயிற்று. சட்டப் புத்தகங்களில் மனது செல்லவில்லை. அதன் பலனாகவே நான் தேசத் தொண்டிற்கு வந்து சேர்ந்தேன். நான் மட்டுமா? காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் பாரதியாரின் பாடல்களை கேட்டு விட்டுத்தான் தேசிய இயக்கத்தில் தாம் ஈடுபட்டதாக ஒரு முறை என்னிடம் கூறினார். பாரதியாரின் பாட்டுக்களின் மகிமைக்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை யல்லவா?"

ஸ்ரீ வைத்தியநாதய்யர் பேசி முடித்ததும் ராஜாஜி எழுந்திருந்து "டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் பேசுவார்; ரொம்பவும் சுருக்கமாகத்தான் பேசுவார்" என்று சபையோருக்கு அறிவித்துவிட்டு, மற்றொரு விஷயத்தையும் கூறினார். ராஜாஜி சமய சந்தர்ப்பங்களை அறிந்து காரியங்களைச் செய்பவர் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமாயிருந்தது. விஷயம் என்னவென்றால்:— ஸ்ரீ வைத்தியநாதய்யர் பேசி முடிக்கும் போது மணி ஒன்பதரை ஆகிவிட்டது. சபையில் முக்கால்வாசிப் பேர்களுக்கு மேல் அப்போது பட்டினியாகவே இருந்தார்கள். இதை முன்னிட்டு ராஜாஜி "ஆகாரம் செய்யாதவர்களெல்லாம் அப்படி அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக எழுந்திருந்து போய்க் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு வந்து விடுவது நல்லது. கூட்டத்தை ஒரே மூச்சில் நடத்தி முடித்துவிட உத்தேசமாகையால் கூட்டம் முடிவதற்கு நேரம் ஆகலாம்" என்றார். இப்படி ராஜாஜி சொன்னதிலேயே எல்லாருக்கும் ஆகாரம் சாப்பிட்டது போன்ற திருப்தி ஏற்பட்டு விட்டதாகத் தோன்றியது! சபையிலிருந்து ஒருவரும் எழுந்து போகவில்லை.

## டாக்டர் ராஜன் ★

"பாரதியார் அமரத்துவம் அடைந்த கவி என்பதாகச் சிலர் சொல்கிறார்கள். அமரத்வம் எப்படி அடைவது என்பது எனக்குத் தெரியாது. நான் ஒரு டாக்டர். என் கையினால் வியாதியஸ்தர்கள் இறந்து போவதைத்தான் நான் பார்த்திருக்கிறேன்!" என்று டாக்டர் ராஜன் கூறிய போது சபையில் ஏற்பட்ட சிரிப்பினால் கொட்டகையே அதிர்ந்தது.

பிறகு, பாரதியாரின் கவிதைச் சிறப்புக்குச் சிறந்த உதாரணம் ஒன்றை டாக்டர் ராஜன் கூறினார். ஜஸ்டிஸ் வி. சங்கரன் நாயர் ஒரு தடவை ஒரு வழக்கு விசாரணை சம்பந்தமாகப் பாரதி பாடல்களைப் படித்து விட்டு, "இறந்தவனும் உயிர் பெற்று எழக்கூடிய பாட்டு" என்று பாராட்டியதைக் குறிப்பிட்டார். அப்புறம் திருநெல்வேலியில் தாமிரபரணி நதிக்கரையில் பல வருஷங்களுக்கு முன்பு பாரதியாரின் ஞாபகார்த்தமாகத் தாம் ஒரு கல் நாட்டியதாகவும், அந்த அஸ்திவாரக் கல் இன்னும் பேச்சு மூச்சில்லாமல் இருந்த இடத்தை விட்டுக் கிளம்பாமல் அப்படியே இருக்கிறது என்றும் கூறித் தமது துரதிருஷ்டக் கைகளை நொந்து கொண்டார்! டாக்டர் ராஜன் இந்த விஷயத்தைச் சோகமும் ஹாஸ்யமும் கலந்து சொன்ன போது சபையிலிருந்தவர்களுக்கு ஒரு பக்கம் வருத்தமும் ஒரு பக்கம் சிரிப்புமாயிருந்தது.

பிறகு, ராஜாஜியின் திருக்கரங்களினால் போடப்பட்ட இந்த அஸ்திவாரக் கல் கூடிய சீக்கிரம் கட்டிடமாகிக் கிளம்பிப் பாரதியாருக்கு அழியாத ஞாபகச் சின்னமாக விளங்க வேண்டுமென்று பிரார்த்திப்பதாகக் கூறி முடித்தார்.

## தோழர் பாரதியார் ★

கவி பாரதியாருடன் இளம் பிராயம் முதல் இறுதிக் காலம் வரையில் நட்புரிமை பூண்டிருந்தவரான திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் பிறகு பேசினார்.

தாமும் கவி பாரதியாரும் எட்டயபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், தமது நண்பருக்கு இவ்வூரில் ஞாபக நிலயம் ஏற்படுவது பற்றித் தமக்கு அளவிறந்த மகிழ்ச்சி என்றும் கூறினார். ஆனபோதிலும், பாரதியார் உயிர் வாழ்ந்த காலத்தில் அவரைத் தமிழ்நாடு ஆதரிக்காமல் வறுமைப் பிணிக்கு ஆளாக்கிற்றே என்பதை நினைத்துத் துக்கப்படாமலிருக்க முடியவில்லை யென்றும் தெரிவித்தார். பாரதி பாடல்களுக்கு சர்க்காரால் ஏற்பட்டிருந்த தடை உத்தரவை டாக்டர் சுப்பராயன் மந்திரியாயிருந்த காலத்தில் ரத்து செய்ததைக் குறிப்பிட்டு, அவர் இச்சமயம் இங்கு வந்திருப்பது பற்றித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

பிறகு, ஸ்ரீ சோமசுந்தர பாரதியார் சாதிப் பிரச்னையைக் குறிப்பிட்டார். நல்ல



மண முகூர்த்தத்தை விதிப்படி நடத்திவைத்த தீக்ஷிதர் மணம் மிகுந்த மதுரைச் சந்தனக்கலத்தைக் கொடுக்க முன் வந்தபோது, ராஜாஜியின் பூமாலைப் பாரத்தைக் குறைக்கக் "கல்கி" ஆசிரியர் முயல்கிறார்.

முறையிலேதான் குறிப்பிட்டார். "தமிழ் நாட்டில் பல காரியங்களில் சாதி வேற்றுமை அடிக்கடி தலைகாட்டுகிறது. ஆனால் பாரதியாரைப் போற்றும் விஷயத்தில் எல்லாரும் ஒன்றுபட்டிருக்கிறோம். அவர் பிராமண சாதி என்பதற்காக யாரும் அவரைப் போற்றாமல் இல்லை. இது தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒரு நல்ல அறிகுறி" என்று சந்தோஷமாய்த் தெரிவித்துக் கொண்டார்.

"கல்கியின் பேனா முனையில் நான் பல சமயம் தாக்குண்டது உண்டு. ஆனால் அதே பேனா சில சமயம் ஆதரித்ததும் உண்டு. பாரதியாரின் விழாவிற்கு என்னை அழைத்து இங்கு பேசச் சொன்னதற்கு நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். கல்கியின் பரந்த உள்ளத்தைப் பாராட்டுகிறேன்" என்று முடித்தார்.

உண்மையில் இந்த விழாவில் ஸ்ரீ சோமசுந்தர பாரதியார் மனப் பூர்வமான உற்சாகத்துடன் கலந்து கொண்டது ஸ்ரீ சோமசுந்தர பாரதியாரின் பரந்த உள்ளத்துக்கும் எடுத்துக் காட்டாயிருந்தது.

### கவிஞர் வாழ்த்து ★

பிறகு, நாமக்கல் கவிஞர் எழுதியிருந்த "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற பாட்டைக் கம்பீரத்வனியில் பாடிவிட்டு, தாம் பாரதியாரின் பரம்பரையில் வந்த கவி என்றும், கவிகளின் பிரதிநிதி என்ற முறையில் பாரதி ஞாபகச் சின்ன முயற்சிக்கு வாழ்த்துக் கூறுவதாகவும் சொன்னார்.

"பாரதியாரை வெகு காலமாகக் காண வேண்டுமென்று எனக்கு அவா. நான் அவரைக் காணும் பொருட்டு ஒரு சமயம் சென்னையில் போய் ஒரு வாரம் அலைந்துவிட்டு வந்தேன். அப்போது அவர் அகப்படவில்லை. பின்னொரு சமயம் அவரைப் பார்க்கச் சென்றேன். அப்போது நான் ஒரு சித்திரக்காரன். கவிகளும் புனையத் தெரியும். இருந்தாலும் பாரதியாருக்கு நான் ஒரு சித்திரக்காரன் என்ற முறையிலேயே அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். பாரதியார் என்னைப் பார்த்ததும், 'நீர் என்னை ஓவியத்தில் தீட்டும்; நான் உம்மைக் காவியத்தில் தீட்டுகிறேன்' என்று கூறினார். பிறகு எனக்குக் கவி எழுதவும் தெரியும் என்பதைப் பாரதியார் அறிந்ததும் பாரதியார் என்னை ஒரு பாட்டுப் பாடச் சொன்னார்.

'தம்மரசைப் பிறர்ஆள விட்டுவிட்டுத்
தாம் வணங்கிக் கைகட்டி நின்றபேரும்'

என்ற பாட்டின் முதல் அடியைப் பாடியதும், பாரதியார் ஆவேசத்துடன் 'பாண்டியா! நீ புலவனடா!' என்றார்.

அது முதல் நானும் என்னைப் பாரதி பரம்பரைக் கவிஞனாக எண்ணலானேன்!"

ஒரு சமயத்தில் தூத்துக்குடியில் ஒரு பாட்டுப் போட்டி நடத்தினார்களாம். அந்தப் போட்டிக்கு நாமக்கல் கவிஞரும் பாரதியாரும் அனுப்பி யிருந்த இரண்டு பாட்டுக்களையும் பரிசுக்குத் தகுதி யில்லை என்று தள்ளி விட்டார்களாம்! இது விஷயத்திலும் பாரதியாருக்கும் தமக்கும் ஒற்றுமை உண்டு என்று நாமக்கல் கவிஞர் சொன்னதைச் சபையோர் பெரிதும் ரசித்தார்கள்.

பாரதி பரம்பரையில் வந்த கவி என்று தம்மை நாமக்கல் கவிஞர் கூறிக் கொண்டதைச் சபையோர் அங்கீகரித்ததற்கு அறிகுறியாக அவருக்கு மேடையில் மாலை சூட்டப் பெற்றபோது சபையில் பெருங் கரகோஷம் எழும்பியது.

## டாக்டர் சுப்பராயன் ★

நேரம் அதிகமாகி விட்டதையும், மேலே ராஜாஜி பேச வேண்டி யிருப்பதையும், பாரதியாரிடம் தமக்குள்ள பக்தியை ஏற்கெனவே காரியத்தில் காட்டி யிருப்பதையும் முன்னிட்டு, டாக்டர் சுப்பராயன் ரத்தினச் சுருக்கமாக, "பாரதியார் சீர்திருத்தக் கவி; அரசியல் கவி; புரட்சிக் கவி; ஆகையால் அவரைப் போற்றுகிறேன்" என்று சொல்லி அமர்ந்தார்.

ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை பல வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீ பாரதியார் திருவண்ணாமலைக்கு வந்திருந்தபோது அவருக்காக ஒரு கூட்டம் போட்டதையும், பாரதியார் "ஜயபேரிகை கொட்டடா" "செந்தமிழ் நாடு" பாடல்களைப் பாடிவிட்டுக் கூட்டத்தை விட்டுச் சென்று விட்டதையும் கூறி, பாரதியார் பிறந்த ஊரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலால் முன்னொரு தடவை இவ்வூருக்கு வந்திருந்ததையும் குறிப்பிட்டார். "பாரதி பிறந்த வீட்டைப் பார்த்துவிட்டு, இந்த ஊரின் மண்ணையும் கொஞ்சம் தலையில் எடுத்துப் போட்டுக்கொண்டு திரும்பிப் போனேன். இப்போது இந்த ஜனக் கூட்டத்தையும் திருவிழாவையும் பார்த்தால், அந்த எட்டயபுரந்தானா இது என்று தோன்றுகிறது. எல்லாம் பாரதியின் மகிமைதான்!" என்று கூறி அமர்ந்தார்.

ஸ்ரீமதி லக்ஷ்மி பாரதி எம். எல். ஏ. (ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பாரதியின் மனைவியார்) கடைசியாகப் பேசினார். "பாரதியும் இந்த ஊரில் பிறந்தவர்; நானும் இந்த ஊரில் பிறந்தேன்" என்று உறவு பாராட்டிக் கொண்டு ஆரம்பித்தார். "பாரதியார் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பாடியிருக்கிறார். ஆனால் பெண்களின் விடுதலையைப் பற்றி விசேஷமாகப் பாடியிருக்கிறார். ஆகையால் அவருடைய ஞாபகச் சின்ன முயற்சிக்குப் பெண் குலத்தின் சார்பாக வாழ்த்துக் கூறுகிறேன்" என்று அழகாக முடித்தார்.

## ராஜாஜியின் பேருரை ★

தலைவர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் பிறகு பேசினார். சுமார் முக்கால் மணி நேரம் பேசினார். பேச்சு அற்புதமா யிருந்தது. அதை அந்தப் பெரிய சபை கேட்டு அநுபவித்த விதம் அதைவிட அற்புதமா யிருந்தது.

ராஜாஜியின் பேச்சில் மூன்று விஷயங்கள் முக்கியமானவை:—(1) பாரதியாரைப் பற்றிய ராஜாஜியின் சொந்த அனுபவங்கள்; (2) பாரதியார் கவிதையின் சிறப்பு; (3) பாரதியாரைத் தமிழ்நாடு போற்ற வேண்டிய முறை.

பின்வருமாறு பேச்சு ஆரம்பமாயிற்று:—
"இந்த நாளில் பலர் பாரதியாரைப் பற்றித் தங்களுடைய சொந்த அநுபவங்களையும் ஞாபகங்களையும் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் விடப் பாரதியாரை எனக்கு அதிகமாய்த் தெரியும்; அதிக காலமாயும் தெரியும். இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் எல்லாரையும்விட எனக்கு வயது அதிகம். (சிரிப்பு) அவருடைய மாமாவைத் தவிரச் சொல்கிறேன். வயது எனக்கு அதிகமானதினாலேயே சில விஷயங்களில் அநுபவமும் அதிகமாய்த்தானே இருக்க வேணும்? 1906-ம் வருஷத்திலேயே பாரதியாரை எனக்குத் தெரியும். அவரும் நானும் கல்கத்தா காங்கிரஸுக்கும் அடுத்த வருஷம் சூரத் காங்கிரஸுக்கும் போனோம். பாரதியார் தீவிர வாதி. நானும் அப்போது அப்படித்தான். அந்தக் காலத்தில் தீவிரவாதம் என்றால் சாதாரண விஷய மல்ல. சூரத் காங்கிரஸில் நாற்காலிகள் வீசி எறியப்பட்டன. செருப்புகளும் பறந்தன. ஆனால் இந்த அமர்க்களமெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது பாரதியார் தூரத்தில் போய் ஸ்ரீ ஜி. ஏ. நடேசனுடன் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கவிஞரானதால் அப்படிச் செய்தார். கவிகள் சாதாரண மனிதர்களைப் போல் காரியங்

களில் இறங்கி விட்டால், அவர்கள் கவிகளா யிருக்கமுடியாது."

ஸ்ரீ சோமசுந்தர பாரதியார் தமது பேச்சில் சாதிப் பிரச்னையைப் பிரஸ்தாபித்திருந்தாரல்லவா ?

அதைக் குறிப்பிட்டு, ராஜாஜி கூறியதாவது :—"அந்தக் காலத்திலும் பாரதியாரைப் போற்றும் விஷயத்தில் சாதியை யாரும் கவனிக்கவில்லை. உண்மையில் அவர் என்ன சாதி என்பதுகூட அநேகருக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. நானும் என் நண்பர் ஒருவரும் ஒரு சமயம் புதுச்சேரிக்குப்போய்ப் பாரதியாரைப் பார்த்தோம். அப்போது எங்களுக்குள் பாரதியார் என்ன சாதி என்ற கேள்வி எழுந்தது. பாரதியார் மேல் பூணூல் இல்லையாதலால் விவாதத்தை எங்களுக்குள் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. எனவே, பாரதியாரையே கேட்டுவிடுவது என்று தீர்மானித்துக் கேட்டோம். அவர் பிராமண சாதி என்று அறிந்ததும், 'பூணூல் எங்கே?' என்று கேட்டோம். 'அது எங்கே போயிற்றோ? யார் கண்டது?' என்றார். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நமது நாட்டில் எப்போதுமே கவிகளைப் போற்றும் விஷயத்தில் சாதி குறுக்கிட்டது கிடையாது என்பதற்காகத்தான்."

பாரதியார் உயிரோடிருந்த போது அவரை யாரும் ஆதரிக்கவில்லையென்றும், பட்டினி கிடந்து கஷ்டப்பட்டாரென்றும் அடிக்கடி புகார் சொல்லப்படுகிறதல்லவா ? இதைக் குறிப்பிட்டு ராஜாஜி சொன்னதாவது :—"பாரதியார் பட்டினி கிடந்தார் என்று பலர் சொல்கிறார்கள். ஆனால் என்னுடைய அதிர்ஷ்டம், அந்த பாரதியாரே எனக்குச் சாப்பாடு போட்டார். சாப்பாடு ரொம்ப நன்றாகத்தான் இருந்தது. பாரதியாரின் வறுமையைப் பற்றி நாம் இப்போது ஓயாமல் வருத்தப்பட வேண்டியதில்லை. அவருக்கு ஏராளமாக யாராவது பணம் கொடுத்திருந்தாலும், ஒரே நாளில் செலவழித்து விட்டிருப்பார். அவரால் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு சௌக்கியமாயிருந்திருக்க முடியாது. அவருடைய சுபாவம் அது. அதனால்தான் அவர் அற்புதமான கவிகளைப் பாட முடிந்தது!"


பிறகு, பாரதியார் தமக்குச் சாப்பாடு போட்டதோடு மட்டுமில்லை, தமக்காக ஒரு பாட்டும் பாடிக் கொடுத்தார் என்று ராஜாஜி சொன்னார். அந்த நாளிலேயே பௌதிக நூல்களைத் தமிழ்ப் படுத்த வேண்டும் என்ற முயற்சி சேலத்தில் ராஜாஜியினால் தொடங்கப்பட்டிருந்தது. தமது இயக்கத்துக்குச் சாதகமாகப் பாரதியாரை ஒரு பாடல் பாடித் தரும்படி கேட்டுக் கொண்டார். அதன் பேரில்தான், 'ஆதிசிவன் பெற்று விட்டான்' என்ற பாடலைப் பாரதியார் பாடினார். அந்தப் பாட்டினால் பௌதிக சாஸ்திரத்தைத் தமிழிலே சொல்ல முடியாது என்று எண்ணுகிறவர்களைக் குறித்து 'என்றந்தப் பேதை உரைத்தான்!' என்று காரசாரமாகப் பாரதியார் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

கடைசியாக, பாரதியார் வாழ்க்கையைப் பற்றி ராஜாஜி குறிப்பிட்ட ஒரு சம்பவம் சபையின் மனதைப் பெரிதும் உருக்கி விட்டது. அது வருமாறு :—

"புதுச்சேரியை விட்டு வெளி வந்த பிறகு பாரதியார் சென்னைக்கு வந்தபோது அவரை வரவேற்பதற்காக நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனேன். பாரதியார் ரயிலிலிருந்து இறங்கினார். அவரைப் பார்த்ததும் எனக்கு ஒரே துக்கமாய்ப் போய் விட்டது. ஏற்கனவே நான் அவரைப் பார்த்தபோது அவருடைய முகம் பூரண சந்திரனைப் போன்ற தேஜஸ் பொருந்தியதாயிருந்தது. ஆனால், இப்போதோ கன்ன விழுந்து வற்றி உலர்ந்து போயிருந்தது. 'ஐயோ! இவர் இப்படிப் போய் விட்டாரே!' என்று நான் வருத்தப்பட்டேன்" என்று ராஜாஜி சொன்னபோது, அந்த உருக்கமான வார்த்தைகளில் மன முருகாதவர்கள் அந்தச் சபையில் யாரும் இல்லை என்று சொல்லலாம்.

ஒத்துழையாமை இயக்கத்தை முன்னிட்டு ராஜாஜி வக்கீல் தொழிலை விட்டபோது, பாரதியார், "வக்கீல் வேலையை விடுவே

இவ்வளவு மெய்ம்மறந்து என்னத்தைக் கேட்கிறார்கள் ?...



தாவது! பைத்தியக்காரத்தனம்! உனக்குப் பணம் வேண்டாமென்றால் சம்பாதித்து என்னிடம் கொடு!'' என்று சொன்னதைக் குறிப்பிட்டு விட்டு, பிற்பாடு பாரதியார் தமது கருத்தை மாற்றிக் கொண்டதையும் தெரிவித்தார்.

''பாரதியார் திலகர் கோஷ்டியைச் சேர்ந்தவர். முதலில் அவருக்கு மகாத்மா காந்தியின் இயக்கத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் அந்த இயக்கம் தேசத்தில் பலமாகத் திரண்டு எழுந்ததைக் கண்டதும் தமது கருத்தை மாற்றிக் கொண்டார். மகாத்மாவைப் பற்றிப் பாடலும் பாடினார்'' என்று குறிப்பிட்டார்.

பிறகு, ராஜாஜி உண்மையான கவிதையின் இயல்பு என்னவென்பதை விளக்கிக் கூறினார். மிக உயர்ந்த இலக்கிய விஷயத்தை அதிகப் படிப்பில்லாத கிராமாந்தர ஜனங்கள்கூடத் தெரிந்து கொள்ளுமாறு தெளிவு படுத்திக் கூறினார். ''கவிதையில், விஷயத்தைப் போலவே முக்கியமான அம்சம் கவியின் உருவம். இதை டி. கே. ஸி. அடிக்கடி வற்புறுத்திச் சொல்வார். நல்ல கருத்து ஒன்றை வசனத்திலும் சொல்லலாம். ஆனால் அதற்கு அவ்வளவு வலிவு கிடையாது. அதே விஷயத்தைக் கவிதை உருவம் கொடுத்துச் சொல்லும்போது ஒன்றுக்கு நூறு மடங்கு வலிவு ஏற்பட்டு விடுகிறது. அப்படிக் கொடுக்கும் உருவம் சரியான கவி உருவமாக இருக்க வேண்டும். எல்லாராலும் அது முடியாது. உண்மையான கவிஞனால்தான் முடியும்'' என்று சொல்லி, விஷயம் நன்கு விளக்கமாகும் பொருட்டுப் பின்வரும் உதாரணமும் கூறினார்:—

''ரோஜாப் புஷ்பத்தின் வாசனையுள்ள திராவகத்தை ஒரு சிறு புட்டியில் போட்டு விற்கிறார்கள். வாசனை அப்படியேதான் இருக்கிறது. ஆனால், அது ரோஜாப்பூ ஆகுமா? ரோஜா மலரை நாம் பார்த்து முகர்ந்து அநுபவிக்கிற சந்தோஷம் புட்டியில் அடைத்த திராவகத்தினால் ஏற்படுமா? கருத்து மட்டும் நன்றாயிருந்தால் அது வெறும் வாசனைத் திராவகம் மாதிரி. நல்ல கவிதை உருவம் அமைந்திருந்தால் ரோஜாப் புஷ்பம் மாதிரி. கவிதையையும் ரோஜாப் புஷ்பத்தைப் போல் முழுமையாகப் பார்த்து அநுபவிக்க வேண்டும். இதழ் இதழாகப் பிய்த்து நாசம் செய்யக்கூடாது. மற்றும், ரோஜாப் புஷ்பம் உயர்வானதா, மல்லிகைப் புஷ்பம் உயர்வானதா என்பது போன்ற வீண் விவாதங்களும் செய்யக் கூடாது. நமக்கு ரோஜா, மல்லிகை எல்லாம் வேண்டியதுதான். சிலர் குழந்தைகளைப் பார்த்து 'உனக்கு அப்பா வேண்டுமா? அம்மா வேண்டுமா?' என்று கேட்பதுண்டு. அப்படிக் கேட்கிறவர்களைக் கன்னத்தில் அறையலாம் என்று எனக்குத் தோன்றும். அது போலவே, கவிகளில் எந்தக் கவி உயர்ந்தவர் என்று விவாதிப்பதும் தவறு. 'கம்பர் உயர்ந்தவரா, பாரதி உயர்ந்தவரா' என்றெல்லாம் விவாதிக்கக் கூடாது. நமக்குக் கம்பரும் வேண்டும்; பாரதியும் வேண்டும். உண்மைக் கவி எது என்று தெரிந்து கொண்டு, எல்லாக் கவிகளையும் சந்தோஷமாய் அநுபவிக்க வேண்டும்.''

இவ்வாறு கவிதை இயல்பைக் குறித்துப் பேசிவிட்டு, ராஜாஜி பாரதியாரின் கவிதைகளுக்கு வந்தார். ''பாரதியார் உண்மையான கவி. எத்தனையோ மணமுள்ள மலர்களைச் சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார். தேசத்துக்கு அவசியமான எல்லா விஷயங்களையும் பற்றிப் பாடியிருக்கிறார். அவர் தொடாத விஷயம் இல்லை. ஆனால் சமூக சீர்திருத்தத்திற்காவது அரசியல் கொள்கைகளுக்காவது கவிகளிடம் பிரமாணம் தேட வேண்டிய அவசியமில்லை. அப்படித் தேடினோமானால் சில சமயம் முரண்பட்டது போல் தோன்றும் கருத்துக்களைக் கண்டு குழப்பமடைவோம். அவ்வப்போது தேசத்தில் ஆவேசத்தை உண்டாக்கியிருந்த இயக்கங்களைக் குறித்துப் பாரதியார் பாடியிருக்கிறார். பாரதியார் எதைப் பற்றிப் பாடினார் என்பதைக் காட்டிலும், அவர் ஒரு கவி என்பதுதான் மகத்தான விஷயம். முக்கிய

... ராஜாஜி பேசுவதைத்தான்.





பாரதி விழாவின் வாழ்த்துக் கூறிய டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன், ஸ்ரீ வைத்தியநாதய்யர் ஆகியவர்களையும் திருவிழாக் கைங்கரியத்தில் ஈடுபட்ட ஸ்ரீ அமிர்தசாமி, கோயமுத்தூர் கபீர், 'நியூஸ் பரேட்' காமராக்காரர் பணி ஆகியவர்களையும் படத்தில் காணலாம். குழந்தைகள், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரின் பேரப் பிள்ளைகள்.

மாக, நம் காலத்தில் பாரதியார் பிறந்து பாடியதனால், இந்தத் தமிழ் ஜாதியின் சக்தி அவிந்து விடவில்லையென்று நிச்சயமாய்த் தெரிகிறது. அப்பேர்ப்பட்ட கவியின் ஞாபகத்தை நாம் என்றென்றைக்கும் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுவதினால் இன்னும் பல கவிகள் தமிழ் நாட்டில் வருங் காலத்தில் தோன்றக்கூடும்" என்று கரகோஷத்தினிடையே கூறிவிட்டு, கடைசியில் பாரதி ஞாபகார்த்த முயற்சிக்கு ஆசி கூறினார்.

"பாரதியாருக்குச் சிறந்த ஞாபகச் சின்னம் அவருடைய பாடல்கள்தான். தமிழன் ஒவ்வொருவன் உள்ளத்திலும் அந்தப் பாடல்கள் ஊறிவிட வேண்டும். இதனால் வேறு ஞாபகச் சின்னங்கள் வேண்டாம் என்பதில்லை. ஞாபகச் சின்னக் கட்டிடங்களும் அவசியமானவைதான். பாடல்கள் பரவுவதற்கே இவை உபயோகமாயிருக்கும். டாக்டர் அழகப்பச் செட்டியார் சொன்னபடி புதுச்சேரியிலும் சென்னையிலும் இன்னும் தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊரிலும் பாரதியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்பட வேண்டியதுதான். ஆனால் பாரதியார் பிறந்த ஊராகிய எட்டயபுரத்தில் ஏற்படும் ஞாபகச் சின்னத்துக்கு ஒரு தனி விசேஷம் உண்டு. இது தமிழ்நாடு முழுவதிற்கும் பொதுவான ஞாபகச் சின்னமாயிருக்கும். இந்த ஞாபகச் சின்னக் கட்டிடத்தை எழுப்பிய பிறகு அதை எப்படி உபயோகப்படுத்துவது என்று நிர்மாணிக்க வேண்டும். பாரதி நூல்களைப் பிரசுரிப்பது போன்ற நிரந்தரமான வேலை நடைபெற வேண்டும். வருஷா வருஷம் பாரதி திருவிழா நடத்த வேண்டும். இதையெல்லாம் நடத்துவதற்கு ஒரு நிரந்தரமான ஸ்தாபனம் வேண்டும். 'பாரதி சங்கம்' என்ற பெயருடன் அப்படி ஒரு நிரந்தர ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் யோசனை சொல்கிறேன். வருஷ சந்தாவைக் குறைவாக வைத்தால், அதாவது, 2 அணா, 4 அணா அல்லது 8 அணாவாக வைத்தால் தமிழ்நாடு முழுதும் ஆயிரக்கணக்கில் அங்கத்தினர்கள் சேர்ந்து விடுவார்கள். அந்தச் சந்தாவைக் கொண்டே வருஷாந்திர விழாவை நடத்தி விடலாம். சங்கத்தின் மூலம் இன்னும் எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்யலாம்" என்று கூறி ராஜாஜி தமது பிரசங்கத்தை முடித்து உட்கார்ந்ததும், இத்தனை நேரமும் ஏதோ வேறு ஒரு உலகத்தில் சஞ்சரித்தவர்கள் போல் பரவசமாய்க் கேட்டுக் கொண்டிருந்த சபையினர் திரும்பவும் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்து, அதன் அறிகுறியாகப் பெரும் கரகோஷம் செய்து ஆரவாரித்தார்கள்.

ராஜாஜி பேசிக்கொண்டிருந்த போது தூத்துக்குடியிலிருந்து கால் நடையாகப் புறப்பட்டு இந்த வைபவத்துக்காக நடந்து வந்த நாற்பது இளம் மாணவர்கள் அடங்கிய கோஷ்டி பந்தலுக்கு வந்து சேர்ந்தது. ராஜாஜியின் பேச்சு நடந்து கொண்டிருப்பதை அறிந்ததும் அவர்கள் தங்கள் ஜெய கோஷத்தை நிறுத்திக் கொண்டு அமைதியாகப் பந்தலுக்குள் வந்து உட்கார்ந்தது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

## வந்தனோபசாரம் ★

வந்தனோபசாரம் கூறுவதற்காக எழுந்த "கல்கி" ஆசிரியர் பின்வருமாறு ஆரம்பித்தார்:— "பல வருஷ காலமாக எந்தக் காரியத்திலும் ராஜாஜியை ஆதரிப்பது எனக்கு வழக்கமாய்ப் போயிருக்கிறது. இன்றைக்கு ஒரு நாளாவது அவரை மறுத்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ராஜாஜி இந்தப் பாரதி ஞாபகச் சின்ன விஷயமாக நான் செய்த முயற்சியைக் குறித்து ஏதாவது பாராட்டிப் பேசுவார் என்றும், அதை நான் மறுத்து 'அப்படி ஒன்றும் நான் பிரமாதமாய்ச் செய்துவிடவில்லை' என்று தெரியப்படுத்தலாம் என்றும் நினைத்திருந்தேன். ஆனால் ராஜாஜி நான் எதிர்பார்த்தபடி சொல்லவில்லை. 'கல்கி என்ன பிரமாதமாய்ச் செய்துவிட்டார்? ஒன்றும் இல்லை. பாரதியார் பாடல்களுக்காக வல்லவா பணம் வந்தது?' என்று கூறினார். எனவே, இது விஷயத்திலும் ராஜாஜியை நான் ஆதரிக்க வேண்டியே வந்திருக்கிறது. உண்மையிலேயே நான் ஒன்றும் செய்துவிடவில்லை. செய்தவர்கள் எல்லாம் மற்றவர்கள் தான். அவர்கள் என்னிடம் வந்தனத்தை எதிர்பார்க்கவில்லையென்றாலும் பொதுஜனங்களுக்குத் தெரியவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்."

இவ்விதம் பீடிகை போட்டுக்கொண்டு, முதன் முதலில் ஐந்து ரூபாய் அனுப்பிப் பாரதி நிதியை ஆரம்பித்து வைத்த ஸ்ரீ ரகுநாதனுக்கு நன்றி செலுத்தினார். "ஸ்ரீ ரகுநாதன் இந்த வைபவத்துக்கு வந்திருப்பதாகவும், இந்தப் பந்தலில் எங்கேயோ இருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். இது உண்மையானால், தயவு செய்து அவர் இங்கே மேடைக்கு வரவேண்டும்" என்று கூறியதும், கூட்டத்தின் மத்தியில் உட்கார்ந்திருந்த ஸ்ரீ ரகுநாதனைப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் தூண்டி எழுந்திருக்கச் செய்ய, அவரும் மிக்க சங்கோசத்துடன் மேடைக்கு வந்தார். பலமான கரகோஷத்துக்கிடையே மேடையில் அவருக்குப் பூமாலை போடப்பட்டது.



ஸ்ரீ இ. ரகுநாதன்

பிறகு, எவ்வளவோ சிரமங்களைப் பாராட்டாமல் இந்த வைபவத்துக்கு விஜயம் செய்த தலைவர்கள், ஆரம்பத்திலிருந்து ஒத்துழைத்து உதவி புரிந்து வந்த பத்திரிகாசிரியர்கள் — எழுத்தாளர்கள், கேட்டதற்கு மேல் பன்மடங்கு நிதிக்குப் பொருளுதவிய பொது மக்கள், திருவிழாவை இவ்வளவு அமோகமாக நடத்தி வைத்த எட்டயபுரம் சமஸ்தான மகாராஜா, அவருடைய மைத்துனர் ஸ்ரீ அமிர்தசாமி, பாரதி இலக்கிய மன்றத் தலைவர் ஸ்ரீ மு. கந்தசாமி செட்டியார், மேற்படி மன்றத்தைச் சேர்ந்த காரியதரிசி ஸ்ரீ சாமிநாதன், ஸ்ரீ கே. பி. எஸ். நாராயணன் முதலிய இளைஞர்கள், விழாவுக்கு வந்து கச்சேரி செய்து சிறப்பித்த வித்வான்கள், கட்டிடப் பிளான் போட்டுக் கொடுத்து உதவிய பிரசித்த கட்டிடக் கலை நிபுணர் ஸ்ரீ சித்தலே, விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே எட்டயபுரம் சென்று தொண்டு புரிந்த கோவைமுத்தூர் ஸ்ரீ கப்ரி ஆயிகர்களுக்கு வரிசைக் கிரமமாக வந்தனம் கூறினார்.

கடைசியில், பாரதி இலக்கிய மன்றத்தின் சார்பாக ஸ்ரீ கே. பி. எஸ். நாராயணன் வந்திருந்தவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்தினார். "எத்தனையோ அசௌகரியங்கள் உங்களுக்கு இருந்திருக்கும். அதற்கெல்லாம் பொறுப்பை அனுபவமற்ற இளைஞர்களாகிய எங்கள் தலையிலேயே போடுங்கள். குற்றம் குறைகளுக்கெல்லாம் பொறுப்பாளிகள் நாங்கள் தான். வேறு யாருமில்லை. எங்களை மன்னித்து விடுங்கள்!" என்று ஆவேசமாய்ப் பேசியபோது, "மன்னித்தோம்!" என்று ஒரு குரல் எழுந்தது. உடனே பெருஞ் சிரிப்பு உண்டாயிற்று.

உண்மை என்னவென்றால், திருவிழா ஏற்பாடுகளில் ஒருவிதக் குற்றம் குறையும் சொல்வதற்கு இடமின்றி அவ்வளவு நன்றாக நடந்திருந்தபடியால், ஸ்ரீ நாராயணன் மன்னிப்புக் கேட்பதற்கு அவசியம் இருந்ததாகச் சபையோர் எண்ணவில்லை.

இவ்விதம் எட்டயபுரம் பாரதி ஞாபகச் சின்ன அஸ்திவார விழாவானது டாக்டர் திரிமூர்த்தி தமது செய்தியில் குறிப்பிட்டிருந்த பிரகாரம், "இது வரை தமிழ்நாட்டில் இம்மாதிரி இலக்கிய விழா நடந்ததைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!" என்று சொல்லும்படியாக இனிது நடைபெற்று முடிந்தது.

# வான சஞ்சாரம்

இசைத்தேன்

சென்ற இரண்டுவார ரேடியோக் கச்சேரிகளில் முதன்மையாயும் மிக உயர்ந்த ரகமாயுமிருந்தது. 4வ. திருச்சியில் கேட்ட ஆலந்தூர் சகோதரர்களுடையது. மாற்றி மாற்றி ஸ்வரம் பாடுவதிலும், மிகவும் கச்சிதமான பிடிகளிலும் வேலைப்பாடுகளிலும் இவர்களிடம் அமைந்திருக்கும் பிரத்யேக அழகு ஒரு புறம். அத்துடன் இவர்கள் ராக ஆலாபனைகளிலும் பங்கிட்டு பண்ணிய கற்பனைச் சஞ்சாரங்களைப் பணியாய் அடுக்கும் முறையும் வியக்கத்தக்கது. அன்று பாடிய நாசிகாம்போதி, தோடி, பைரவி ராகங்களில் இரண்டாவது மிகச் சிறப்பாயிருந்தது. அதன் உருப்படியில் கோர்த்த ஸ்வரம் எல்லாவற்றையும் தூக்கியடித்தது.

9வ. சென்னையில் நடந்த குன்னக்குடி வெங்கடராமய்யரின் கச்சேரியும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. நயமான குரல், நல்ல உதவுபடி, சிறந்த ஞானம், நாஸுக்கான வழியெல்லாம் சேர்ந்திருந்தன. பெரிய பரம்பரையில் வந்தவர் அல்லவா? பூர்வி கல்யாணி, நாயகி, சங்கராபரண ராகங்கள் நல் வடிவங்களாயிருந்தன. உருப்படிகளில் ராகபாவமும் சுகபாவமும் ததும்பியிருந்தன. 'அக்ஷயலிங்க விபோ'வில் நிரவல் ஸ்வரம் ஜோர். கடைசியில் கேட்ட பாகேச்வரியும் அப்படியே.

5வ. சென்னையில் பாடிய திட்டை கிருஷ்ணய்யங்காரின் கச்சேரியை அடுத்தாற் போல் குறிப்பிட வேண்டும். சாரீர நயத்திலோ சுகபாவத்திலோ அல்லாமல் ஞான பாவத்திலான சிறப்பு. சாதகத்திலான உதவுபடி. ஸஹானா, கரஹரப்ரியாவுடன் ஒரு ராகமாலிகையையும் திறம்படக் கையாண்டார்.

இவை தவிர இரண்டு இளம் பாடகர்களின் கானங்களும் உயர்தரமாயிருந்தன. ஒன்று 7வ. திருச்சியில் பாடிய தஞ்சாவூர் டி. எம். தியாகராஜனுடையது. ஞானபாவம், கற்பனைப் பொழிவு, பாணி அழகு இவை கொண்டது. தோடி, ஸிம்மேந்திர மத்யம ராகங்கள் தேர்ந்தியாயிருந்தன. சங்கராபரணத்தில் தானமும் பல்லவியும் பாடி ஞானச் சிறப்பைக் காட்டினார். ராக பாவத்தில் செலுத்திய முழு கவனத்தில் சாஹித்யத் தெளிவின் அவசியத்தைச் சற்று மறந்து விட்டார் போலும்.

மற்றொன்று 12வ. சென்னையில் கேட்ட எஸ். வி. பார்த்தசாரதியினுடையது. கனகனத்த சாரீரம், விரு விருப்பான வழி. வழக்கம் போல் பெரும்பாலும் மத்யமகால நடையிலேயே எல்லாவற்றையும் பாடினார். எடுத்ததும் ராகஸ்வரூபங்களை எளிதில் விளக்கும் திறமை குறிப்பிடத்தக்கது. தோடி, பேகடா, சாவேரி ராகங்கள் சிறந்து விளங்கின. சாவேரி உருப்படியில் நிரவல் நன்றாயிருந்தது.

• • •

1வ. காலை ரேடியோவைத் திறந்ததும் சென்னையிலிருந்து இரு இனிய குரல்கள் சேர்ந்து இழையும் கானம் காதில் பட்டது. ராகங்களைவிட உருப்படிகளே ரஸிக்கத் தக்கவை. பாடியவர்கள் ராஜம், சுந்தரி.

மாலையில் பாடிய கே. தேவநாராயணனின் பூர்வி கல்யாணியும் சிந்து பைரவியும் ஒழுங்காயிருந்தபோதிலும், இவர் பாட்டு மேம்பட அநேக இடமுண்டு.

4வ. சென்னை ரேடியோ நிலைய நிகழ்ச்சிகளில் ஏ. சுப்பிரமணியத்தின் வீணையும், வைக்கம் ஸரஸ்வதியின் பாட்டும் குறிப்பிடத்தக்கவை. அழுத்தமும் நிதானமும் கொண்டு முன்னவர் ஸஹானா, காம்போதி, காமவர்த்தனி ராகங்களைத் திறம்பட வாசித்தார். பின்னவர் இனிமையும் கனிப்பும் கொண்ட குரலில் பந்துவராளி, தோடி, சங்கராபரண ராகங்களில் சக்கைப்போடு போட்டார். அன்று அதே நிலையத்தில் கேட்ட ஆர். ராஜகோபாலனின் பூர்விகல்யாணி தேர்ந்தியாயிருந்தது.

5வ. சென்னையில் டி. எஸ். ஞானம்பாள் வழக்கம்போல் தைரியமாய் கல்யாணி, பைரவி ராகங்களை விளாசினார். கல்யாணி பத்மநாபன் சங்கராபரணத்தை ஒழுங்காய் விளம்பியதோடு உருப்படிகளின் சாஹித்யத்தையும் தெளிவாய் வழங்கினார்.

6வ. நாடோடியின் 'காரியதரிசி' என்பதைப் பற்றிய சொற்பொழிவு ரஸமாயிருந்தது. பிரபுக்களின் சொந்தக் காரியதரிசியின் மகத்துவத்தையும், சங்கப் பொதுக் காரியதரிசியின் பரிதாப நிலையையும் ருசிகரமான உபமானங்களுடன் வர்ணித்தார். முன்னவரின் தயவில்லாது முதலாளியின் குடும்பக் காரியங்கள் கூட நன்கு நடக்க முடியாது. பின்னவருக்குப் பொறுப்பும் பழியும் அவதியுமே தவிர வேறில்லை. இத்துறையில் நன்கு அடிபட்டிருக்கும் என்போன்றவருக்காகத்தான் நாடோடி பேசினாரோ என்றுகூடச் சந்தேகப்பட்டேன்.

7வ. சென்னையில் டி. பொம்மா மதுரமான குரலில் நிதானமும் அழுத்தமும் கொண்டு தோடி, ஸாரங்கா, பூர்விகல்யாணி ராகங்களையும் உருப்படிகளையும் சுகமாய்ப் பரிமளித்தார். அதே நிலையத்தில் கேட்ட புவனேஸ்வரியின் கானமும் கவனத்தை யீர்த்தது.

8வ. சென்னையில் ஜி. சீதா, திருச்சியில் வி. ஏ. சாம்பசிவன், பந்தநல்லூர் ராஜாயீ இவர்களின் கச்சேரிகள் கேட்கத் தகுந்தவைகளாயிருந்தன.

9வ. திருச்சியில் நடந்த பந்தநல்லூர் எம். முத்தையா பிள்ளையின் வயலின் கச்சேரியும் குறிப்பிடத்தக்கது. சாவேரி, சங்கராபரணம், காம்போதி, பைரவி ராகங்களைப் பாவப் பொழிவுடன் வாசித்தார்.

11வ. சென்னை நிலையத்தில் மூன்று கச்சேரிகள் உயர்ந்த ரகமாய் மனம் கவர்ந்தன. கே. எஸ். சந்திரசேகரய்யா நன்றாய் அனுபவித்து உருக்கமாய்ப் பாடினார்.

பாலபத்மநாபன் தங்கு தடையில்லாத உதவுபடியுள்ள குரலில் சௌக்கியமாய் ராகங்களை விட்டுப் பாடித் தன் திறமை முழுவதையும் விளக்கினார்.

என். ராஜலக்ஷ்மி இனிய குரலில் கச்சிதமாய்ப் பாடினார். பேகடா, கல்யாணி, சங்கராபரண ராகங்கள் நல் வடிவங்களாயிருந்தன. உருப்படிகளில் நிரவல் ஸ்வரங்கள் தேர்ந்தியாயிருந்தன.

## கவிஞர் சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்

எழுதியுள்ள

## அரிய தமிழ் நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மலரும் மாலையும் (மூன்றும் பதிப்பு) | விலை ரூ. | 6 | 0 | 0 |
| 2. ஆசிய ஜோதி (இரண்டாம் பதிப்பு) | ,, | 2 | 0 | 0 |
| 3. நாஞ்சில் நாட்டு மான்மியம் | ,, | 1 | 0 | 0 |

இந்த மூன்று புத்தகங்களுக்கும் முன் பணம்
ரூ. 9—0—0 அனுப்பினால் தபாற் செலவு இன்றி அனுப்பப்பெறும்.

★

### "கல்கி"

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மகுடபதி | .... | விலை ரூ. | 4 | 0 | 0 |
| சாரதையின் தந்திரம் | .... | (ஸ்டாக் இல்லை) | | | |

✶

### ராஜாஜி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் 1. கதைகள் | .... | (ஸ்டாக் இல்லை) | | | |
| மலர் 2. கட்டுரைகள் | .... | விலை ரூ. | 4 | 8 | 0 |

✶

### காந்திஜி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாணவருக்கு | .... | இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவரும் | | | |
| பெண்களுக்கு | .... | விலை ரூ. | 6 | 0 | 0 |
| நமது மொழிப் பிரச்னை | .... | ,, | 2 | 8 | 0 |

## புதுமைப் பதிப்பகம் லிமிடெட்,

காரைக்குடி.

# முதல் நாள் யுத்தம்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

கௌரவர்கள் பட்சத்தில் அநேகமாக துச்சாதனன் சேனையின் முன்னணியில் சென்றான். அவ்வாறே பாண்டவர்கள் பட்சத்தில் பீமன் முன்னால் சென்றான். சிம்மநாதங்களும் சங்க கோஷங்களும் கொம்பு வாத்தியங்களும் பேரிகைகளின் கொட்டு முழக்கும் குதிரைகளின் கனைப்பும் யானைகளின் பிளிறலும் சேர்ந்து வானளாவிய முழக்கம் உண்டாயிற்று. அம்புகள் விசையுடன் செல்லும்போது கொள்ளி நட்சத்திரங்கள் போல் ஜ்வலித்தன. தகப்பன் பிள்ளையைக் கொன்றான். மகன் தகப்பனைக் கொன்றான். மருமகன் மாமனைக் கொன்றான். மாமன் மருமகனைக் கொன்றான்.

முதல் நாள் முற்பகலில் பாண்டவ சேனை பீஷ்மருடைய தாக்குதலைக் கண்டு நடுக்கமுற்றது. அவருடைய ரதம் சென்ற வழி எல்லாம் கால தேவதையின் தாண்டவமாக இருந்தது. அருச்சுனன் மகன் அபிமன்யு இதைக் கண்டு பொறுக்காமல் பிதாமகரை எதிர்த்தான். இருபக்கத்துப் படைவீரர்களுக்குள் வயதில் சிறியவனாகிய அபிமன்யு அனைவரிலும் மூத்தவரான பிதாமகரை எதிர்த்துத் தடுத்ததை தேவர்களும் நின்று பார்த்தார்கள். அபிமன்யுவின் தேர்க் கொடியில் கர்ணிகார மரம் பொன்னால் சித்திரிக்கப்பட்டு விளங்கிற்று. கிருதவர்மனை ஒரு பாணத்தாலும் சல்லியனை ஐந்து பாணங்களாலும் பீஷ்மரை ஒன்பது பாணங்களாலும் அடித்தான். ஒரு அம்பினால் துர்முகனுடைய சாரதியின் தலை அறுபட்டுக் கீழே விழுந்தது. மற்றொரு பாணம் கிருபருடைய வில்லை ஒடித்தது. அபிமன்யுவின் யுத்த லாகவத்தைக் கண்டு தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள். பீஷ்மரும் அவரைப் பின்பற்றிய வீரர்களும் தனஞ்செயனுக்குத் தகுந்த மகன் இவன் என்று பாராட்டினார்கள். பிறகு பல கௌரவ வீரர்கள் அவனைச் சுற்றிக்கொண்டு தாக்கினார்கள். அபிமன்யு அசையவில்லை. பீஷ்மர் வில்லினின்று விடுபட்ட அம்புகளையெல்லாம் அவன் தன்னுடைய அம்புகளால் துண்டித்தான். லட்சியம் தவறாமல் அவன் எய்த பாணங்களில் ஒன்று பீஷ்மருடைய பனைமரக் கொடியை அறுத்து பூமியில் வீழ்த்திற்று. பீஷ்மருடைய கொடி கீழே அறுபட்டு விழுந்ததைக் கண்டு பீமன் பெருமகிழ்ச்சி அடைந்து உரத்த சிம்மநாதம் செய்தான். பெரியப்பனுடைய சிம்மநாதத்தைக் கேட்டு அபிமன்யு மேலும் உற்சாகமடைந்தான்.

பாலனுடைய அற்புதப் போரைக் கண்டு பீஷ்மர் மனம் பூரித்தார். தன் முழு பலத்தையும் அவன்மேல் பிரயோகிக்க வேண்டியதாயிற்றென்று வருத்தப்பட்டார். அபிமன்யுவின் மேல் பிதாமகருடைய வில் சரமாரி பொழிந்தது. விராடனும், அவன் மகன் உத்தரனும், துருபத குமாரனான திருஷ்டத்யும்னனும், பீமனும், எல்லாரும் அபிமன்யுவைக் காப்பாற்ற ஓடி வந்து பிதாமகரைத் தாக்கினார்கள். பீஷ்மர் அபிமன்யுவை விட்டு விட்டு அவர்களை எதிர்க்க ஆரம்பித்தார்.

* * *

விராடன் மகன் உத்தரன் அச்சமயம் யானையின்மேல் ஏறிச் சென்று சல்லியனை எதிர்த்தான். தேர்க் குதிரைகள் நான்கும் யானையால் மிதி

பட்டு இறந்தன. இவ்வாறு தாக்கப்பட்ட சல்லியன் சக்தியாயுதத்தை உத்தரன்மேல் வீசி எறிந்தான். அது உத்தரனுடைய கவசத்தைப் பிளந்து உள் சென்றது. அவன் கையிலிருந்த அங்குசமும் தோமரமும் நழுவி விழுந்தன. யானைப் பிடரியினின்று உத்தரன் பிரேதமாகக் கீழே விழுந்தான். யானை சல்லியனைத் தாக்குவதை நிறுத்தவில்லை. சல்லியனும் கத்தியை எடுத்து யானையைத் தாக்கினான். துதிக்கை அறுபட்டு மர்மஸ்தானங்களில் பாணங்களால் அடிபட்டு யானையானது பயங்கரமான சப்தம் போட்டுக் கொண்டு கீழே விழுந்து மரித்தது. பிறகு சல்லியன் கிருதவர்மனுடைய தேரில் ஏறினான். அப்போது விராடனுடைய புத்திரன் சுவேதன் தன் தம்பி உத்தரன் கொல்லப்பட்டதைக் கண்டு நெய்விட்ட அக்கினியைப் போல் ரௌத்ராகாரமாகத் தன் ரதத்தைச் சல்லியனை நோக்கி ஓட்டிவந்தான். சல்லியன் மிருத்யுவின் வசமாய்விடுவான் என்று ஏழு ரதிகர்கள் அவனைக் காப்பாற்றுவதற்காக மிகவும் விரைவாக வந்து அவனை சுற்றுப்புறமும் சூழ்ந்து கொண்டு போர் செய்தார்கள். மேகங்கள் மின்னுவதைப் போல் ஜொலிக்கும் வில்கள் சுவேதன் பேரில் அம்பு மழை பொழிந்தன. கௌரவ வீரர்களின் விற்களை சுவேதன் தன் பாணங்களினால் அறுத்தான். அவர்கள் ஏழு பேரும் ஏழு சக்திகளைச் சுவேதன் பேரில் வீசினார்கள். அவன் அவற்றை உடனே ஏழு பல்லங்களாலே துண்டித்தான். சுவேதன் செய்த யுத்தத்தைக் கண்டு இரு பட்சத்து சேனை வீரர்களும் வியந்தார்கள். சல்லியனுடைய ஆபத்தான நிலைமையைக் கண்டு துரியோதனன் ஒரு பெரும் படையை அந்த இடத்திற்குச் செலுத்தினான். அதன்மேல் பயங்கரப் போர் நடந்து ஆயிரக்கணக்கில் வீரர்கள் மாண்டார்கள். தேர்கள் உடைந்து வீழ்த்தப்பட்டன. யானைகளும் குதிரைகளும் ஆயிரக்கணக்கில் செத்தன. சுவேதன் துரியோதனனுடைய படையைத் துரத்தி யடித்து பீஷ்மரைத் தாக்கினான். இருவருக்கும் கோரமான யுத்தம் நடந்தது.

பீஷ்மருடைய தேர்க் கொடியைச் சுவேதன் அறுத்துத் தள்ளினான். பீஷ்மர் சுவேதனுடைய தேர்க் குதிரைகளையும் கொடியையும் சாரதியையும் வீழ்த்தினார். அப்போது சுவேதன் ஒரு சக்தி ஆயுதத்தை எடுத்துப் பீஷ்மர்மேல் எறிந்தான். அதைப் பீஷ்மர் தன் பாணத்தால் தடுத்து விட்டார்.

அதன்பின் சுவேதன் கதாயுதத்தை எடுத்துச் சுழற்றி பீஷ்மருடைய தேரின் மேல் எறிந்தான். தேர் ஒடிந்து பொடியாகும் என்று தெரிந்த பீஷ்மர் தேரினின்று கீழே குதித்தார். அந்தக் கணம் கொடிமரத்துடன் தேர் சுக்கு நூறாயிற்று. பிதாமகர் கோபம் மேலிட்டு வேறு தேரின்மீதேறி வில்லை நன்றாக வளைத்து ஒரு அம்பைச் சுவேதன்மேல் செலுத்தினார். விராடன் மகன் சுவேதனும் யமாலயம் சென்றான். துச்சாதனன் வாத்திய கோஷங்களோடு வெற்றிக் கூத்து ஆடினான். அதன் பிறகு பாண்டவ சேனையைப் பிதாமகர் தாக்கினார்.

* * *

முதல் நாள் யுத்தத்தில் பாண்டவ சேனை மிகவும் துன்புறுத்தப்பட்டது. தருமபுத்திரன் பயந்தான். துரியோதனனுடைய மகிழ்ச்சியோ கரைபுரண்டு ஓடிற்று. பாண்டவர்கள் கிருஷ்ணனிடம் வந்து "என்ன செய்வோம்?" என்று ஏங்கி ஆலோசனை செய்யலானார்கள்.

கிருஷ்ணன் யுதிஷ்டிரனைப் பார்த்து, "பரத சிரேஷ்டரே! கவலைப்படாதீர். சூரர்களான தம்பிகளைப் பெற்றிருக்கிறீர். நீர் ஏன் பயப்படுகிறீர்? சாத்யகியும் விராடனும் துருபதனும் திருஷ்டத்யும்னனும் நானும் இருக்க உமக்கு ஏன் விசாரம்? பீஷ்மருடைய மரணத்துக்காகவே சிகண்டி காத்திருப்பதை மறந்தீரா?" என்று தேற்றினார்.

## சென்னை ஆஸ்பத்திரியில்!



அஸிஸ்டெண்ட்:—டாக்டர் ஸார்! காலையில் ஆபரேஷன் செய்தீர்களே அந்த நோயாளிக்கு இன்னும் பிரக்ஞை வரவில்லையே!

டாக்டர்:— நீ உடனே போய் அந்த நோயாளி காதில் விழும்படி 'பக்கத்துத் தெருவில் ஒரு வீடு காலி இருக்கிறது' என்று சொல். உடனே பிரக்ஞை வந்துவிடும்.

## நீங்கள்

## வந்து

## ஒத்திட்டுப்

## பாருங்கள்

உயர் ரக வைரங்களுக்கு மாற்று கிடையாது. அது போலவே அவற்றை நல்ல விலையில்தான் வாங்க முடியும். வைரங்களின் ரகம், மதிப்பு பற்றி சந்தேகமே கூடாது. பாபாலாலில் நிபுணர்களால் பொறுக்கி வைக்கப்பட்ட வைரங்கள் உள்ளன. ஆகவே, நீங்கள் பாபாலாலில் வைர நகைகளை வாங்கினால், சந்தேகத்திற்கே இடமிருக்காது.

●

# பாபாலால்

**கீர்த்தி வாய்ந்த நகை வியாபாரிகள்.**

**மதராஸ்**



## கல்யாண

## காலங்களுக்கு

ஏற்ற அசல் கொள்ளேகாலம் பட்டு சேலைகள் பல ரகங்களில், கண்ணைக் கவரும் கலர்களில், ரம்மியமான முகதலைச் சீர்களில் அபூர்வமான பார்டர்களில், எங்கள் சொந்தக் கைத்தறிகளில் தயாரித்து ஸ்டாக் செய்துள்ளோம்

★

**எங்கள் ஜரிகை வேலைப்பாடு ஓர் ஸ்பெஷல் ரகம்**

★

**இன்றே நேரில் பார்வையிடுங்கள்**

# ராதா ஸில்க் எம்போரியம்

**1/14, ஸன்னதித் தெரு**

**மயிலாப்பூர் :: சென்னை**

போன் : 8016

பிராஞ்ச :

**பெரிய தெரு - கும்பகோணம்**

# யோக ஜாதகம்

— வி.கணேசன் —

ரிஜிஸ்திரார் கணேசன் அப்பொழுது வெறும் இன்ஸ்பெக்டராகத்தான் இருந்தான். குடுமிதான் வைத்துக் கொண்டிருந்தான். அவன் எப்பொழுது கிராப் வைத்துக் கொண்டான், ஏன் ரிஜிஸ்திரார் வேலை ஆயிற்று என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் இக் கதை முழுவதையும் படிக்கத்தான் வேண்டும். படிக்கத் தெரியாதவர்கள் படிக்கக் கேட்டாலும் போதும்.

கணேசன் அந்தத் தாலூகா முழுவதிற்கும் இன்ஸ்பெக்டராக இருந்த போதிலும் அவனை அந்த ஊரில் தெரிந்தவர்கள் வெகு சிலரே. அந்த ஊருக்கு மாற்றலாகி வந்து ஒரு வருஷம் ஆன போதிலும் அவன் இருக்கும் தெருவில் உள்ளவர்களுக்கும் அவனைப் பற்றித் தெரியாது. அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் அவன் ஆசைப்படவில்லை. "நாம் உண்டு, நமது கணக்கு உண்டு" என்று இருந்த அப்பாவி அவன். காதில் கடுக்கனில்லாமல் கைவிரலில் மட்டும் ஒற்றைக் கல் வைரமோதிரம் அணிவது அவ்வளவு நாகரிகமா என்பதை யோசியாமல் அந்த ரிஸ்டு வாட்சையும், மோதிரத்தையும் குளிக்கும் போது தவிர— கையைவிட்டுக் கழற்றுவதே இல்லை.

கணேசனைப் பற்றி இவ்வளவு அடையாளம் சொல்லியும் அவனைத் தெரிந்து கொள்ளாதவர்கள் அவனை நேரில் பார்த்துவிட வேண்டியதுதான். ஆனால் அதுவும் அவ்வளவு சுலபமான காரியமல்ல. அவன்தான் மாதத்தில் முப்பது நாளும் ஊரில் இருப்பதில்லையே! எந்த கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் மூன்று நாள் சேர்ந்தாற்போல் ஒரு இடத்தில் இருக்க முடியும்? ஒவ்வொரு கிராமத்திலுள்ள கூட்டுறவுச் சங்கமும் கணேசன் வருகையைத் திகிலுடனும் ஆவலுடனும் எதிர்பார்த்திருக்கிறது. அச் சங்கங்களில் அவன் சொன்னதுதான் கணக்கு. அவன் பார்த்துப் போட்டதுதான் லாபம்.

அவனுக்கு இஷ்டமில்லாவிட்டால் அந்த அனுமத்து இனத்தை அதிகமாக்கி, லாபத்தை நஷ்டமாக்கி, நஷ்டத்தை லாபமாக்கி 'ஏ' வகுப்புச் சங்கத்தை 'சி' வகுப்புக்கும் 'டி' வகுப்புச் சங்கத்தை 'பி' வகுப்புக்கும் மாற்றி, செய்ததை ஏன் செய்தாய் என்று கேட்டு, செய்யாததை ஏன் செய்யவில்லை என்று அதட்டி, கணக்குப் புஸ்தகங்களைச் சிவப்பு மையாலும், நீலப் பென்சிலாலும் கிறுக்கி, கடைசியில் கையிருப்புத் தொகை எங்கே என்று கேட்கும்போது சங்கத்தின் தலைவருக்கு மயக்கம் வராமலிருக்க முடியுமா? எப்பொழுதும் புன்சிரிப்புடன் இருக்கும் அவன் இப்போது ஏன் அப்படி எரிந்து விழுகிறான்? கணக்குப் புஸ்தகங்களைத் தொப்பென்று கீழே போடுகிறான்? உள்ளங்கையை விரலால் தேய்க்கிறான்? இரண்டு நாளாகச் சாப்பாடு இல்லாமல் கடலையையும் மோரையும் சாப்பிட்டு விட்டுக் கணக்குப் பார்ப்பதென்றால், காலேஜில் படிக்கும் போது காலந்தவறாமல் காப்பி குடித்துப் பழகிய அவனுக்குத் தலையைச் சுற்றாமலும், கோபம் வராமலும் இருக்குமா?

## 2

பசுபதி அய்யர் (பெயர் எதுவாக இருந்தால் என்ன? இனி இக் கதையில் அவர் பெயர் வராது.) அந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தும், ஒரு பைசாவுக்குக்கூடத் தன்னை இன்ஷ்யூர் செய்து கொள்ளவில்லை. அவர் அவ்வளவு சீக்கிரமாக இறந்து போனபோதிலும், அவர் மனைவிக்கு அக்கிரஹாரத் தெருவில் இரண்டு மெத்தை வீடுகளும், நஞ்சை நூறு வேலியும், ஐம்பதினாயிரம் ரூபாய் ரொக்கமும், உடம்பு நிறைய நகைகளும் வீடு நிறையச் சாமான்களும், ஆசைக்கொரு அருமையான பெண்ணும் இருந்தன.

ஆஸ்திக்கு ஒரு பிள்ளை இல்லையே என்ற கவலையைத் தன் பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை தேடுவதின் மூலம் மறந்துவிட நினைத்தாள் பருவதம்மாள். "அவர் உயிருடன் இருந்தால் இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு நாள் (பதினொன்று வயதுக்குள்ளேயே?) கலியாணமாகி இருக்காதா!" என்று சதா

வருத்தப்படுவதுண்டு. தன் பெண் கலியாண விஷயமாக அவன் எடுத்துக் கொண்ட முயற்சி கொஞ்ச நஞ்சம் இல்லை. தபால்காரனுக்குக்கூட அட்வான்ஸ் கொடுத்து விட்டான். இன்ஷ்யூரன்ஸ் தபால்கள் நிறைந்திருந்த ஆபீஸ் பைல்களில் ஆயிரக்கணக்கான ஜாதகங்கள் திணித்து வைக்கப்பட்டிருந்தன.

ஜாதகம் பொருத்தமாயிருந்தால் சொத்து இல்லை, சொத்து இருந்தால் குணம் இல்லை, குணமிருந்தால் அழகு இல்லை. எல்லாமிருந்தால் படிப்பு இல்லை. படிப்பு இருந்தால் வேலையில்லை. இவ்விதம் ஒவ்வொரு வரனுக்கும் ஏதாவது குண தோஷம்.

"ஏதோ நல்ல இடமாய், பையன் கண்ணுக்கு லட்சணமாய், சாதுவாய், நன்றாய்ப் படித்தவனாய், ஏதோ மாதம் நூறு, இருநூறு சர்க்கார் வேலையிலே சம்பாதித்துக் கொண்டு, குடும்பத்தில் நாத்தனார், மாமியார் என்று அதிகம் பிடுங்கல் இல்லாமல் கொஞ்சம் நிலபுலமும் இருக்கிறவனாய்க் கிடைத்து, ஜாதகமும் பொருத்தமாயிருந்தால், அவனுக்கு என் லலிதாவைக் கொடுக்கிறதற்குத் துளிக்கூட ஆட்சேபனை கிடையாது" என்று அவன் சாஸ்திரிகளிடம் அடிக்கடி சொல்லுவதுண்டு.

ஒருநாள் பார்வதம்மாள், "அன்று சுக்ர நாடியில் ஏட்டுச் சுவடி எடுத்துப் பார்த்ததில் இந்தப் பெண்ணுக்கு வரும் புருஷனின் பெயர் கணேசன் என்றும், அவன் இன்ஸ்பெக்டர் வேலையில் இருப்பான் என்றும் எழுதியிருந்ததே, பம்பாயில் வேலையாயிருக்கும் என் நாத்தனார் பிள்ளை கணேசன் ரயில்வேயில் இன்ஸ்பெக்டராகத்தானே இருக்கிறான்? அவன் ஜாதகத்தைப் பொருத்தம் பாருங்கள்" என்று ஜோஸ்யரிடம் காட்டினாள். அதைப் பார்த்த அந்த சாஸ்திரிகள் விரல்களை எண்ணினார். உதட்டைப் பிதுக்கினார். "ஏன், என்ன யோசனை?" என்று பார்வதம்மாள் கேட்டதற்கு, மற்ற எல்லா பாவங்களும் ரொம்ப திவ்யமாயிருக்கிறது. நல்ல யோகமுள்ள ஜாதகந்தான். ஆயுள்பாவம் மட்டும் ......" என்று இழுத்தார்.

இதைக் கேட்ட பார்வதம்மாள் மிகுந்த ஏமாற்றமடைந்தாள். சாஸ்திரிகள்மீது கோபம் வந்தது. "சுக்ரநாடி பொய் சொல்லுமா? என் பெண்ணுக்குத் தீர்க்கமான மாங்கல்ய பலம் இருக்கிறதென்று எழுதியிருக்கு. எப்படி அவனுக்கு அல்பாயுஸ் ஏற்பட்டது? எந்த ஜோஸ்யத்தை நம்புவது?" என்று கேட்டாள். ஆனால், பாவம்! சுக்ர நாடியை நம்பிக் கலியாணத்தை முடிக்க, அவள் தயங்கினாள். இந்த இக்கட்டான நிலைமையில் பார்வதம்மாளுக்கு ஒன்றும் தோன்றவேயில்லை. தன் தெய்வங்களையெல்லாம் பொட்டலம் கட்டிக் கேட்டாள். ஒரு கோவிலிலாவது இந்தக் கலியாணத்திற்கு உத்தரவு கிடைக்கவே இல்லை. போகும் வழிதான் என்ன?

## 3

ஐந்து வருஷங்களுக்கு முன் கணேசன் தன் இருபதாவது வயதில் இந்தக் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் வேலையில் அமர்ந்தபோது இப் பரந்த பூவுலகில் அவனுடையது என்று சொல்லக் கூடியது ஒன்றுமில்லை. ஐந்தாவது வயதில் தந்தையை இழந்து தாயினால் சம்ரக்ஷிக்கப்பட்ட அவனுடைய அருமைத் தாயாரை, தான் அரும்பாடு பட்டு வளர்த்து வாசிக்க வைத்த தன் மைந்தன் இரண்டு காசு சம்பாதிப்பதைத்



தன் கண்ணால் கண்டு களிக்க விடாமல் பாழும் யமன் கொண்டு சென்றான். அன்று முதல் கணேசன் அனாதையாய் உலகில் விருப்பு வெறுப்பு இன்றி, தன்னைப் பற்றிக் கவலை கொள்ளக் கூடியவர் இல்லாமல், தானும் தன்னைப் பற்றிச் சிந்தனை செய்ய நேரமில்லாமல், ஆடிட் வேலையை அப்பழுக்கின்றி நிறைவேற்றி வந்தான். படிப் பணத்தில் காலந் தள்ளி வந்த அவனுக்கு மாதச் சம்பளம் ரூபாய் நூறும் மிச்சம் ஆகவே, இந்த ஐந்து வருஷத்தில் கணேசன் ரூபாய் ஆறாயிரம் வரை சேமித்தது ஆச்சரியமில்லை.


கட்டளைமேட்டு வாய்க்கால் ஏற்படுவதற்கு முன் அந்தக் காடுகள் முழுவதும் சப்பாத்திக் கள்ளி நிரம்பி யிருந்தது. தான் சேமிக்கும் பணத்தை பாங்குகளில் போட்டு வைத்தால் தன் பேரில் சர்க்காருக்கு அவநம்பிக்கை ஏற்படும் என்று பயந்த அவன், அதைத் தனது தூர பந்து ஒருவரிடம் கொடுத்து வந்தான். அவர் மிகவும் நல்லவர் தான். ஆனால் காலம்தான் பொல்லாததா யிருந்தது. அவருக்குத் திடீரென இப்படிக் கஷ்டங்களும் மரணமும் நேருமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர் கணேசனை மட்டும் மோசம் செய்யவில்லை. தன் சொத்தில் மிஞ்சிய காடாரம்பக் கிராமம் முழுவதையும் அவன் பணத்துக் கீடாக அவனுக்கு எழுதி வைத்துவிட்டுப் போனார்.



செல்வம் வரும்போது தேங்காய்க்குள் இளநீர் போல வரும் என்ற வாக்கு பொய்யாகுமோ? மேற்படி காடுகள் கணேசன் பேரில் பட்டா ஏற்பட்ட மறு வருஷம் சப்பாத்திப் பூச்சிகள் ஏற்பட்டு ஒரு சப்பாத்திகூட (ஹோட்டல்களைத் தவிர) இல்லாமல் அழிந்து விட்டது. காவேரியின் ஜலம் காடாரம்பங்களையும் நஞ்சையாகச் செய்யும் என்ற உண்மை கவர்ன்மெண்டாருக்குப் புலப்பட்டது. கட்டளைமேட்டு வாய்க்கால் வெட்டப்பட்டதால், காடாரம்பங்கள் செழிப்புள்ள நஞ்சையாய் ஏக்கர் ஆயிரம் ரூபாய் பெறுமானதாய் ஆனதில் கணேசன் லக்ஷாதிகாரியாக ஆகிவிட்டான். தன் கீழ் பல காரியஸ்தர்களை வைத்துக் கொண்டு தன் கிராமத்தைப் பார்த்து வந்த போதிலும், கணேசன் தன் வேலையை மட்டும் விடவில்லை. அவன் அதிர்ஷ்டம் முழுவதும் அந்த வேலையின் மூலம் ஏற்பட்டது என்பதை அவன் மறக்கவில்லை.

நாள் ஆக ஆக, கலியாணத்திற்காகச் செய்து வைக்கப்பட்டிருந்த அப்பளங்களும் தீர ஆரம்பித்தபோது பருவதம்மாளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் வைராக்கியம் குறைய ஆரம்பித்தது. மணமகனுக்குக் குறிக்கப்பட்ட யோக்கியதாம்சங்கள் ஒன்றிரண்டு இல்லாமல் இருந்தாலும் பரவா யில்லை என்று மனது சமாதானம் அடைய ஆரம்பித்தது. ஆனால் பம்பாய் வரனுக்குக் கொடுப்பதைப் பற்றி மட்டும் இளவாகவே இருந்தது. நாத்தனாருக்குப் பின்னை இருக்கும்போது வெளி இடங்களில் கொடுக்கவும் அச்சமா யிருந்தது. "உன் பின்ளைக்கு அல்பாயுஸ்" என்று அவர்களிடம் எப்படிக் காரணத்தை வெளியிடுவான்? கடைசியில் ஜாதகம் மட்டும் எல்லா அம்சங்களும் பொருந்தினால் போதும் என்ற முடிவிற்கு வந்து விட்டான். அவனுக்குத்தான் ஆதனூர் ஜோசியர் சொல்லி யிருக்கிறாரே? "அவனுக்கு வரும் மாப்பிள்ளைக்கு யோகம் சொல்லி முடியாது" என்று. லலிதாவைக் கலியாணம் செய்து கொண்ட பிறகு அவனால் எல்லாம் ஏற்பட்டு விடுகிறது என்று விருப்பும் வெறுப்பும் கலந்த தொனியில் பேசினான். வரும் மாப்பிள்ளைக்கு அழகுகூட லலிதாவின் யோக ஜாதகத்தால் ஏற்பட்டுவிடும் போலும்!

['தெய்வம் என்று ஒன்று உண்டு' சாஸ்திரங்களில் உண்மை இருக்கிறது'




பையன்:—பள்ளிக்கூடத்தில் இன்றைக்கு முதல் முதலாக மசியால் எழுதக் கற்றுக் கொண்டோம், அம்மா!

என்பதை நம்பாதவர்கள் இனி இக் கதையைப் படிக்கவேண்டாம். படித்து விட்டு, பிறகு 'கதை அளக்கிறான்!' என்று சொல்ல வேண்டாம்.]

கணேசனை "லலிதா விஹார"த்திற்கு அடுத்த வீட்டில் குடி வரச் செய்தது தெய்வ சங்கல்பமாகத்தான் இருக்க வேண்டும். அவன் அங்கு வந்திரா விட்டால் லலிதா அவனைப் பார்த்திருக்க முடியாது. தினம் பொழுது விடிந்து பொழுது போனால் பணம் சம்பாதிப் பதிலேயே லயித்துக் கிடந்த அவன் மனம், அந்த அடுத்த வீட்டுப் பெண் "அவனியில் ஆடவர் உன்னமே வைர மதோ!" என்ற பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாடுவதில் பொதிந்து கிடந்த பிரேமையையும் தாபத்தையும் அறிய ஆரம்பித்தது.

இப்பொழுதெல்லாம் கணேசன் அதிகமாக வெளியில் 'காம்ப்' தங்குவதில்லை. ஏதோ ஒரு சக்தி அவனை வேலையைச் சட்டென்று முடித்துக்கொண்டு திரும்ப வீட்டிற்கு வரத் தூண்டியது. வீட்டில் இவன் ரேடியோவில் திருச்சி ஸ்டேஷன் வைத்தால் அடுத்த வீட்டிலிருந்து பலமாகச் சென்னை ஸ்டேஷன் பாடும். இவன் சென்னையைத் திருப்பினால் உடனே அடுத்த வீட்டில் மைசூர் கேட்கும்.

4

ஒரு நாள் அவர்கள் வீட்டு மாடியில் உலர்த்தப் பட்டிருந்த அந்தப் பெண்ணின் உடைகள் காய்ந்து காற்றில் இவன் வீட்டு மாடியில் விழுந்து கிடந்தன. அதைக் கண்ட அவன் அவைகளை எடுத்துத் தன் மேஜை மீது கொண்டு வந்து வைத்துக் கொண்டான். சாயங்காலம் தன் துணிகளை எடுக்க வந்த அந்தப் பெண் அவை தன் மாடியில் இல்லாமல் அடுத்த வீட்டு மேஜை மீதிருந்ததை ஜன்னல் வழியாகக் கண்டு தைரியமாய் இறங்கி வந்து அதைக் கொடுக்கும்படி கேட்டாள், "நான் தவறிப் போய் உங்கள் ஆத்தில் விழுந்து விட்டால் என்னைக் கூட எடுத்து வைத்துக்கொண்டு விடுவேன்போலிருக்கே!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே துணிகளை எடுத்துக் கொண்டு போனாள் லலிதா. அந்தக் குறுகுறுப்பான முகத்தில் கன்னங்களில் தோன்றிய குழிகள் கணேசனை அவன்முன் கோழையாகச் செய்தது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, அடிக்கடி அவளைக் காணா விட்டால் இவனால் ஆடிட் ரிபோர்ட்டைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை.

காற்றில் இலைகூட அசையவில்லை என்று மாடி வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கணக்கு எழுதிக் கொண்டிருந்த போதுதான் அந்தக் காற்று அடிக்க ஆரம்பித்தது. அந்த ஆடிக் காற்றில் மேஜை மீதிருந்த காகிதங்களும், பூச்செடிகளும் என்ன பாடு பட்டன! அந்தப் புஸ்தகத்துள் கிடந்த அவன் ஜாதக ககமும் அதுதான் தருணமென்று காற்றோடு பறந்து போயிற்று. அல்லோல கல்லோலமாய்ப் 'பேபர் வைட்'முதல் கொண்டு பறந்து போகும்படி அடித்த அந்தக் காற்று அந்த ஜாதகத்தைக் கொண்டு போய் அடுத்த வீட்டிற்குள் போட்டது.

அன்று வெள்ளிக்கிழமை. மறு நாள் விடியற் காலையில் மாசியும் பங்குனியும் கூடும் நோன்பு. கொல்லைத் தாழ்வாரத்தில் கோலம் போட்டுக் கொண்டிருந்த பருவதம்மாள் காலடியில் போய் அந்தக் காகிதம் விழுந்தது. தன் வேலையாளை அனுப்பிக் காற்றில் பறந்து சென்ற அந்தக் காகிதத்தை வாங்கிவர அனுப்பினான் கணேசன். அதைப் போய்க் கேட்ட பியூனிடம் அந்தப் பெண், "எங்கள் வீட்டில் விழுந்தது எங்களைச் சேர்ந்தது. மேலும் அந்தக் கடிதாசி உங்கள் எஜமானருக்கு இனித் தேவை இல்லை. அது இருக்க வேண்டிய இடத்தில் பத்திரமாக இருக்கிறது என்று சொல்" என்று சொல்லி அனுப்பியதோடல்லாமல், உடனே தன் அம்மாவிடம் போய், "அம்மா, அந்தக் கடி

தாசி அடுத்தாத்திலே யாரோ (இதைச் சொல்லும்போது ஏற்பட்ட விஷமச் சிரிப்பைக் கணேசன் ஜன்னல்வழியாகக் கவனித்தான்.) இருக்காளாம். அவாளுடையதாம். தர்வான் வந்து கேட்டு விட்டுப் போகிறான்" என்று சொன்னான்.

"வெள்ளிக் கிழமையும் அதுவுமா வந்த ஜாதகம் இருக்கட்டும். சாஸ்திரிகளைக் கேட்போம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே நோன்புச் சரடு கொடுப்பதற்காகக் கையில் மஞ்சள் கயிற்றை எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார் சாஸ்திரிகள். ஜாதகத்தைப் பார்த்த அவர் அடைந்த குதூகலம் எழுதச் சாத்தியமில்லை. தான் சரடு கொண்டு வந்த நேரத்தைப் பற்றியும் அந்த ஜாதகத்தின் யோகத்தைப் பற்றியும் அதன் பொருத்தத்தைப் பற்றியும் சரடு விட்டார். "ஜாதகம்னா இப்படியல்லவோ அமைய வேண்டும்! இந்தப் பின்னை நிச்சயம் ஒரு கோடீஸ்வரனாக இருக்க வேண்டும். இல்லையேல் இம்பீரியல் சர்வீஸிலாவது இருக்க வேண்டும். இந்தப் பங்குனி ஏழாம் தேதியிலேயே முகூர்த்தம் வைக்கலாம். கால செல்லச் செல்ல அப்புறம் பவுன் கிடைக்காது" என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டேபோன சாஸ்திரிகளைப் பருவதம்மாள் இடை மறித்து, "எல்லாம் சரிதான். எனக்கும் சர்வ சம்மதம் தான். காந்தனுக்கு என்ன சமாதானம் சொல்லுவது?" என்று கேட்டாள். அதற்கொரு வழி தேடுவது வரன் தேடுவதை விடச் சிரமமாய் இருந்தது. சுக்ரநாடி பொய் சொல்லவில்லை. இவனும் கணேசன்தான். இன்ஸ்பெக்டர் தான். இவனுக்குத் தீர்க்காயுள். ஆனால் அந்த காந்தனா?

"இன்னம் குருபலன் வரவில்லை" என்று சொல்வதும் உண்மைதான் போலும். இல்லாவிட்டால் நிலமுள்ளவர்கள்கூட ரேஷன் அரிசி வாங்கிச் சாப்பிடுவதுபோல் எல்லாம் நிச்சயம் ஆகியும் கலியாணத் தேதி குறிப்பிடாமல் காதலர்கள் ஏன் கஷ்டப்படவேண்டும்? எதற்கும் வேளை வரவேண்டும். இல்லாவிட்டால் அந்த பம்பாய்த் தீ விபத்து அப்பொழுதே நடந்திருக்காதா? பாவம், சுக்ரநாடி பலித்து விட்டது. ஜோஸ்யர் வார்த்தை நிஜமாய் விட்டது. ரயில்வே இன்ஸ்பெக்டர் கணேசனுக்கு அல்பாயுஸ் என்று எழுதியிருக்கும் போது பம்பாய் விபத்து நேரிடாமல் இருக்குமா?

அன்றுடன் கழிந்தது ஆடிட்டர் கணேசனின் தனிமை. அந்த இனிமையான பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்ல அவனுக்குத் தைரியம் வரவில்லை. அவள் விஷமப் பேச்சாலும் குறும்புப் பார்வையாலும் தன் குடுமியைப்பிடித்து ஆட்டிவிடுவாள் என அவன் பயந்து மறுதினமே கிராப் வைத்துக்கொண்டு விட்டான். கணேசனின் பிரமச்சர்யம் நீங்கிற்று. அன்றே அவனுக்கு ரிஜிஸ்திரார் வேலை ஆன உத்தரவும் கிடைத்தது. யோக ஜாதகம் என்பது பொய்யாகுமா? ஆனால் ஆடிட் வேலையும், அழகான குடுமியும், அந்த ஒற்றைக் கல் வைர மோதிரமும் தன்னை விட்டுப் போன வருத்தத்தை லலிதாவின் மோஹனச் சிரிப்பிலும் கானத்திலும் மறந்து விட்டான் கணேசன்.

★ ★ ★


# 1945-ம் வருஷத்துக்

## "கல்கி" சிறு கதைப் போட்டி

**முதல் பரிசு ரூ. 500**

**ஐந்து இரண்டாவது பரிசுகள் ரூ. 100 விதம்.**

போட்டி முடிவு தேதி **30-6-45** என்பது **31-7-45** என்று மாற்றப்பட்டிருக்கிறது.

கோடை காலத்திற்குத் தகுந்த ...
... குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம் டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

குங்குமப்பூ, நன்னாரி, ரோஸ்
ஆரஞ்சு முதலிய சர்பத்துகள்

மதராஸ் ஸிடி ஏஜண்டுகள் :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
திருவல்லிக்கேணி.

ஸ்டாக்கிஸ்டு :
B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்





# காணாமற்போன பந்து

ராஜி

பையன்களெல்லாம் பிள்ளையார் பந்து ஆடிக்கொண்டிருந்த போது திடீரென்று கோபாலனுக்குக் கோபம் வந்துவிட்டது. கீழே விழுந்த பந்தை எடுத்துக் கோபமாக அப்பால் வீசி எறிந்தான். விட்டெறிந்த பந்து நேராக எதிர் வீட்டுத் தோட்டத்திலேயா போய் விழவேண்டும்? பையன்களுக்கெல்லாம் தூக்கி வாரிப் போட்டது.

அந்தத் தெருவில் வராக அய்யங்கார் என்றாலே யாருக்கும் பயம். அவர் மகா முன் கோபக்காரர். அதுவும் தெருவில் பையன்கள் பந்து விளையாடுவது அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. தெருவில் வசிக்கும் பையன்களுக்குப் பல முறை பந்து விளையாடக் கூடாது என்று எச்சரிக்கை செய்தும் பையன்கள் வராக அய்யங்காரைப் பரிகாசம் செய்வது போல அதிகமாகச் சப்தம் போட்டுக் கொண்டு விளையாட ஆரம்பித்தார்கள் "சமயம் வரட்டும். இச் சிறுவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன்" என்று வராக அய்யங்கார் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார். சமயமும் வந்துவிட்டது. அவர் பையன்களைச் சும்மா விட்டு விடுவாரா?


"ஸார்! எங்கள் பந்து உங்கள் வீட்டுத் தோட்டத்தில் விழுந்துவிட்டது. தயவு செய்து எடுத்துக் கொடுங்கள்" என்று எல்லாப் பையன்களும் ஏகமனதாக வராக அய்யங்காரிடம் முறையிட்டார்கள். சிறுவர்களிடம் கோபமடைந்திருந்த வராக அய்யங்கார் பையன்களை நேரில் பார்த்தவுடன் கொஞ்சம், சாந்தம் அடைந்தார். "பந்தாடினால் ஜாக்கிரதையாக ஆடவேண்டாமா? கண்ணாடிக் கதவில் பட்டுவிட்டால் என்ன செய்வது? வாருங்கள்! தோட்டப் பக்கம் போகலாம்" என்று பையன்களைத் தோட்டத்திற்கு அழைத்துப் போனார். தோட்டத்தில் பையன்கள் நாலா பக்கமும் தேடியும் பந்து இருக்குமிடம் தெரியவில்லை. அதுவுமில்லாமல் அய்யங்கார் தோட்ட முழுவதும் ஒரே குப்பையாக இருந்தது.

அப்பொழுது அய்யங்கார் "பையன்களே, ஒருக்கால் இக்குப்பையில் பந்து புகுந்து கொண்டிருக்கலாம். இந்தத் தோட்டத்தி லிருக்கும் குப்பைகளை எல்லாம் நீங்கள் அப்புறப்படுத்தினால் உங்களது பந்து எங்கு விழுந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்" என்று சொன்னார். பையன்கள் பிரமித்து நின்றார்கள். தோட்டத்திலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தித் தெருவில் கொண்டு போடுவது லேசான காரியமா? "மாமா, இருபது மூட்டை குப்பைகள் அல்லவா இருக்கும் போலிருக்கிறது" என்று பையன்கள் முறையிட்டார்கள். அதற்கு அய்யங்கார், "என்ன செய்வது? உங்களுடைய புதுப் பந்து



வேணுமென்றால் இக் குப்பைகளை அப்புறப்படுத்தி வெளியில் கொண்டு போட்டால்தான் முடியும்" என்று கண்டிப்பாய்ச் சொல்லவே, பையன்களும் புதுப் பந்தை உத்தேசித்துக் குப்பைகளை அப்புறப்படுத்த ஒப்புக் கொண்டார்கள்.

உடனே பல கோணிப் பைகள் கொண்டு வரப்பட்டன. பையன்கள் யாவரும் அரை நொடியில் மிகவும் சிரமப்பட்டுக் குப்பைகளை அப்புறப் படுத்தினார்கள். வராக அய்யங்காரின் தோட்டம் மிகவும் சுத்தமாக ஆயிற்று. ஆனால் பாவம், சிறுவர்கள் சிரமப்பட்டும் பந்து அகப்படவில்லை. ஏமாந்து நின்றார்கள். உடனே வராக அய்யங்கார் சிரித்துக் கொண்டே "பையன்களே, உங்களை ஏமாற்றினேன். நான் என்ன சொல்லியும் நீங்கள் என் வீட்டுக்கு எதிரில் விளையாடுவதை நிறுத்தவில்லை. உங்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்றே இச் சூழ்ச்சி செய்தேன். என் தோட்டம் மிகவும் சுத்தமாக ஆகிவிட்டது. நீங்கள் செய்த உபகாரத்துக்கு வந்தனம். உங்கள் பந்து இதோ இருக்கிறது" என்று அய்யங்கார் பந்தைக் கொடுத்தார்.



கிட்டு வேடிக்கையாக ஜலத்தில் ஒரு தடியைப் போட்டு நாய்களை வாயில் கௌவிக்கொண்டு வரச்சொன்னான். நாய்கள் ஜலத்தில் இறங்கி ஒன்றுக் கொன்று சண்டை போட்டுக் கொண்டன. கடைசியில் கிட்டுவே ஜலத்தில் இறங்கித் தானே வாயில் தடியைக் கௌவிக் கொண்டு கைகளில் நாய்களைச் சுமந்தவாறு கரையேற வேண்டியதாயிற்று!


பந்தை வாங்கிக் கொண்டு ராமு மற்ற பையன்களுடன் 'ஹி ஹி ஹி' என்று பெரிதாகச் சிரித்தான். வராக அய்யங்காருக்கு ஒன்றும்புரியவில்லை. ஆச்சரியத்துடன் "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

ராமுவுக்கும் சிரிப்புத் தாங்கவில்லை. "மாமா, நாங்களா ஏமாந்தோம்? எங்களுடன் வாருங்கள்!" என்று சொல்லிவிட்டு ராமு மற்ற பையன்களுடன் முன்னாலே சென்றான். அய்யங்கார் ராமுவைப் பின் பற்றினார்; தோட்டத்திலுள்ள குப்பைகளெல்லாம் தன் வீட்டு முற்றத்தில் இருக்க அதைப் பார்த்து அப்படியே ஸ்தம்பித்து நின்றார். அன்று முதல் வராக அய்யங்கார் பையன்கள் ஜோலிக்கே போவதில்லை.



# ஆகாரவகை அதிக விலையுள்ளதாக இருக்கிறது

ஆனாலும் எப்பொழுதும் கிடைக்கக் கூடியதும்
மலிவானதும் ஒன்று இருக்கிறது. அதுதான்
டீ. யுத்தத்தால் ஏற்படும் கவலைகள் எதுவாயினும்—
ஆகாரம், எரிகரும்பு, துணி வகை, நீங்கள் எப்
பொழுதும் நன்கு தயாரித்த ஒருகோப்பை டீ
அருந்தி குஷி பெறலாம். நீங்கள் களைப்புற்றோ, கவலை
யுடனோ இருந்தாலும் சரி ஒருகோப்பை டீ அருந்
துங்கள். அது கிளர்ச்சியும். ஆனால் கெடுதல்
செய்யாது. அதை ஒரு நண்பனாக கருதி
எப்பொழுதும் உங்களுடன் வைத்திருங்கள். அதி
காலை முதல் இரவு வெகுநேரம் வரை எந்த சமய
மும் நீங்கள் டீ அருந்த சித்தமாய்
இருப்பீர்கள்.



இந்தியன் டீ

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IE 240 TM



இந்தியத் தேயிலையில்

# மிகச்சிறந்தது!

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.




# லிப்டன்ஸ்

## வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

# அஸ்திவாரத் திருநாள்

சாவி

“எட்டயபுரம் போகிறாயா?” என்று ஆசிரியர் என்னைப் பார்த்துக் கேட்டதும் “ஏற்கெனவே நான் அங்குதான் இருக்கிறேன். என் மனமெல்லாம் ஒருவார மாக எட்டயபுரத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறது. கேவலம் இந்தப் பூத உடல் மட்டும்தான் அங்கே போய்ச் சேர வேண்டும்” என்று பதில் கூறினேன். பின்னர், “ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே” என்று ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டு ரயிலடிக்குப் போய்ச் சேர்ந்தேன்.

ரயில் கோவில்பட்டி ஸ்டேஷனை அடைந்தது. எனக்கு முன்பாகவே பல தமிழன்பர்கள் அங்கே விஜயம் செய்திருந்தனர். எல்லோரும் எங்களுக்காகப் பிரத்யேகமாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பஸ்ஸில் ஏறி எட்டயபுரத்துக்குக் கிளம்பினோம். எங்களுடன் பஸ் ஏறிய தமிழ்ப்பண்ணை ஸ்ரீ நா. அண்ணாமலை ஒரு குஷிப் பேர்வழி. உற்சாக மிகுதியில் அவர் பாரதி பாட்டுக்களைப் பாட ஆரம்பித்தார்.

“வெற்றி எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே” என்று அவர் ஆவேசம் ததும்பப் பாட ஆரம்பித்ததும் பஸ்ஸில் இருந்த எங்களால் சும்மா இருக்க முடியவில்லை. கையில் முரசு இல்லாததால் அவரவர்கள் கைக்கு என்னென்ன அகப்பட்டதோ அதையெல்லாம் ஒரேயடியாய்க் கொட்ட ஆரம்பித்து விட்டோம். ஒருவர் தாம் கொண்டு வந்திருந்த டிரங்குப் பெட்டியைக் கொட்டினார். இன்னொருவர் தமக்கு முன்னால் உட்கார்ந்திருந்தவருடைய முதுகைக் கொட்டிப் பிளந்து கட்டினார். பஸ் டிரைவர் தான் பிடித்து ஓட்டிக் கொண்டிருந்த ‘ஸ்டீரிங்’கையே கொட்ட ஆரம்பித்து விட்டார். எனக்குக் கொட்டுவதற்கு ஒன்றும் அகப்படாததால் நான் கையுடன் கொண்டு போயிருந்த ஆறிப்போன ஒரு கூஜா காப்பியைக் கீழே கொட்டி ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டேன்!

இதற்குள் பஸ் எட்டயபுரம் போய் ஒரு பங்களாவின் வாசலில் நின்றது. பஸ்ஸை விட்டு இறங்கிய நண்பர்கள் அனைவரும் ஸ்நானபான ஆகாராதிகளை முடித்துக் கொண்டு ஒரு தூக்கம் போட்டுக் கொண்டிருந்த சமயம் யாரோ, “தூங்காதே தமிழா!” என்று பாடி எங்களைத் தட்டி எழுப்பிய சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித் தெழுந்தோம். இரண்டாம் வேளை காப்பி தயாராயிருந்தது! அதை ஒரு திணுசாக முடித்துக் கொண்டு பாரதியார் பிறந்த வீட்டைப் பார்க்கச் சென்றோம். அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த பாரதியாரின் தாய் மாமன் ஸ்ரீ சாம்பசிவ ஐயர் எங்களுக்கு வீட்டையெல்லாம் அறை யறையாகக் காண்பித்த பிறகு பாரதியாரின் பாட்டுக்களில் சிலவற்றைப் பாடிக் காட்டினார்.

“இப்படித்தான் பாரதியார் பாடினார்” என்று கூறிவிட்டு உணர்ச்சியும் வேகமும் கொண்டு அவர் பாடிக் கொண்டே வந்தபோது எங்களுக்கெல்லாம் சில சமயம் மெய் சிலிர்த்தது. சில சமயம் தேகத்தில் புல்லரித்தது. சில சமயம் கண்களில் நீர் மல்கியது. சில சமயம் வீரம் பொங்கி எங்களில் சிலர் மல் யுத்தத்துக்கே தயாரானார்கள்!

மறுநாள் பொழுது விடிந்ததும் எட்டயபுரத்தை நோக்கி வெளியூர் வாசிகளெல்லாம் கும்பல் கும்பலாகவும் வண்டி வண்டியாகவும் ரயில் ரயிலாகவும் வந்துகொண்டேயிருந்தார்கள். சுற்றுப் பக்கத்திலிருந்த கிராமவாசிகள் பலர் கையில் தடி, தோளில் குழந்தை, இன்னொரு கையில் கட்டுச்சாதம் சகிதம் கிளம்பி வரப்புகளின் மீது சாரி சாரியாகக் கால் நடையாகவே வந்த காட்சி ஜனங்கள் தேர் திருவிழாவுக்குச் செல்லும் காட்சியை நினைவூட்டியது.

ஜூன் 1உ எட்டயபுரத்து வீதிகளில் காக்கை, குருவி, முயற்குட்டி இவற்றைத் தவிர அங்கங்கே அபூர்வமாய்த்தான் மனிதர்களைக் காண முடிந்தது. மறுநாள் 2-ம் தேதியோ எந்தத் தெருவைப் பார்த்த போதிலும் எந்த மூச்சந்தியை நோக்கினாலும் ஜனங்கள் நிரம்பித் திரள் திரளாக அஸ்திவாரத் திருவிழாப் பந்தலை நோக்கிப் போய்க் கொண்டும் வந்துகொண்டுமிருந்தனர். இதற்கு மேல் கூட்டம் வந்தால் எட்டயபுரம் தாங்காது என்று எண்ணும்படி

யாகக் கூடியிருந்த ஜனத்திரளிடையே புகுந்து சென்று மெதுவாகக் கோவில் பட்டி ஸ்டேஷனை அடைந்தேன். ஊருக்குத் திரும்பிப் போக அல்ல; கோவில் பட்டியில் வந்து இறங்கப் போகும் தலைவர்களை வரவேற்கவே சென்றிருந்தேன். என்னைத் தவிர எட்டயபுரம் பாரதி இலக்கிய மன்ற இளைஞர்கள், அதன் தலைவர் ஸ்ரீ மூ. கந்தசாமிச் செட்டியார், மகாராஜாவின் மைத்துனர் ஸ்ரீ அமிர்தசாமி, (கோவில்பட்டி ஸ்டேஷன் டிக்கட் கலெக்டர் உள்பட) இன்னும் பலரும் தலைவர்களின் வருகையை எதிர்பார்த்து ஸ்டேஷனில் காத்திருந்தனர்.

முதலில் ராஜாஜி ரயிலைவிட்டு இறங்கினார். அவ்வளவுதான்; ஆவலுடன் அவருடைய முகத்தைக் காண எண்ணியிருந்தவர்களுக் கெல்லாம் பெரிய ஏமாற்றமாய்ப் போய்விட்டது. ராஜாஜியின் கழுத்தில் போட்ட மாலைகள் உயர்ந்து கொண்டே போய் அவரது முகத்தையே மறைத்து விட்டன. நல்ல வேளையாகப் போட்டோக்காரர்கள் தயவினால் மாலைகளை அப்புறப்படுத்தி அவர் முகத்தைக் காண முடிந்தது. அடுத்தாற் போல் ஸ்ரீ டி. கே. சி., டாக்டர் ராஜன், மதுரை ஏ. வைத்தியநாத ஐயர், எல். கிருஷ்ணசாமி பாரதி தம்பதிகள், அண்ணாமலைப் பிள்ளை முதலியவர்களெல்லாம் இறங்கி வந்தார்கள்.

தலைவர்களை வரவேற்க வந்திருந்த கூட்டம் "சுப்பிரமணிய பாரதிக்கு ஜே!" என்று போட்ட இடி முழக்கம் போன்ற மாபெரும் கோஷம் வானுலகை அடைந்து சுப்பிரமணிய பாரதியாரின் காதிலேயே விழுந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.



மகாராஜாவின் மைத்துனர் ஸ்ரீ அமிர்தசாமி

ராஜாஜி, டி. கே. சி. ஆகியவர்கள் ஏறியிருந்த மோட்டார் வண்டி எட்டயபுரத்தின் எல்லையை யடைந்ததும் ஒரு பெரிய அமர்க்களம்; எட்டயபுரம் ஜனங்களின் உற்சாகத்தினால் ஏற்பட்ட அமர்க்களந்தான். எல்லையில் ஏற்பட்ட போராட்டம், மோட்டார் வண்டி தலைவர்களின் ஜாகையை அடையும் வரையில் நீடித்திருந்தது. ஆங்காங்கே வீதிகளின் முச்சந்தியிலும் முக்கியமான கடைகளின் வாசலிலும் தலைவர்களின் வரவேற்புக்காகப் பந்தல் போட்டுப் பீடங்களும் அமைத்து வைத்திருந்தார்கள். அவ்விடங்களி லெல்லாம் ஜனங்கள் கூட்டமாய் நின்று வண்டியை வழி மறித்தார்கள். ஜனங்கள் வண்டியை நிறுத்தச் செய்வதும், ராஜாஜி வண்டியை ஓட்டச் சொல்வதுமாக டிரைவரின் பாடு ஆபத்தாய்ப் போய் விட்டது. சற்று நேரத்துக் கெல்லாம் வண்டிக்குள் ஏராளமான மலர் மாலைகள் குவிந்து தலைவர்களைப் பார்ப்பதே அசாத்தியமாகி விட்டது. அதற்குப் பிறகு, வண்டியிலுள்ளவர்களை இன்னார் என்று ஜனங்கள் தெரிந்து கொள்வதற்குள் டிரைவர் வண்டியை வேகமாய் விட்டுக் கொண்டு போய் ஜாகையில் சேர்த்தார்.

தமிழ் நாட்டில் வேறெந்த ஊரிலும் இதைப் போன்ற உற்சாகமான வரவேற்பு பொது ஜனங்களால் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டதில்லை யென்று சொல்லலாம்.

* * *

அன்று மாலை அஸ்திவார விழாப் பந்தலில் நடக்கவிருந்த ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் பாட்டுக் கச்சேரிக்காகப் பந்தலில் இரண்டு மணி நேரம் முன்பே கூட்டம் அலைமோத ஆரம்பித்தது.

முதலில் பந்தலுக்குள் எழுத்தாளர்களுக்கென்றும் நிருபர்களுக் கென்றும் தனித் தனியாக வசதி செய்யப்பட்டிருந்த இடங்களை யெல்லாம் பொது ஜனங்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். பின்னர் சங்கீத வித்வான்களுக்கு முன்னால் மேடையில் தலைவர்கள் உட்கார வேண்டிய இடத்தையும் ஸ்வீகரித்துக் கொண்டனர். இன்னும் ஐந்து நிமிஷ நேரம் போனால் எங்கே சங்கீத வித்வான்கள் உட்கார வேண்டிய இடமும் பறிபோய் விடுமோ என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயம் நல்ல வேளையாக ஸ்ரீமதி பட்டம்மாளே வந்து தமக்குரிய இடத்தில் அமர்ந்து கச்சேரியைத் தொடங்கினார். அவர் கணீரென்ற

குரலில் பாட ஆரம்பித்ததும் சபையில் கலவரம் அடங்கி நிசப்தம் நிலவியது.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஆரம்பமான மதுரை மணி ஐயரின் கச்சேரி முடிவதற்குள் மணி இரண்டரை ஆகிவிட்டது. பந்தலில் கூடியிருந்த ஜனங்கள் "ஏதடா? பொழுது விடிவதற்கு முன்னால் தூக்கத்தை விட்டு எழுந்து விழாவுக்கு வரவேண்டுமே?" என்ற கவலை கொஞ்சமுமின்றி இராத்திரி இரண்டரை மணி வரையில் உட்கார்ந்து மணி ஐயரின் கச்சேரியைச் சாங்கோபாங்கமாய்க் கடைசி வரை கேட்டு விட்டே சென்றனர்.

* * *

மறு நாள் விடியற் காலம் நாலு அடிக்கு முன்பே அவரவர்கள் தூக்கத்தைவிட்டு எழுந்திருக்க ஆரம்பித்து விட்டனர். சீதையின் திருமணத்தைத் தங்களுடைய சொந்த விவாகம் போலவே ஊர்ப் பெண்மணிகளெல்லாம் கருதி அந்த வைபவத்தில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டார்களாம். அன்று எட்டயபுரத்துக்கு விஜயம் செய்திருந்த தமிழன்பர்கள் யாவரும் அப்படித்தான் நினைத்தார்கள். பொழுது விடிந்தால் தங்களுடைய சொந்தத் திருமணம் நடக்கப் போவதாகவே நினைத்துக் கொண்டு அநேகம் பேர் பல்லை மட்டும் துலக்கி விட்டுச் சுத்தப் பட்டினியுடன் பந்தலில் வந்து கூடி விட்டார்கள்.

பாரதியார் குடும்பத்தினர், "முருகா முருகா" என்ற கீதத்தைப் பாட, டி. கே. சி., டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன், நாமக்கல் கவிஞர் மற்றும் பல பிரமுகர்கள் புடை சூழ, வந்திருந்த அனைவரும் 'ஜே' கோஷம் போட, எட்டயபுரம் மகாராஜா செங்கல்லை எடுத்துக் கொடுக்க, ராஜாஜி தமது திருக்கரங்களினால் அஸ்திவாரக் கல்லை நாட்டிய சுப வேளையில் சூரியனும் அடிவானத்தில் தோன்றி முகூர்த்தத்தை நிறைவேற்றி வைத்தான்!

அஸ்திவாரக் கல் நாட்டு விழாவுக்குப் பின் ஜனக் கூட்டம் மேடைப் பக்கம் படையெடுக்க ஆரம்பித்தது. காரணம் சொல்லத் தேவையில்லை.

ராஜாஜி பேச ஆரம்பிக்கு முன்பாக பாரதியார் ஞாபகார்த்தக் கட்டிட முயற்சியை வாழ்த்திப் பல இடங்களிலிருந்தும் வந்திருந்த வாழ்த்துத் தந்தி*களில் முக்கியமான சிலவற்றைப் படித்துக் காட்டினார். முதலில் காந்திஜி தமிழில் தம் கையாலேயே எழுதி அனுப்பியிருந்த ஆசீர்வாதச் செய்தியை ராஜாஜி படித்துக் காட்டியபோது கொட்டகையில் எழுந்த கரகோஷம் அடங்குவதற்கு ஐந்து நிமிஷ நேரம் ஆயிற்று.



பாரதியாரின் தாய்மாமன் ஸ்ரீ சாம்பசிவ ஐயர்

அடுத்த செய்தி ஸ்ரீ தேவதாஸ் காந்தியிடமிருந்து வந்தது என்று தெரிவிக்கையில் "மகாத்மாவின் குமாரன்" என்றார் ராஜாஜி. "ராஜாஜியின் மருமகன்" என்றார் மேடையில் ஒருவர். இதுவும் குதூகலத்தை உண்டாக்கியது.

ராஜாஜி தமது பிரசங்கத்தில் கவிதையின் இயல்பு, கவிதையை அனுபவிக்க வேண்டிய விதம் முதலிய பல அரும் பெரும் விஷயங்களைப் பற்றிச் சொன்ன போதிலும் இடையிடையே அவருடைய நகைச்சுவை சபையில் பெரும் சிரிப்பையும் ஆரவாரத்தையும் உண்டாக்கின. எல்லாவற்றையும் விடப் பிரமாதமான சிரிப்பை உண்டாக்கிய விஷயம் இது: புதுச்சேரியிலும் சென்னையிலும் இம்மாதிரி ஞாபகச் சின்னங்கள் நிறுவ வேண்டியதுதான் என்று ராஜாஜி கூறி, "அதைப் பற்றி என்ன கவலை? அந்

* எட்டயபுரம் பாரதி விழா சம்பந்தமாக வந்த வாழ்த்துத் தந்திகளைச் சமாளிக்கும் பொருட்டுப் பிரத்யேகமாக ஒரு தபால் அதிகாரி நியமிக்கப்பட்டிருந்ததாக அறிந்தேன்.

தகைய யோசனை டாக்டர் அழகப்பச் செட்டியாருடைய தந்தியில் அல்லவா சொல்லப் பட்டிருக்கிறது? டாக்டர் அழகப்பச் செட்டியார், ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் போன்றவர்கள் மனது வைத்தால் எதுதான் நடக்காது? அவர்களே தலைக்கு லட்சம் ரூபாய் கொடுத்து நடத்தி விடலாம். ஆனால் இப்படி நான் சொன்னதனால், நாளைக்கே அவர்களிடம் பணத்துக்குப் போய் விடாதீர்கள்! அப்புறம் வாழ்த்துச் செய்தி அனுப்புவதை நிறுத்தி விடப் போகிறார்கள்!" என்று சொன்னதும், சபையில் ஏற்பட்ட சிரிப்பு வானை அளாவியது.

ஸ்ரீ சோமசுந்தர பாரதியார் பேசிய போது "ராஜாஜி அசல் தமிழரல்ல!" என்று பொருள் படும்படியாகப் பேசி விட்டதாகச் சபையிலிருந்த ஒருவருக்குப் பட்டு விட்டது. அவ்வளவுதான்; உடனே கிளப்பினாரே பார்க்கலாம் அந்த ஆசாமி! "ராஜாஜி அசல் தமிழர் இல்லையா? இல்லையென்று நீங்கள் யார் சொல்வதற்கு?" என்று இரண்டு மூன்று தடவை கூச்சல் போட்டுச் சபையில் சிறிது கலவரத்தை ஏற்படுத்தினார். இதற்குள் ராஜாஜி தமது கையைக் காட்டி, "நான் அசல் தமிழனா இல்லையா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். நான் இப்போது இக் கூட்டத்தின் அசல் அக்கிராசனர்! ஆகையால் நீங்கள் சற்று அமைதியாக இருங்கள்" என்று கூறிய போதும், சபையில் பெருஞ் சிரிப்பு உண்டாயிற்று. ஆனால் உடனே அமைதி ஏற்பட்டது.

தலைவர்களின் பிரசங்கங்க ளெல்லாம் முடிந்ததும் ஆசிரியர் கல்கி எழுந்து எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறிக் கொண்டே வந்தபோது விழாவுக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குச் சாப்பாடு போட்ட எட்டயபுரம் மகாராஜாவை வாழ்த்தினார்.

"நான் முதலில் எட்டயபுரம் ராஜாவிடம் 'விழாவுக்கு நூறு இருநூறு பேர் வருவார்கள்; சாப்பாடு போடவேண்டும்' என்று கேட்டதற்கு, ராஜா 'ஆகட்டும்' என்றார். அப்புறம் இருநூறு பேர் என்பதை மாற்றி நானூறு பேர் வரக்கூடும் என்று அறிவித்தேன். அதற்கும் மகாராஜா 'சரி' என்றார். அப்புறம் நானூறு பேர் ஆயிரம் பேராகி ஆயிரம் மூவாயிரத்துக்குமேல் பெருகி விட்டது. பாரதியார் 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடியிருக்கிறார். எட்டயபுரம் விழாவுக்கு வருகிறவர்களுக்கு உணவில்லையென்றால், நம் வசத்தில் ஜகம் இல்லையாகையால் எங்கே இந்த அஸ்திவார விழாவுக்காகப் போட்டிருக்கும் பந்தலுக்கு ஜனங்களால் ஆபத்து வந்து விடுமோ என்று பயந்துகொண்டிருந்தேன். நல்ல வேளையாக மகாராஜா அதற்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை. விழாவுக்கு வந்திருந்த அத்தனை பேர்களுக்கும் சாப்பாடு போட்டு என் கவலையைப் போக்கினார்!" என்று கல்கி கூறியதைச் சபையோர் ரொம்பவும் ரஸித்தார்கள். அப்போது சபையில் ஏற்பட்ட கரகோஷ ஆரவாரத்தினால் உண்மையிலேயே திரு விழாப் பந்தலுக்கு ஆபத்து வந்து விடும்போல் தோன்றியது!

அன்றிரவு சாப்பாட்டுக்கு முன்பு ஸ்ரீ வேதாசலம் செட்டியார், ஸ்ரீ ரங்காச்சாரியார் இரண்டு பேர்களுடைய கச்சேரியும், சாப்பாட்டுக்குப் பிறகு தஞ்சாவூர் நாணு ஐயரின் கச்சேரியும் நடைபெற்றன. இதில் என்ன விசேஷம் என்றால் வித்வான்கள் கச்சேரியில் பாமாலையாய்ப் பாடித் தள்ளினார்கள். பாரதி இலக்கிய மன்றத்தார் பூமாலையாய்ப் போட்டுத் தீர்த்தார்கள். ஆமாம்; பாகவதர்களும், தலைவர்களும் மாலையின் கனம் தாளாது திக்கு முக்காடிப் போனார்கள். உட்கார்ந்தால் மாலை; எழுந்தால் மாலை; பாடினால் மாலை; நிறுத்தினால் மாலை: பேசினால் ஒரு மாலை; பேசா விட்டால் இரண்டு மாலை! இப்படி எதற்கெடுத்தாலும் மாலையாகப் போட்டு எட்டயபுரத்தார் ஜமாய்த்து விட்டார்கள்.

• • •

சென்னையை விட்டுப் புறப்படும் போது என் மனம் எனக்கு முன்பாகவே எட்டயபுரம் போய்விட்டது. எட்டயபுரத்தை விட்டுக் கிளம்பும்போதோ மனம் அதை விட்டுக் கிளம்பவே மறுத்து விட்டது. எனவே மனமின்றியே எட்டயபுரத்தை விட்டுப் புறப்பட்டேன்.

ரயில் ஏறிச் சென்னைக்கு வரும்போது மூன்று நாட்கள் எட்டயபுரத்தில் நான் குதூகலமாய்க் கழித்த தினங்களை எண்ணி அகமகிழ்ந்தேன்.

"ஆஹா! அஸ்திவார விழாவே இத்தனை சிறப்பாக இருந்ததென்றால் இனி வருஷா வருஷம் எட்டயபுரத்தில் நடக்கப்போகும் பாரதி திருவிழா எத்தகையதாயிருக்கும்?" என்று பக்கத்திலிருந்தவரைக் கேட்டேன்.

"மிகப் பிரமாதமாய்த்தான் இருக்கும். வருஷா வருஷம் இனி நடக்கப் போகும் விழாக்களுக்குத்தானே இப்போது அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள்?" என்றார் நண்பர்.

# கிரௌண்ட் ஆபீசர்களுக்கு

AAA 167

உத்தியோகங்கள் காலியுள்ளன

28 முதல் 45 வருஷங்களுக்குள் வயதான, நல்ல கல்விப் பயிற்சியுடைய ஆட்கள் கம்மிஷண்ட் உத்தியோகங்களுக்கு அவசியம் தேவை. கீழ் வரைந்துள்ள பிரிவுகளில் வேலைகள் காலியுள்ளன:—போட்டோக்கிராபர் (தரை)—ஸிக்னல்ஸ் (ராடார்)—ஸிக்னல்ஸ் (தரை) — எக்விப்மெண்ட் — கல்விப்பயிற்சி —இஞ்ஜினியரிங் • கணக்கெழுத்து— மோட்டார் போக்குவரத்து—காரிய நிர்வாகம் (சாதாரணம்)—காரிய நிர்வாகம் (கோட்களும் சைபர்களும்)

## ராயல் இந்தியன் ஆகாயப் படை

ஞாபகமிருக்கட்டும்—ஆர். ஐ. ஏ. எப்புடன் பெறும் அநுபவஞானம் அநேகம் பேர்களுக்கு, சமாதானம் மீண்டும் வரும்போது, மிகுந்த பெறுமதி யுடையதா யிருக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஸிவில் ஸ்தாபனங்களுக்கு நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகஸ்தர்கள் தேவையாவது மட்டுமன்றி, சர்க்காரும் தங்கள் அதீனத்திலுள்ள அநேக உத்தியோகங்களை யுத்த சேவையிலிருந்து விலகுபவர்களுக்காக வைத்திருக்க மேற்கொண்டுள்ளார்கள்—பின்னும், யுத்தசேவை புரிபவர்களில்—அதாவது அவர்கள் விரும்புவதாயின்—யுத்த பிற்கால தொழிற் பயிற்சிக்கான சட்ட திட்டங்கள் ஏற்கெனவே வகுக்கப்பட்டு வருகின்றன.


**இவ்வுத்தியோகங்களுக்கு வேண்டிய யோக்கியதாம்சங்களைப்பற்றி பூரா விவரங்களும் கீழ் வரைந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்...**

ஸ்டாப் ஆபீஸர் ரிக்ருடிங், கப்பன் ரோடு, பெங்களூர்.

R. I. A. F. G. D. (பைலட்ஸ்) ரிக்ருடிங் ஆபீஸர்,

புதுப்பேட்டை லேன், மவுண்ட் ரோடு, மதராஸ்.

ஏதாவது ஒரு ரிக்ருடிங் ஆபீஸர் அல்லது டெக்னிகல் ரிக்ருடிங் ஆபீசர் அல்லது செக்ரடரி, புரொவின்ஷியல் போர்டு, லேபர் ஜெனரல், சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மதராஸ்.




இந்தியாவின்
பிற்காலத்திற்காகவும்
உங்களது பிற்காலத்திற்காகவும்

# உங்களது தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்

தாமாகவே குறைத்துச் செலவிடும் ஒவ்வொரு செயலும் பொது நன்மையை முன்னிட்டு விலைவாசிகள் குறைய உதவுகிறது. ஏழைகளுக்கு தேவையான பொருள்கள் அதிகம் கிடைக்கும்படியும் செய்கிறது. இன்று மிதமாகச் செலவிடுவது தான் நாகரிகம். அது நான் காட்டுவது. பழுதுபார்த்ததும், ஒட்டுப்போட்ட பழைய சாமான்களை உபயோகிப்பதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை.

எல்லோரும் சிக்கனத்தைக் கையாண்டால் யுத்தம் முடிந்து விலைவாசிகள் குறைந்த சமயம் கையில் பணம் இருப்பது நிச்சயம். அதன் மூலம் இந்தியாவில் யுத்தகால சேமிப்புத் தொகையைப் பெருக்க உதவுவீர்கள். ஆகவே சமாதானம் ஏற்பட்ட உடனடியாக இந்நாட்டிற்குப் பெருஞ் சாதகமான நிலைமை ஏற்படும்.



பழைய சூட்டுகளை பழுது பாருங்கள்.


கிழிந்த கப் கைப்பட்டிகளைத் திருப்பித் தையுங்கள்



விலைகள் அதிகமாக இருக்கும் சமயம் கட்டிடங்கள், நிலம் முதலியவற்றை வாங்காதீர்கள்.



புஷ்பங்களுக்குப் பதிலாகக் காய் கறிகளைப் பயிர் செய்யுங்கள்.



பழைய சமையல் பாத்திரங்களைப் பழுதுபார்த்து உபயோகியுங்கள்.



க்ஷவரத்தகடுகளை (பிளேட்) மீண்டும் தீட்டிவைத்துக் கொள்ளுங்கள்.

இலவசமாகப் பன்முறை க்ஷவரம் செய்து கொள்ளுங்கள்

பொருட்களை மிதமாகச் செலவிட்டு அனைவருக்கும் தாராளமாகக் கிடைக்கும்படிச் செய்யுங்கள்



நீங்கள் உபயோகிக்காத அறைகளை

உங்கள் சிநேகிதர்களுக்கு வாடகைக்கு விடுங்கள்

## உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்

இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு. AAA 6

# முன் யோசனை!

எம். என். எம்.

★

அன்று திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் நான் குடும்பத்துடன் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சஹதர்மிணியின் பிடிவாதத்தினால் மதுரை மீனாட்சி அம்மனைப் பேட்டி காணும் அவசரந்தான். ரயிலில் மற்றவர்களின் இடிபாடில்லாமல் என் குடும்பத்தினர் மட்டும் சுகமாகத் தூங்கிக்கொண்டு போகவேண்டும் என்று வழக்கம்போல முன் யோசனைத் திட்டம் போட்டேன்.

திருவல்லிக்கேணி ரயில்வே இனா ஆபீஸிலேயே, பெரிய டிக்கட் இரண்டும் வாங்கி விட்டேன். முன் யோசனையின் முதல் காரியம் கைகூடி விட்டது.

அடுத்த படியாக எனது நண்பர்கள் பதினைந்து பேரை ரயில்வே ஸ்டேஷனிற்கு மாலை ஐந்து மணிக்கே வர வேண்டுமென்று டெலிபோன் செய்தேன். என்னவோ என்று நினைத்து அவர்களும் ஆஜராகி விட்டனர்.

எல்லோருக்கும் ப்ளாட்பாரம் டிக்கெட்டுகள் எடுத்துக்கொண்டு, இரண்டாவது வகுப்பு கேட் வழியாகப் ப்ளாட்பாரத்திற்குப் படையெடுத்தோம். முன் யோசனை இல்லாதவர்கள்தானே மூன்றாவது வகுப்புப் பிளாட்பாரத்தில் மூன்று தினங்களாகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும்?

பிளாட்பாரத்திற்குள்ளிருக்கும் சாதாரண ஜனங்களுக்கும், முன் யோசனை படைத்த எனக்கும் வித்தியாசமில்லையா? ஒரு போர்ட்டரின் துணையினால், எக்ஸ்பிரஸ் வண்டி விடப்பட்டிருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டேன். நண்பர்களை எல்லாம் ஒருங்கு கூட்டி, எனது அரிய யோசனையைப் பிரகடனம் செய்தேன். ஒவ்வொருவராகச் சென்று ஷாட் லைனில் விடப்பட்டிருக்கும் காரேஜில் நடுமத்தியில் நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டோம்.

ஐந்து வருஷ கால ரயில் பிரயாணத்தில் இன்று ஒரு நாளாவது நெருக்கடியில்லாமல் பிரயாணம் செய்வது பற்றியும், எங்கள் நால்வருக்கு இடம் அமர்த்திக் கொடுப்பதற்காகப் பதினைந்து பேர் வந்திருக்கும் சாமர்த்தியத்தைப் பற்றியும் அளவளாவிக் கொண்டோம். வண்டி பிளாட்பாரத்திற்கு இழுத்து வரப் பட்டது. எங்கள் நால்வருடன் நண்பர்களும் கலந்து பன்னிரண்டு பேர்கள் சீட்டில் உட்கார்ந்து கொண்டோம். மூன்று பேர் வழியில் நின்றிருந்தனர். மீதமுள்ள 'நால்வரும் வாயிற்படி வழியாக யாரும் நுழையாதபடி ப்ளாட்பாரத்தில் சுற்றி நின்று வாயிற்படியில் இருப்பவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முன் யோசனை இல்லாத பல சாதாரணப் பிரயாணிகள் எங்கள் கூட்டத்தைப் பார்த்து உதட்டைப் பிதுக்கிக் கொண்டு போனார்கள்.

நண்பர்கள் சந்தோஷமாகக் குலாவிக் கொண்டிருந்தார்கள். முதல் மணியும் அடித்தது. அப்பா! இன்னும் நான்கு நிமிஷங்கள் சென்றுவிட்டால் நண்பர்களின் நெருக்கடியும் நீங்கிச் சுகமான காற்றில் பிரயாணம் செய்யலாம்.

"எல்லோரும் கீழே இறங்குங்கள், சீக்கிரம்! இந்த வண்டியில் ஏன் ஏறினீர்கள்?" என்று அதட்டும் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டேன். "உங்களுக்கு முன் யோசனை கிடையாதா? 'சோடா வண்டி' என்று மேலே 'போர்டு' போடப்பட்டிருக்கிறதே, பார்த்து ஏறக்கூடாதா?" என்று கூறிக் கொண்டே ஒரு ஆசாமி கைவண்டியிலிருந்த அவனது தளவாடங்களை வாசி ரயில் வண்டியில் திணித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டான். நண்பர்களும் நானும் கீழிறங்கி மூலைக்கொருவராக ஓடி இடம் தேடினோம்: பலனில்லை. எனது முன் யோசனையின் பலனாக உடனே எல்லோரும் வீட்டிற்கு வெற்றிகரமாக வாபஸ் ஆனோம்.



"என்ன ஸார் இது? அதிசயமாயிருக்கே! கொசு வலையில் எதற்காக ஜன்னல் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ரொம்பப் புழுக்கமாயிருக்கிறதோ இல்லையோ, அதனால்தான்!"




டி. கே. சி.

## 103. முடிந்தது வேலை!

பொதிகை மலைச் சாரலில் ஒரு காட்சியைப் பார்த்தோம். தன்னிடம் ராமன் வரப் போகிறான் என்று கேட்டவுடன் அகஸ்திய முனிவர் ஆசிரமத்தை விட்டு இறங்கி வருகிறார். ராமனைக் கண்ட மாத்திரத்தில் ஆனந்தக் கண்ணீர் பொழிய அப்படியே நின்று விடுகிறார்.

அப்படி நின்ற முனிவரை, ராமன் வந்து அடி பணிகிறான். முனிவரும் ராமனை அன்போடு தழுவிக் கொள்கிறார். வார்த்தை சொல்ல வாய் எழவில்லை. ஆனந்தக் கண்ணீர் பொழியும் கண்ணோடே தான் "உன் வரவு நல்வரவு" என்று சொல்லுகிறார்.

நின்றவனை வந்தநெடி
 யோன்அடி பணிந் தான்;
அன்றவனை அன்பொடு
 தழீஇ அழுத கண் ணான்
'நன்று வரவு' என்று,பல
 நல்லுரை பகர்ந் தான்,—
என்றுமுள தென்தமிழ்
 இயம்பி இசை கொண்டான்.

[நின்றவனை: இமைத்து நின்ற அகஸ்திய முனிவரை; வந்த நெடியோன்: வடக்கிலிருந்து வந்த ராமன்: அடி பணித்தான்: காலில் விழுந்து நமஸ்கரித்தான்; அன்று அவனை: அப்பொழுது அந்த ராமனை; பல நல்லுரை பகர்ந்தான்: பல அன்பு ததும்பிய உபசார வார்த்தைகள் பல விதமாய்ச் சொன்னான்; என்றும் உள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்: என்றென்றும் உளதாய் நிற்கும் அழகிய தமிழ்ப் பாடல்களைப் பாடிப் புகழ்பெற்ற அகத்திய முனிவர். குறிப்பு:– தமிழ் என்றால் தமிழ் மொழி அல்ல; தமிழ் இலக்கியம்.]

அகஸ்தியர் உபசாரம் சொல்லி முடித்ததும், குமாரபாக ரிஷிகள் வந்து சேர்ந்தார்கள். மறைபாட வல்லவர்கள் பலவகைப்பட்ட பாடல்களைப் பாடினார்கள். பாடல்களைக் கேட்ட மாத்திரத்தில் ஆனந்தத்தில் மூழ்கியவனாய் அப்படியே நின்றுவிட்டான் ராமன். சிறிது நேரம் கழித்துத்தான் அவனுக்குத் தன் வசம் வந்தது.

வேதியர்கள் வேதமொழி
 வேறுபல கூ ற,
காதல்மிக நின்(று),எழில்
 கமண்டலுவின் நன் னீர்
மாதவர்கள் வீசநெடு
 மாமலர்கள் தூ வ
போதுமணம் நாறுநளிர்
 சோலைசொடு புக் கான்.

[காதல் மிக நின்று: ஆனந்த மேலீட்டினால் அப்படியே நின்று: எழில் கமண்டலுவின் நன்னீர் வீசி: அழகிய கமண்டலத்திலிருந்த தீர்த்தத்தைத் தெளித்து; நெடு மாமலர்கள் தூவ: நீள நீளமான புஷ்பங்களை வழியில் தூவ; போது மணம் நாறு நளிர்: புஷ்ப வாசனையும் குளிர்ச்சியும் கொண்ட; சோலை சொடு புக்கான்: சோலைக்குள் புகுந்தான் ராமன்.

குறிப்பு: தமிழ் நாட்டில் பெரியோர் ஒருவரை வரவேற்கிறதென்றால் இன்றும் தனியான அழகு தான் அது. தண்ணீரை பாங்குறை கொண்டு தெளிப்பதும் பூவைத் தூவுவதும் பாடல் பாடுவதும் சொல்ல கூடியதா? அரிய காட்சி நமக்கு — கம்பருக்கு தான்.]

ரிஷி குமாரர்களோடு கூட சோலையில் அகஸ்திய முனிவர் சோலைக்குள் புகுந்தார். அங்கே மரத்து நிழலில் தானே ராமனுக்கு விருந்து நடந்தது. பிறகு முனிவர் ஆனந்தமாக உட்கார்ந்து கொண்டு ராமனிடம் தன் உணர்ச்சியை வெளியிடுகிறார்:

நீதான் எத்தனைய தவம் எந்தனை வருவதாகச் செய்திருக்கிறாய்! அப்படியெல்லாம் செய்து விட்டல்லவா என் வீட்டுக்கு வந்திருக்கிறாய்!

பொருந்தஅம லன்பொழில்
 அகத்தினிது புக் கான்;
விருந்(து) அவன் அமைத்தபின்
 விரும்பினன் இருந்தான்,

'இருந்தவம் இழைத்தென(து)
இல்லிடையில் வந்(து), என்
அருந்தவம் முடித்தனை
அருட்கரச!' என்றான்.

[பொருந்த அமலன்: அழுக்கற்ற முனிவர்; பொழில் அகத்து புக்கான்: சோலைக்குள் புகுந்தான்: இருந்தவம் இழைத்து: அரிய பெரிய தவமோராம் செய்து; விரும்பினன் இருந்தான்: ஆசையோடு உட்கார்ந்தான்: இருந்தவம் இழைத்து: அரிய தவம் செய்து விட்டு: எனது இல்லிடை வந்து: என் ஆசிரமத்துக்கு வந்த காரணத்தினாலே: என் அருந்தவம் முடித்தனை: நான் செய்ய வேண்டிய தவம் உன்னால் பூர்த்தி அடைந்தது: அருட்கு அரசு: தியாக மூர்த்தியே.


குறிப்பு: ராமனது தியாகத்தை நினைத்த மாத்திரத்தில் நம்முடைய ஆணவம் கொஞ்சம் குழைந்தாலே செய்யும்! அகத்திய முனிவரது ஆணவமும் குழைகிறது; வியப்பில்லை ]

முனிவரது பாராட்டு உள்ளத்திலிருந்து வருகிறது என்பதை, ராமன் உணர்ந்து அளவிலாத களிப்புக்கு உள்ளாகிறான்.

என்றமுனி யைத்தொழு(து)
இராமன் 'இமை யோரும்,—
நின்றதவம் முற்றும்நெடி
யோரின்நெடி யோ ரும்,—
உன்தன்அருள் பெற்றிலர்;யான்
உன் அருள் சுமந் தேன்!
வென்றனென் அனைத்துலகும்!
மேலினி என்?' என் றான்.

[இமையோரும்: தேவர்களும்; நின்ற தவம் முற்றும்: எடுத்துக் கொண்ட அருந் தவத்தை முடித்த: நெடியோரின் நெடியோரும்: மகான்களுக்கு மகான்கள் என்று சொல்லக்கூடியவர்களும்; உன் அருள் பெற்றிலர்: உன்னுடைய அங்கீகாரத்தைப் பெறவில்லை — எனக் கல்லவா அது கிடைத்திருக்கிறது ]

அகத்திய முனிவரது அருளும் புகழ்ச்சியும் ராமனுக்கு எவ்வளவோ ஊக்கத்தைக் கொடுத்து விட்டது. "உலகத்தை யெல்லாம் வென்றாய் விட்டது; அரக்கர்களைத் தொலைத்தாய் விட்டது. வேலையே முடிந்து விட்டது!" என்றெல்லாம் ராமனது உள்ளம் கும்மாளி போடுகிறது. அந்தக் கும்மாளியானது வாய் வார்த்தையிலும் வெளியாகிறது!



# படித்துப் பார்!

## தமிழிசைப் பாடல்கள்

(ஆறாந் தொகுதி)

[ஆசிரியர்: ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியீடு; விலை: ரூ 3—0—0 ]

"தமிழில் நல்ல கீர்த்தனைகள் இல்லை!" என்று யாரோ சொன்னாலும் சொன்னார்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் அவர்களை லேசில் விடமாட்டார்கள் போல் தோன்றுகிறது. "இதோ, தமிழிசைப் பாடல்கள் — 1", "இதோ, தமிழிசைப் பாடல்கள் — 2" என்று தொடர்ந்து வெளியிட்ட வண்ணமாயிருக்கிறார்கள். அந்த வரிசையில் இது ஆறாந் தொகுதி. நந்தனார் சரித்திரத்தை நயந்தீட்டிப் பாடல்களாகப் பண்டிதரின் வரவேற்புக்கும், பாமரரின் அன்புக்கும் பாத்திரமானவர் பாரதியார். அந்த நாளில் தியாகையர் சுந்தரத் தெலுங்கில் ஸ்ரீராமனைப் பாடியதுபோல், தித்திக்கும் தமிழில் சிவனைக் கீர்த்தனைப் பாடியவர் பாரதியார். பாமரத் தமிழில் பாடியதன் காரணமாக, முதலில் தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளுக்குச் சிறப்புப் பாயிரம் பாடிக் கொடுக்கத் தயங்கிய வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களைத் தமது தேமதுரத் தமிழோசையால் மனமுருக வைத்துச் சிறப்புப் பாயிரம் பெற்றவர் பாரதியார். அத்தகையவர் இறவா வரம் பெற்று இன்று இருந்திருந்தால், தமது தமிழிசைக் கீர்த்தனைகளுக்கும் யாராவது ஒரு தெலுங்கிசைக்காரரிடம் சிறப்புப் பாயிரம் பெற்றிருப்பாரோ, என்னவோ!

## ஜனாதிபதி ரூஸ்வெல்ட்

[ஆசிரியர்: கே. என். ஜம்புநாதன். பிரசுரம்: அல்லையன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ. 1—4—0.]

சரியான புஸ்தகத்தைச் சரியான சமயத்தில் தான் வெளியிட்டிருக்கிறார்கள். ரூஸ்வெல்ட் மறைந்ததற்குப் பின்பு தோன்றியதற்கும் மிகப் பொருத்தமாக இருக்கிறது.

"அமெரிக்காவின் கொள்கைகளை நிறைவேற்றும் பொறுப்பு அதன் தலைவர் ரூஸ்வெல்டிடந்தான் இருக்கிறது. ஆகவே, அவர் அச்சு சர்க்காரினால் அடிமைப்பட்ட நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கி, தம்முடன் தோள் கொடுத்துப் போரிடும் நேச நாடுகளின் ஆதரவைப் பெற்று, சமாதானத்தை நிலைநாட்டப் புது வழிகள் கண்டுபிடிக்க வேண்டும். அவரது எதிர்காலப் பொறுப்புகள் மிகவும் அதிகம். சமாதானம் ஏற்பட்ட பின்பு சமாளிக்க வேண்டிய பிரச்னைகளும் அதிகம். எல்லா வற்றையும் சமாளித்து, தமது கனவுகளை நனவாக்கி உலகில் எல்லா நாடுகளிலும் ஜனநாயக நிலை அவர் உழைக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு ஆசிரியர் புத்தகத்தை முடித்திருக்கிறார்.

இத்தகைய பெரிய பொறுப்புகளை மேற்கொள்ளப் பயந்து கொண்டுதானோ என்னவோ, ஜனாதிபதி ரூஸ்வெல்ட் திடீரென்று மறைந்து விட்டார்!

ஒரு தொழிலைச் சொந்தமாக நடத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் போது அநேகர் அடியிற்கண்டபடி சொல்ல வேண்டியிருக்கிறது:—



# "என்னிடம் மட்டும் மூலதனம் இருக்குமானால்"

மூலதனம் பெற்றிராத காரணத்தால் அநுபவமும் திறமையும் பயன்படாமல் இருக்குமானால்—முதலாளியாக இருப்பதற்குப் பணமில்லாத காரணத்தால் திறமைவாய்ந்த ஒருவர் ஊழியக்காரராகவே இருந்துவர நேரிட்டால்—அதுவே ஒரு மனிதனுக்கு ஏற்படக்கூடிய மிக வருத்தமான அநுபவமாகும். ஆனால் முன் யோசனையுடன் வரும் காலத்துக்கெனச் சேர்த்து வைத்திருப்பவருக்கு அத்தகைய அநுபவம் சாதாரணமாய் ஏற்படுவதில்லை. அவருக்குப் போதுமான திரவிய சாதனம் இருப்பதனால், அவர் தம் திறமையும் அநுபவமும் நன்றாய்ப் பயன்படும்படிச் செய்யலாம்.

## நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட் பெறாவிட்டாலும் 4 அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளை வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏதேனுமொரு ஏஜெண்டுகளிடமிருந்தும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இடங்களிலிருந்தும் கிடைக்கும்.

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனி வட்டி 4⅙ சத விகிதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்த வட்டியுடன் பணத்தை மாற்றிக்கொள்ளலாம்.

AAA 119

இன்று முதல் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு நீர் இந்தச் சுகமான நிலைமையில் இருப்பீரா? நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளின் மூலம் சேர்த்துவைக்க இன்றே தீர்மானிப்பீரானால், நீரும் இந்தச் சுகமான நிலைமையில் இருக்கலாம். இந்த ஸெர்டிபிகேட்டுகளில் போட்டுவைத்த உமது பணம் பத்திரமாயிருப்பதுமல்லாமல், அதற்கு நல்ல வட்டியும் கிடைக்கிறது. இப்போதே புத்திசாலித்தனமாயிரும். உமது பிற்காலத்தைப் பத்திரப்படுத்துவீராக.

# சுயநலம்




வேலப்பனின் வேலையே அலாதியானது. மனைவி, மக்களை மறந்து நாள்தோறும் உயிரற்ற இயந்திரங்களிடமோ, உணர்ச்சியற்ற அதிகாரிகளிடமோ உயிரை விட்டுக் கொண்டிருப்பது அவனுடைய வேலையல்ல; அவன் தொழிலுக்கு அவனே வேலைக்காரன்; அவனே சொந்தக்காரன்!

காலையில் எழுந்ததும் வேலப்பன் கடைவீதிக்குச் சென்று சில தேக்குமரத் துண்டுகளையும், பிரம்புக் கத்தைகளையும் வாங்கி வருவான். தேக்குமரத் துண்டுகளை அறுத்து, இழைத்து, 'கூர்' வாங்கி, கட்டில்களாகச் செப்பனிடுவது வேலப்பனின் வேலை; பிரம்புகளையெல்லாம் பிளந்து கட்டில்களுக்குப் 'படுக்கை' பின்னி விடுவது வேலப்பனின் மனைவியான முருகாயியின் வேலை. நடு நடுவே 'எடுபிடி' வேலைகளுக்கெல்லாம் அவர்களுடைய குழந்தைகள்!

வேலை செய்யும் இடமோ அவர்கள் வீட்டை அடுத்த மாந்தோப்பு. 'குக்கூ' குயில்களும், 'கிக்கீ' கிளிகளும் கொஞ்சி விளையாடும் இடம். அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர், வேலப்பன் அங்கு வேலை செய்வதைப் பற்றி ஒன்றுமே சொல்வதில்லை. ஏனெனில், சம்பளம் இல்லாமல் அவன் தன் வேலையுடன், தம் தோட்டத்தையும் காவல் காத்துக் கொண்டிருக்கட்டுமே என்றுதான்!

வேலைக்கு நடுவே ஊர்ப் பேச்சு, உறவினர் பேச்சு, காதல் பேச்சு, ஊடல் பேச்சு எல்லாம் நடக்கும். ஆனால் கைகள் மட்டும் வேலையிலேயே மூழ்கியிருக்கும்.

"பிரம்பைப் பிளப்பாள் முருகாயி!
பின்னி விடுவாள் முருகாயி!
கன்னத்தைக் கிள்ளப் போனால்
கையைத் தள்ளுவாள் முருகாயி!"

என்று இடையில் பாட்டு வேறு பாட ஆரம்பித்து விடுவான் வேலப்பன்.

"மூஞ்சைப் பாருடா, மூஞ்சை!" என்று அவனைப் பழிப்பாள் முருகாயி.

இதைக் கேட்டு வேலப்பனுக்குக் கொஞ்சமாவது கோபம் வரவேண்டுமே! ஊஹூம்—சிரிப்புத்தான் வரும்!

மாலை நேரத்துக்குள் அவர்கள் எப்படியாவது நான்கு கட்டில்கள் செய்து தீர்த்து விடுவார்கள். வேலப்பன் இரண்டைத் தூக்கித் தன் தோள்களில் வைத்துக் கொள்வான்; முருகாயி இரண்டைத் தூக்கித் தன் தோள்களில் வைத்துக் கொள்வாள். வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படி குழந்தைகளுக்கு உத்தரவிட்டு விடுவார்கள். "கட்லு, கட்லு!" என்று கூவிக்கொண்டே தெருத் தெருவாய்ச் செல்வார்கள்.

இருட்டுவதற்குள் நான்கு கட்டில்களும் விற்றுவிடும். லாபத்தைப் பற்றித் திட்டமாகச் சொல்ல முடியாது; ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கிடைக்கும்; இன்னொரு நாளைக்கு நாலு ஐந்து கூடக் கிடைக்கும். இந்த லாபத்தைக் கொண்டு, பங்களா, கார், காவற்காரனோடு வாழாவிட்டாலும் அவர்கள் பசியாமல் வாழ்ந்தார்கள்.

## 2

மாந்தோப்புக்குச் சொந்தக்காரரான மாதவராய முதலியார், வெகு நாளாக வேலப்பனின் வேலையைக் கவனித்து வந்தவர். ஒரு நாள் அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அந்த யோசனையுடன் அவர் வேலப்பனை நெருங்கி, "என்ன, வேலப்பா! தினசரி வெய்யிலில் இப்படி வியர்க்க விறுவிறுக்க வேலை செய்கிறாயே, உனக்குச் சிரமமா யில்லையா?" என்று கேட்டார்.

"சிரமத்தைப் பார்த்தா ஆகுதுங்களா? வயிறுன்னு ஒண்ணு இருக்குதே!" என்றான் வேலப்பன்.

"மவராசாவின் மாந்தோப்பு இருக்கும் போது எங்களை வெய்யில் என்ன சாமி செய்யும்?" என்றாள் முருகாயி.

"என்ன இருந்தாலும் 'மாட்டை மேய்த்தோமா, கோலைப் போட்டோமா?' என்று எங்கேயாவது வேலைக்குச் சென்று நாளைக் கழித்துவிட்டு, மாதம் பிறந்தால் ஐம்பது, அறுபது என்று சம்பளம் வாங்கிக்கொண்டு 'ஹாய்'யாகக் குடித்தனம் பண்ணும் சௌகரியம் வருமா? உன்னுடன் உன் மனைவியும்

கஷ்டப்பட்டு, உங்களுடன் உங்கள் குழந்தைகளும் கஷ்டப்பட்டு, மாலை முழுவதும் தெருத் தெருவாய்ச் சுற்றி நீங்கள் அடையும் சுகம் என்ன? வேணுமானால் முருகாயியை ஒரு மாதம் நிழலில் இருக்கச் சொல்லிப் பாரு; அப்புறம் நீ அவளை விட்டு அந்தண்டை இந்தண்டை போகவே முடியாது!" என்று சொல்லி வியமத்துடன் சிரித்தார் முதலியார்.

இதைக் கேட்ட முருகாயியை வெட்கம் பிடுங்கித் தின்றது. அவள், "போங்க, சாமி!" என்று சொல்லிக் கொண்டே சிரிக்காமல் சிரித்தான்.

"என்ன பண்றது, சாமி! எனக்கு வேறு வேலை ஒண்ணும் தெரியாது! இந்தக் கட்டிலைக் கட்டிக் கொண்டு அழத்தான் தெரியும்!" என்றான் வேலப்பன்.

இப்பொழுதுதான் முதலியாருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. "அப்படியானால் நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா?" என்று ஆரம்பித்தார்.

"உங்கள் சொல்லைக்கூட நான் தட்டுவேனுங்களா?"

"சரி; நீயும் கொஞ்சம் பணம் போடு; நானும் கொஞ்சம் பணம் போடுகிறேன். இரண்டு பேருமாகச் சேர்ந்து இதே இடத்தில் இந்த மாந்தோப்பை அழித்து விட்டு ஒரு அழகான கட்டிடம் கட்டலாம். சம்பளத்துக்கு வேண்டிய ஆட்களை வைத்துக் கொள்ளலாம். கட்டில்களை வேண்டிய அளவு உற்பத்தி செய்யலாம். அவைகளுக்கு அழகான வர்ணப் பூச்சு, கண்ணைக் கவரும் 'வார்னிஷ்' வேலையெல்லாம் செய்து, காட்சி அறையில் வரிசைக் கிரமமாக நிறுத்தி வைக்கலாம். விலையை எவ்வளவு கூட்ட முடியுமோ, அவ்வளவு கூட்டிக் கொள்ளலாம். போட்டிக்கு யாரும் வந்து விடாமல் 'நம்மைப்போல் யாரும் கட்டில்கள் செய்யக்கூடாது!' என்று சர்க்கார் மூலம் உத்தரவாதம் பெற்றுக் கொள்ளலாம். இந்தியா முழுவதும் ஏஜண்டுகளை நியமித்துக் கட்டில்களை அனுப்பி வைக்கலாம். வேண்டியவர்கள் அங்கங்கே வந்து வாங்கிக் கொள்ளட்டும். கிடைக்கும் லாபத்தை இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம். 'கொள்ளைக்குப் போனாலும் கூட்டு உதவாது' என்று நீ சொல்வதாயிருந்தால் இந்த மாந்தோப்பை நீயே வாங்கிக் கொள். கம்பெனியும் நீயே வைத்துக் கொள். லாபத்தையும் நீயே அடைந்து கொள். எப்படியாவது நீ சௌகரியமாயிருந்தால் அதுவே எனக்குப் போதும்!" என்று சொல்லி முதலியார் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். காரணம், 'இவன் நம்முடன் பணம் போடப் போகிறான்?' என்ற நினைப்புத்தான்!

வேலப்பனும் அவர் எதிர்பார்த்த பதிலையே சொன்னான். "என்ன சாமி! கேலி பண்றீங்க! எனக்கு ஏது சாமி அதுக்கெல்லாம் பணம்?" என்றான்.

"அப்படியானால் நானே பணம் போடுகிறேன்; நானே கம்பெனி வைக்கிறேன். உனக்கு ஒரு தொல்லையும் வேண்டாம். நோகாமல் வேலை பார்த்துவிட்டு மாதம் பிறந்தால் முழுசா ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக் கொள். ராஜாமாதிரி இருந்து கொண்டு முருகாயியையும் ராஜாத்தி மாதிரி வைத்துக் கொள். என்ன சொல்கிறாய்?" என்று தாம் வந்த காரியத்தை முடித்தார் முதலியார்.

வேலப்பன் ஒன்றும் யோசனை செய்யவில்லை; யோசனை செய்வதற்கு வேண்டிய அறிவுதான் இந்த ஆங்கில அரசாங்கத்தில் அவனைப் போன்ற ஏழைகளுக்கு ஏது? ஆகவே, முதலியாரின் சுயநலச் சூழ்ச்சி அவனுக்கு வெட்ட வெளிச்சமாகவில்லை.

"அப்படியே ஆகட்டும், சாமி!" என்று 'ஆமாம்' போட்டு விட்டான் அந்த அப்பாவி!

## 3

தேவைக்கு அதிகமான பணத்தை வைத்துக் கொண்டு செய்வது இன்னதென்று தெரியாமல் திகைப்பவர்கள் ஒரு பக்கமும், கஞ்சிக்குக் காசில்லாமல் கண் கலங்குவோர் ஒரு பக்கமும் வாழும் இந்தப் பயிமோசமான நாட்டிலே, பணக்காரன் நினைத்தால் நடக்காதது ஏது?

மறுநாளே மாந்தோப்பு அழிக்கப்பட்டது; அதே இடத்தில் சில நாட்களுக்கெல்லாம் ஒரு அழகான கட்டிடம் எழுந்தது. 'வேலைக்கு ஆள் தேவை' என்று சொன்னதுதான் தாமதம்; 'ஒரு வேளை உணவுக்கு வழி கிடைத்தால் போதும்' என்று எத்தனையோ நாட்களாக ஏங்கித் தவித்த ஏழைக் கூட்டம் — தனிப்பட்ட ஒரே ஒரு மனிதனின் சுகபோக வாழ்விற்காகத் தங்கள் உடலையும் உயிரையும் தத்தம் செய்வதற்கென்றே அந்தக் கருணை நிறைந்த கடவுளால் கோடிக் கணக்கில் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கும் கூட்டம் — 'திமுதிமு'வென்று வந்து சேர்ந்தது.

வேண்டிய ஆட்களை எடுத்துக் கொண்டார்கள்; வேலை தொடங்கி விட்டார்கள்;

கட்டில்கள் கட்டிவிட்டார்கள்; நாடெங்கும் அனுப்பி விட்டார்கள். சர்க்காரும் மாதவராய முதலியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி, "இந்தியாவிலேயே நீங்கள் மட்டும் தான் இம்மாதிரி கட்டில்கள் செய்து ஊரைக் கொள்ளை யடிக்கலாம்; அந்தக் கொள்ளையில் எங்களுக்கும் கொஞ்சம் பங்கு கொடுங்கள். போட்டிக்கு யாராவது வந்தால் எங்களிடம் சட்டம் இருக்கவே இருக்கிறது!" என்று உத்தரவாதம் அளித்து விட்டார்கள்.

ஆமாம்; அந்தக் கட்டில்களுக்கு ஆதி கர்த்தாவான வேலப்பன்கூட இனிமேல் முதலியாரின் அனுமதியின்றி அம்மாதிரி கட்டில்கள் செய்ய முடியாது!

பலன் கிடைத்தது; பணம் குவிந்தது.

நாடெங்கும் கட்டில்களுக்கு ஏகக் கிராக்கி. யுத்த காலத்தில் துருப்புகளுக்கு ஆயிரக் கணக்கில் கட்டில்கள் தேவையாயிருந்தன. 'ஆர்டர்'கள் வந்து குவிந்தன.

"இனிமேல் வெறும் ஆட்களை வைத்துக் கொண்டு 'ஆர்டர்'களைக் கவனிக்க முடியாது" என்று நினைத்த முதலியார், அமெரிக்காவிலிருந்து பல அதிசயமான யந்திரங்களைத் தருவித்தார். இருபது ஆட்கள் செய்யக் கூடிய வேலையை ஒரு யந்திரம் செய்தது. மரத்தை அறுத்தது; இழைத்தது; 'கூர்' வாங்கியது; எல்லாம் செய்தது. பிரம்பைப் பின்னுவதற்கும், பின்னி விடுவதற்குங்கூட யந்திரம்! அவற்றை இயக்குவதற்குப் பழைய ஆட்கள் பிரயோஜனப் படவில்லை; புது ஆட்கள் வெளியூர்களிலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். இதனாலெல்லாம் நாளடைவில் வேலப்பன் இருந்த இடமே தெரியாமல் போனான்.

## 4

ஒரு நாள் வேலப்பன் வீட்டிலிருந்து வேலைக்குக் கிளம்பியபோது, விளையாடிக் கொண்டிருந்த அவன் குழந்தை திடீரென்று மயக்கம் வந்து மூர்ச்சையாகி விட்டது. முருகாயி 'ஓ'வென்று கதற ஆரம்பித்து விட்டாள். வேலப்பன் பதறிப் போய்க் குழந்தையைத் தூக்கித் தோளின்மேல் போட்டுக்கொண்டு டாக்டர் வீட்டுக்கு ஓடினான். சிறிது நேரம் சிகிச்சை செய்த பிறகு குழந்தை மூர்ச்சை தெளிந்து, கண்ணை விழித்துப் பார்த்தது. அப்பொழுது தான் வேலப்பனுக்கும் முருகாயிக்கும் கொஞ்சம் ஆறுதலாயிருந்தது.

இந்தக் களேபரத்தில் வேலப்பன் அன்று வேலைக்குச் செல்லவில்லை.

இதன் காரணமாக, மறுநாள் வேலைக்குச் சென்ற வேலப்பன், மேலதிகாரியால் வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

மேலதிகாரி தனிப்பட்ட முறையில் வேலப்பனை வேலையிலிருந்து நீக்கவில்லை; முதலியாரின் உத்தரவின் பேரில்தான் நீக்கினார்! — அவனை நீக்கியதற்குக் காரணம் அன்று வேலப்பன் வேலைக்கு வாராதது மட்டும் அல்ல; வேறொரு காரணமும் இருந்தது.

அது இதுதான்:

பெருமைக்கு ஆசைப்படாத மனிதன் யார்? ஒருவனும் கிடையாது. அதற்கு வேலப்பன் மட்டும் விதிவிலக்கா என்ன? அவன், "முதலியார் இவ்வளவு பெரிய மனிதரானதற்கு நான்தான் காரணம்" என்று தன்னுடன் வேலை செய்பவர்களிடம் அடிக்கடி சொல்லிக் கொள்வது வழக்கம். இது முதலியாரின் காதுக்கு அடிக்கடி எட்டிக்கொண்டிருந்தது. அவன் அப்படிச் சொல்லிக் கொள்வது முதலியாரின் சுயமரியாதைக்குப் பங்கம் செய்வது போலிருந்தது. ஆனாலும் என்ன செய்வது என்று தெரியாமல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

இதெல்லாம் தெரியாத அப்பாவி வேலப்பன், தன்னை மேலதிகாரி வேலையிலிருந்து நீக்கிவிட்டதைப் பற்றிப் புகார் செய்ய முதலியாரை நெருங்கினான்.

"என்னடா?" என்றார் முதலியார் கம்பீரமாக. வேலப்பன் விஷயத்தைச் சொன்னான் தாழ்மையாக.

"மேலதிகாரி சொன்னால் சொன்னது தான்!" என்றார் முதலியார்.

வேலப்பன் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. "இதற்குத்தானா நான் செய்துகிட்டிருந்த வேலையைக் கூடக் கெடுத்தீங்க?" என்றான் மனம் நொந்து.


அவ்வளவுதான்; மேஜைமேலிருந்த மணி 'டங்' என்று ஒலித்தது.

வாயிலில் உட்கார்ந்து கொண்டிருந்த 'கூர்க்கா' ஓடோடியும் வந்தான்.

அடுத்த நிமிஷத்தில் வேலப்பன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்பட்டான்!

அதே சமயத்தில் அருகிலிருந்த ஓடக்கரையிலிருந்து அமரகவி பாரதியாரின் அருட் கவிதை காற்றில் மிதந்து வந்து அவன் காதில் 'கணீ'ரென்று ஒலித்தது:

"விழலுக்கு நீர் பாய்ச்சி
மாய மாட்டோம் — வெறும்
வீணருக் குழைத்து உடலம்
ஓய மாட்டோம்!"




### பதில் எப்படி ?

பஸில் நெருக்கடியில் இடிபடும் ஒருவர், "என்ன ஐயா! நான் சுப்பிரமணிய ஸ்வாமி மயில் வாகனத்தில் உட்கார்ந்திருக்காப் போலே உட்கார்ந்திருக்கேன், இப்படித் தள்ளுகிறீரே!" என்று கேட்டார்.

பதில்:—நீராவது மயில் வாகனத்தில் உட்கார்ந்திருக்கிறீர்; நான் அந்த மயில் வாகனமாகவே இருக்கிறேனே!

—எம். அம்பலவாணன்.

★

### காதில் விழாது!

ஒருவர் காது வலிக்கிறதென்று டாக்டரிடம் போய், "ஸார்! காது வலி தாங்க முடியவில்லை. ஆளுக்கொரு மருந்து சொல்கிறார்கள்; அப்புறம் காது ஒரே செவிடாய்ப் போய் விட்டால்..." என்று அங்கலாய்த்தார்.

டாக்டர்:—பயப்படாதீர்கள்; நான் ஒரு மருந்து தருகிறேன். அதைப் போட்டுக் கொண்டால் யார் என்ன சொன்னாலும் உங்கள் காதில் விழாது!—து. ரங்கநாதன்.

★

### அதிகப்படி!

நீதிபதி (கைதியைப் பார்த்து)—நீ சதியாலோசனைக்கு உடந்தையா யிருந்ததால் உனக்குத் தக்கத் தண்டனை விதிக்கிறேன்.

கைதி:—அக்கிரமம்! இங்கே நீதி, நியாயம் ஒன்றும் கிடையாதா?

நீதிபதி:—கோர்ட்டை அவமதித்ததற்கு அதிகப்படியாக ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கிறேன்!—ஆ. ஜானகி.

★

### யுத்த அனுபவம்

ஒருவர் (ராணுவத்திலிருந்து திரும்பி வந்த தம் நண்பரிடம்):—ஸார், உங்கள் யுத்த அனுபவங்களைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள், ஸார்!

நண்பர்:—நான் எப்படி ஸார் சொல்லுவேன்? எனக்குக் கலியாணமாகி ஆறு மாதம் தானே ஆகிறது? —கோ. ந. சீனிவாசன்.

### அதற்கும் இருக்கிறது!

வீட்டுக்காரி (தன்னிடம் ஏதாவது வாங்கித்தான் தீர வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கும் வியாபாரியைப் பார்த்து):—போகிறாயா, இல்லையா? போலீஸ்காரனைக் கூப்பிடுவேன்!

வியாபாரி:—இதோ, அதற்கு வேண்டிய ஊதல் தேவையா?

—பி. கே. கிருஷ்ணமூர்த்தி.

★

### சந்தோஷம்!

சிறுமி (அடுத்த வீட்டிற்கு எதிரே தண்டோரா போடுவதைப் பார்த்துவிட்டு):—அப்பா! ஏன் அந்த வீட்டிற்கு எதிரே தண்டோரா போடுகிறார்கள்?

அப்பா:—அந்த வீட்டை ஏலம் போடுகிறார்கள், கண்ணே!

சிறுமி (ஆவலுடன்):—அந்தமாதிரி நம்ம வீட்டையும் எப்பொழுது அப்பா ஏலம் போடுவார்கள்? —டி. ரங்கராஜன்.

★

### நற்சாட்சி!

முதல்வர்:—இரண்டு நாளாக ஜலதோஷம்; ரொம்ப சிரமப்படுகிறேன்!

அடுத்தவர்:—அதற்கென்ன, நான் ஒரு மருந்து கொடுக்கிறேன்.



முதல்வர்:—ரொம்ப நல்ல மருந்தோ?

அடுத்தவர்:—அதைப் பற்றிக் கேட்க வேண்டாம். முப்பதைந்து வருஷமாக நான் ஜலதோஷத்திற்கு அந்த மருந்தைத் தான் உபயோகித்து வருகிறேன்!

—ஆர். ஆர். எஸ். மணியன்.



SIGN OF QUALITY
SIGN OF QUALITY
KCP
THE NATIONS CHOICE
THE NATION'S CHOICE SWEETS
K.C.P. CONFECTIONERY
TONDIARPET - MADRAS
FAS-102




உத்திரவாதமுள்ள ஆபரணங்களுக்கும் வைரங்களுக்கும்
அசல் வெள்ளி சாமான்களுக்கும்
PAR
P.A.ராஜு செட்டியார் & பிரதர்
கடை வீதி. "ஸ்வர்ண மாளிகை" கோயமுத்தூர்.
தந்தி. "ராஜா"..... தபால் பெட்டி. 139. ........போன். 218.A

# CIBOL. சைபால்

(ரிஜிஸ்டர்டு)

முகப்பரு, சேத்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

•

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

**THE SOUTH INDIAN Mfg. Co., MADURA**

சென்னை நகர், ஆந்திர பிரதேசத்திற்கு ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ்,

155, தைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்



# இருமல்



இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும்

உயர்ந்த மருந்து

# ஸிரோலின்

'ரோச்'








**லைப்பாய் பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்!**

இப்பொழுது அவன அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பீடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிறதென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.





**லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.**

**அது ஒரு நல்ல பழக்கம்.**

L 79-63 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED




# உங்கள் மனதிற்குகந்த நறுமணம் தொண்டைக்குக் கெடுதல் செய்யாது

டிலக்ஸ் டெனர் சிகரெட்டின் உண்மை மணத்தை நீங்கள் விரும்புவீர்கள். உயர்ந்ததும், அவசியமானதுமான பண்டங்கள் கிராக்கியாய் விற்கும் இந்நாளில் கூட இந்த சுகம் நிறைந்த சிகரெட்டுகள் நம்மில் பலர் வாங்கக்கூடிய விலைக்கே விற்கப்படுகின்றன. உத்தரவாதமுள்ள 100% வர்ஜீனியா புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்டது டெனர் சிகரெட்டுகள்.

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

**Tenor**

**is truly a de Luxe Cigarette**

JAMES CARLTON LTD. LONDON.



அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறதல்லவா!

... ஆம், களைப்பையும் போக்குகிறது!

... அதுமட்டுமா — ஆனந்தத்தையும் அளிக்கிறது!

தினசரி வினோலியா சோப்பை உபயோகித்து சுகத்தை விரும்பும் மனிதர்களைக் கேளுங்கள். அவர்கள் இது மிகவும் ஆச்சரியமாக சுகமளிக்கும் என்றும், கோடைகாலத்தில் ஒரு சிறந்த வரம் போன்றது என்றும் சொல்லுவார்கள். அதனுடைய வெண்மையான நுரை குளிர்ச்சியையும், களிப்பையும் கொடுக்கிறது. அதனுடைய பிரத்தியேகமான வாசனை குதூகலத்தை அளிக்கிறது. மிகவும் களைப்படைந்த நரம்புகளுக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது.




# வினோலியா
ஒயிட் ரோஸ் ஸோப்பு

PWE. 13-50 TN — VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

# உங்கள் குழந்தையின் ஜீர்ணசக்தி குன்றியிருப்பதாக



## தெரிந்தால்

உடனே கவனம் செலுத்த வேண்டும். அது ஈரல் சம்மந்தமாய் இருக்கலாம். ஒருக்கால் பெருக்கத்திற்கும் காரணமாய் இருக்கலாம்.

**ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்**



அடிக்கடி ஜுரம் ஏற்படுதல், மலச்சிக்கல், அதிக மலப்போக்கு, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக சோர்ந்திருத்தல், அடிக்கடி சிறு சிணுத்தல்.

**உடன் கவனிப்பு காப்பாற்றும்**

வியாதி குறிகள் கண்ட உடனே ஜம்மியின் லிவர் க்யூர் கொடுங்கள். அப்படிச் செய்வது உங்கள் கவலையை நீக்கி, பணச்செலவைக் குறைத்து, வியாதியை முற்ற விடாமல் செய்து, பின்னிட்டு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்கும்.

ஜம்மியின்
# லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குறைகட்டுக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன

**ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்**
மைலாபூர்—மதராஸ்.

பிராஞ்சுகள்:— பம்பாய், கல்கத்தா, டில்லி, திருச்சிராப்பள்ளி, பெங்களூர், கும்பகோணம்.

A. 53 TM

# தி இந்தியன் பாங்க்
## லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ்:
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள்:

| | |
|---|---|
| எஸ்பிளனேட், | திருவல்லிக்கேணி |
| மவுண்டு ரோடு, | மயிலாப்பூர், |
| தியாகராய நகர், | புரசவாக்கம். |

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

| | | |
|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 33,61,250 |
| ரிஸர்வ் நிதி | ரூ. | 33,62,500 |

டெபாஸிட்டுகள் ரூ. 11½ கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.

N. P. B.


# ஈறுகளில் ரத்தம் கசியக் கூடாது

—முன் ஜாக்கிரதையாக இருங்கள்!



உடனே கவனிக்க வேண்டும் — ரத்தம் கசியும் ஈறுகள் பற் சொத்தைக்கு ஆரம்பம். கிப்ஸ் "எஸ். ஆர்." டூத் பேஸ்ட் ஈறு வியாதிகளையும் பயோரியா இன்ஜிவிடிஸ் முதலிய பல் வியாதிகளையும் தடுத்து கட்டுப் படுத்துகிறது. இவ் வியாதிகள் பற்களை நாசமாக்குவதுடன் அவைகளின் சீழ்க்கசிவால் தேக ஆரோக்யத்தையே பாழாக்கும். அதில் உள்ள சோடியம் ரிஸினோலியேட் ஈறு உபாதைகளுக்கு பல் வைத்தியர்களின் சிகிச்சை. பற்களையும் ஈறுகளையும் ஆரோக்யமாக வைத்திருக்க கிப்ஸ் "எஸ். ஆர்." வழக்கமாக உபயோகியுங்கள்.

## *Gibbs* "S.R." TOOTHPASTE




GSR. 17-33 TM

D. & W. GIBBS LTD., LONDON, ENGLAND

# சுத்தம்

## ப்ரொட்யூசர் T.V.S. காஸ் பிளான்டின் முக்கிய அம்சம்




காஸ் பிளான்ட் அமைககப் பட்ட உங்கள் பஸ் அல்லது லாரி சுகமாக ஒட காஸ் சுத்த மாய் இருப்பது அவசியம். T. V. S. ப்ரொட்யூசர் காஸ் பிளான்ட் மற்றெல்லா தயாரிப் பையும்விட மிக சுத்தமான காஸை கொடுக்கிறது.

7000-க்கு மேற் பட்ட பிளான்டு கள் இந்தியாவில் விற்பனை ஆகி இருக்கின்றன.

T.V.S

**T.V. சுந்தரம் அய்யங்கார்**

அண் சன்ஸ், லிமிடெட்.


**மதுரை & மதருஸ்**

TVSK-15-TM

# கல்கி



ALKI ஜூன் 17, 1945 4 அணா



## குலதனம்

போலக் கேச தனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவது போல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக் கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்திசெய்யுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

**விலை அணா 12**

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர் :

**தென் இந்திய ரஸாயன சாலை**

**ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.**




சென்ற 23-5-1945-ல் சேலம் ஜவுளி வியாபாரம், ஸ்ரீ A. நாகேந்திரன் குமாரர் சிரஞ்சீவி N. சுந்தரராஜனுக்கும், சேலம், பட்டு வியாபாரம் ஸ்ரீ பி. என். கிருஷ்ணய்யர் குமாரி சௌபாக்யவதி யசோதாவுக்கும் விவாகம் நடந்தேறியது. காலையில் முகூர்த்தத்திற்கும் மாலையில் வரவேற்புக்கும் நகரின் பிரபலஸ்தர்களும் கொளும்பு, யாழ்ப்பாணத்தின் பிரபல வியாபாரிகளும் விஜயம் செய்திருந்தார்கள். தம்பதிகளுக்கு அநேக பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் வழங்கப்பட்டன. வரவேற்பின் போது ஸ்ரீ செம்மை வைத்தியநாத பாகவதரின் பாட்டுக் கச்சேரி தகுந்த பக்க வாத்தியங்களுடன் நடந்தது.

இரண்டு தினங்களில் தம்பதிகள் அழகாகவும் மின்சார விளக்குகளாலும் அன்னத்தைப்போல் அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். விவாகம் உயர்ந்த முறையில் விமரிசையாக நடத்தப்பட்டது.

அவளைச் சுற்றி ஐந்து வீரர்கள்!

ஒவ்வொருவரும் உலகத்தையே
கிடுகிடுக்க அடிக்கக் கூடியவர்கள்!



ஆனால் ஐயோ! மனிதனுடைய மிருக பலம் அவளை அவமானத்துக்குள்ளாக்கிய சமயத்தில் அவர்களது உதவியைக் கோரி எதிர்பார்த்த போது, என்ன செய்வதென்றே தெரியாமல் விழித்தார்கள்.

ஏன்?

இந்தக் கேள்விக்குப் பதிலை

**நியூ ஹன்ஸ்**

தயாரித்த

# திரௌபதி

(ஒரு ராணி சூதாடியின் கையில் சிக்கிய கதை)

என்ற படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

★

சுசிலா ராணி, சந்திர மோகன், மஸார் கான்,
டேவிட், ராம்கோபால்

முதலியோர் நடிப்பது

தயாரிப்பு, டைரக்ஷன்: பாபுராவ் படேல்

---


இப்பொழுது மூன்றாவது
மகத்தான வாரம்!

**பிரபாத் - பெங்களூர்**

அடுத்த படமாக
எதிர்பாருங்கள்!

**ஸ்டார் - சென்னை**

Regd No. M. 4392




SRVS LTD

ரயிலிலிருந்து, பாஸஞ்சர், லக்கேஜுகள் பார்ஸல்கள், கூட்ஸ்கள் முதலிய சாமான்களை எடுத்து வரவோ, அல்லது வெளியூர்களுக்கு அனுப்பவோ நீங்கள் சிரமப்பட வேண்டாம்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

# ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

மதராஸ் & தென் மராட்டா ரயில்வேக்கு லோகல் டெலிவரி கண்டிராக்டர்கள்

202-3, மவுண்டு ரோடு :: போன் : 8536 :: மதராஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.